# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20

சுடர் 32 கதிர் 308 புரட்டாதி 14ஆம் நாள் சனிக்கிழமை 30 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048 பக்கங்கள்: 28+4


வித்தியா கொலையாளி தப்பிக்க உதவிய

## அமைச்சர் விஜயகலாவுக்கு எதிராக வடக்கில் சுவரொட்டி

யாழ்ப்பாணம், செப். 30

"குற்றவாளிகள் தப்பிக்க உதவிய வர்களும் தண்டிக்கப்பட வேண்டும். வித்தியாவுக்கு முழுமையான நீதி வேண்டும்" என்று வலியுறுத்தி வடக்கின் பல பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டப்பட்டுள்ளன. அதில் மகளிர், சிறுவர் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், சட்டத்தரணி வி.ரி. தமிழ்மாறன் மற்றும் சுவிஸ்குமார் ஆகியோரின் ஒளிப்படங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தீவக மக்களும், யாழ். பெண்கள் அமைப்புகளும் என உரிமை கோரப்பட்டுள்ள அந்தச் சுவரொட்டிகளில் இன்று சனிக்கிழமை கடையடைப்பை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட் >> 25



# சமஷ்டி என்கிற எண்ணத்துக்கு இடைக்கால அறிக்கையில் இடமேயில்லை

இப்படி அடித்துக்கூறுகிறார் மைத்திரி

கூட்டமைப்புக்கு நேர் மாறான கருத்து

கொழும்பு, செப்ரெம்பர். 30

புதிய அரசமைப்புத் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையில் கூட்டாட்சி (சமஷ்டி) எண்ணக்கரு எந்த விதத்திலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். இடைக்கால அறிக்கை கூட்டாட்சிப் பண்புகளைக் கொண்டிருக்கிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறிவரும் நிலையில் அரச தலைவரின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளது.

மங்கள தேரருக்கு மகாநாயக்கர் நியமன பத்திரத்தை வழங்கும் நிகழ்வு, அம்பாறை கெமுனுபுர பௌத்த நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றி >> 25



குற்றவாளியைத் தப்பிக்க வைக்க உதவிய பின்னரும் ஓர் அமைச்சர் பதவி விலகாமல் இருக்கிறார்

## இலங்கையில்தான் இப்படி!

*சரவணபவன் எம்.பி. ஆதங்கத்தோடு சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், செப்.30

ஒரு பாடசாலை மாணவி வன்கொடுமையின் பின்னர் கொல்லப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் தப்பிக்க அமைச்சர் ஒருவர் உதவினார் என்று நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டிய பின்னரும் அந்த அமைச்சர் பதவியில் தொடர்வது இலங்கையில் மட்டுமே சாத்தியம். இதுவே மேற்கு நாடு ஒன்றில் நடந்திருந்தால் இந்நேரம் அந்த அமைச்சர் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டிருப்பார்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். வல்வெட்டித்துறை, மானாங்கணை திருமகள் முன்பள்ளித் >> 25

உள்ளூராட்சித் தேர்தல் ஆசனப் பங்கீடு

## தமிழரசுவுடன் ரெலோ செவ்வாயன்று பேச்சு

யாழ்ப்பாணம், செப். 30

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான இடஒதுக்கீடு தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உயர் பீடத்துடன் பேசுவதற்கு ரெலோ அமைப்பு தீர்மானித்திருந்தது. தமிழ் அரசுக் கட்சியிடம் அதற்கான கோரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(வ-5.31)

## கொலையாளிகளின் ஒரு சதமேனும்வேண்டாம்

வித்தியாவின் தாயாரின் அறச்சீற்றம்

யாழ்ப்பாணம், செப். 30

"எனது மகளைச் சீரழித்துக் கொன்ற குற்றவாளிகளின் ஒரு சதம்கூட (இழப்பீடு) எமக்கு வேண்டாம். அவர்கள் தந்தாலும் நாம் அதனைப் பெற்றுக்கொள்ளப் போவ தில்லை"

இவ்வாறு புங்குடுதீவு மாணவி வித்தியாவின் தாயாரான சிவலோகநாதன் சரஸ்வதி தெரிவித்தார்.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியாவை கடத்திச் சென்று கொடூரமாகப் படுகொலை செய்த 7 பேருக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றத் தீர்ப்பாயம் தூக்குத் தண்டனையும் 30 வருடங்கள் கடூழியச் >> 25

## சு.கவின் மூத்த தலைகளுடன் மைத்திரி இரகசியச் சந்திப்பு

யாழ்ப்பாணம், செப். 30

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கும் இடையே இரகசிய சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

நீர்கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதியொன்றில் சுமார் மூன்று மணிநேரத்துக்கும் மேல் இடம்பெற்றுள்ள இந்தச் சந்திப்பில் கட்சி உறுப்பினர்களை தனித்தனியே சந்தித்து அரச தலைவர் மைத்திரிபால பேச்சு நடத்தியுள்ளார்.

கூட்டு அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறவேண்டும் என்று கட்சியிலுள்ள >> 25

போர் பாதித்த சிறுவர்களுக்கு நீதிகேட்டு

## யாழ்ப்பாண நகரில் நாளை கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.30

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கையெழுத்துப் போராட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக இடம்பெறவுள்ளது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற போரில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் அதனால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரியே இந்தப் போராட்டம் இடம்பெறுகிறது. போராட்டத்துக்கான அழைப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி >> 25

## 33 மாத வனவாசத்தின் பின் இன்று யாழ். வருகிறார் பசில்

மகிந்த கட்சிக்கு ஆள்பிடிக்கவும் ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், செப். 30

33 மாதகால வனவாசத்தின் பின்னர் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான பசில் ராஜபக்ச யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரவுள்ளார். மகிந்த ஆதரவு பொதுஜன பெரமுன கட்சிக்கு ஆள் சேர்க்கும் நடவடிக்கைக்காகவே அவரது வடக்குப் பயணம் அமைந்துள்ளதா >> 25



## ராஜபக்சக்களை முதன்மைப்படுத்தும் யோசனை சிறிசேனவால் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 30

பொதுஜன ஐக்கிய முன்னணி ஊடாக ராஜபக்ச குடும்பத்தினருக்கு முக்கியத்துவமளிக்கும் யோசனையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியை சமல் ராஜபக்சவுக்கு வழங்கி, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கதிரைச் சின்னத்தில் களமிறங்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட திட்டமே நிராகரிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூ >> 25

உள்நாட்டு விசாரணைகள் ஊடாக படை அதிகாரிகளுக்குத் தண்டனை

## சிப்பாய் எவரையேனும் தண்டிக்க இடமளியேன்

சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, செப். 30

"போர்க்குற்ற விசாரணைகள் என்ற பெயரில் பன்னாட்டு நீதிமன்றில் நிற்பதற்கு நான் ஒரு போதும் தயாரில்லை. வெளிநாடுகளுக்குப் பதில் கூறவும் விரும்பவுமில்லை. எனது கட்டளைக்கேற்ப போர் செய்த எவரையும் தண்டிக்க இடமளிக்கமாட்டேன். ஆனால் உள்நாட்டு விசாரணை ஒன்றின் மூலம் போரின் >> 25

## கேப்பாபிலவுக் காணி பற்றிப் பேச சம்பந்தனுக்கு மைத்திரி அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 30

கேப்பாபிலவு காணி விவகாரம் தொடர்பில் முக்கிய பேச்சு நடத்துவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.


அடுத்த வாரம் இந்தச் சந்திப்பு இடம்பெறக் கூடும் என்று அரச தலைவர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவில் இராணுவத்தினர் வசம் உள்ள 302 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்கள் கடந்த 215 நாள்களாகத் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

காணி விடுவிப்புத் தொடர்பில் கடந்த மே மாதம் படைத்தரப்பினருடன் சந்திப்பு நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக அரச தலைவருடன், கூட்டமைப்பின் தலைவர் நடத்திய பேச்சுக்களின்போது ஜூன் மாத இறுதிக்குள் காணிகள் விடுவிக்கப்படும் என்ற உறுதி வழங்கப்பட்டது. அது பின்னர் நிறைவேற்றப்படவில்லை.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனால், >> 25



என்றைக்காவது ஒரு நாள் படிகள் எல்லாம் முடியும் என்றுதான் கனவு காண்கிறோம்.

## தீர்வுக்கான இலக்கை அடைய இன்னும் பல படிகள் உள்ளன

மாவை எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 30

"வெளிவந்திருப்பது இடைக்கால அறிக்கை. இறுதி. அறிக்கை அல்ல. இடைக்கால அறிக்கையிலிருந்து எமது இலக்கை அடைவதற்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு இன்னும் பலபடிகள் முன்னேறிச் செல்ல வேண்டியிருக்கின்றது. எடுத்த எடுப்பிலேயே இடைக்கால அறிக்கையை நிராகரிப்பது பொருத்தமற்ற நடவடிக்கையாகவே இருக்கும்" >> 25

## விபத்தில் ஒருவர் சாவு ஒருவர் காயம்

அம்பாறை, செப்.30

அம்பாறை, கரங்காவப் பிரதேசத்தில் நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் விமலவிர திஸாநாயக்க பயணித்த வாகனத்துடன், மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவருப் படுகாயமடைந்த நிலையில் அம்பாறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும், மோட்டார் சைக்கிள் சாரதி சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், விபத்துத் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-ரி4)

## விபத்தில் இருவர் காயம்



யாழ்ப்பாணம், செப்.30

யாழ்ப்பாணம், கோண்டாவிலில் நேற்றுக் காலை நடந்த விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

காங்கேசன்துறை வீதியில், உப்புமடம் சந்திக்கு அருகில் விபத்து நடந்துள்ளது. அங்குள்ள வளைவில் திரும்ப முற்பட்டபோது மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து கால்வாய்க்குள் பாய்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இருவரும் மருத்துவனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-ரி2)

## லொறியுடன் மோதியது பஸ் மாணவர் உட்பட 18 பேர் காயம்

கொழும்பு, செப்.30

புத்தளம், சிலாபம் வீதி, முந்தலில் நடந்த விபத்தில் மாணவர்கள் உட்பட 18 பேர் காயமடைந்தனர். வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியின் மீது பஸ் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் விபத்து நடந்துள்ளது. நொச்சியாகம, ராஜங்கனயவைச் சேர்ந்த பாடசாலை ஒன்றின் மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்றபோதே விபத்து நடந்துள்ளது. மாணவர்களும், பெற்றோர்களுமே விபத்தில் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். விபத்தில் சிக்கியவர்களில் சிலர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (ந-ரி4)

## மகிந்தவைத் தலைவராக்கும் மனு நேற்று தள்ளுபடியானது

கொழும்பு, செப்.30

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு வழங்க வேண்டும் என்று கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்று நேற்றுத் தள்ளுபடி செய்தது.

பொரலஸ்கமுவ நகர சபையின் முன்னாள் நகராதிபதி உட்பட இருவர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவரே கட்சித் தலைவர் பதவி வகிக்க முடியும் என்று மனுதாரர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

வழக்கில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த சில்வா மற்றும் முன்னாள் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் அடிப்படை எதிர்ப்பை முன்வைத்திருந்தனர்.

வழக்கின் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அரச தலைவரின் உரிமைகளுக்கு அமைய வழக்கைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது எனத் கூறியுள்ளனர். அதையடுத்து மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. (ந)



# அறிவுக் களஞ்சியமாக மாறும் ஆயுதக் களஞ்சியம்

## நெல்லியடி மத்திய கல்லூரியில் கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

நெல்லியடி, செப்.30

இன்று அடிக்கல் நடப்பட்ட இடத்தில் 1987ஆம் ஆண்டு பாதுகாப்புத் தரப்பினரின் ஓர் ஆயுதக் களஞ்சியம் இருந்தது. அதுமட்டுமல்லாது புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி முதன்முதலில் இங்கு தனது உயிரை இழந்தார் என்றும் தெரியவருகின்றது. ஆயுதக் களஞ்சியங்கள் இப்போது அறிவுக் களஞ்சியங்களாக மாற்றப்படுகின்றன. இவ்வாறு தெரிவித்தார் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஸ்ணன்.

நெல்லியடி மத்திய கல்லூரியின் மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும், தொழில்நுட்ப பீடத் திறப்பு நிகழ்வும் நேற்று நடைபெற்றன. அவற்றில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்தியவர்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் தமது கோரிக்கைகளை ஜனநாயக வழியில் வென்றெடுப்பதற்கு முயற்சித்துச் கொண்டுள்ளனர். ஆயுதக் களஞ்சியங்கள் இருந்த இடத்தில் அறிவுக் களஞ்சியங்கள் திறக்கப்படுகின்றன. கல்விக் கண்ணைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இவற்றுக்கெல்லாம் காரணம் நாட்டில் தற்போது நிலவும் சமாதானமே.



மியன்மாரில் இருந்து அகதிகளாக வந்துள்ள ரோஹிங்கியா அகதிகளைத் தற்காலிகமாக வடக்கு மாகாணத்தில் தங்க வைத்துப் பராமரிப்பதற்கு வடக்கு மாகாண சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதை நான் வரவேற்கின்றேன்.

அகதிகளாக எங்களை நாடி வந்தவர்களை எந்த ஒரு காரணம் கொண்டும் தாக்குதல் நடத்த முற்படுவது மனிதாபிமானமற்ற ஒரு செயலாகும்.

அதுவும் பௌத்த மதத்தைத் பின்பற்றுகின்ற ஒரு நாடு என்ற அடிப்படையில் நாம் அவர்கள் மீது கருணை காட்ட வேண்டும். மதத் துறவிகள் அவர்களுக்கு எதிராக போராட்டம் செய்வது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும்.

எங்களுடைய நாட்டில் போர் நிலவிய போது உலகின் பல்வேறு நாடுகளுக்குத் தமிழர்கள் புலம் பெயர்ந்து அகதிகளாகச் சென்றார்கள்.

அந்த நேரத்தில் எங்களுக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் எங்களுடைய நிலமை இன்று என்னவாகியிருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வடக்கு மாகாண சபை தற்காலிகமாக அவர்களைப் பொறுப்பெடுத்துப் பராமரிப்பதற்குத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றியமையானது வரவேற்கக்கூடியது. நானும் அவர்களுடன் இணைந்து கொள்கின்றேன் - என்றார்.

நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சுகிர்தன், தர்மலிங்கம், சிவாஜிலிங்கம், வலய கல்வி பணிப்பாளர் நந்தகுமார், விவசாயம் , மீன்பிடி மாகாணச் செயலாளர் சி.சத்தியசீலன், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-10)

## விறகு வெட்டச் சென்ற பெண் சடலமாக மீட்பு

ஹற்றன், செப்.30

ஹற்றன், குயின்ஸ்பெரி, கொலப்பத்தனைத் தோட்டப் பகுதியில் பெண் ஒருவரின் உடல் நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குயின்ஸ்பெரி தோட்டத்தைச் சேர்ந்த 58 வயதான ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் நேற்றுக் காலை விறகு வெட்டுவதற்குச் சென்றார் என்றும், நாவலப்பிட்டி, தலவாக்கலை பிரதான வீதியின் ஓரத்திலுள்ள தேயிலைத் தோட்டப் பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-10,41)

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை, செப்.30

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

தோப்பூர், செல்வநகரைச் சேர்ந்த 59 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சேருவில விகாரைக்குப் பின்புறமாகவுள்ள காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்றபோதே யானையின் தாக்குதலுக்கு இலக்கானார் என்று கூறப்படுகின்றது.

உயிரிழந்த நிலையில் அவர் காட்டிலிருந்து மீட்கப்பட்டார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ந-10,45)

## பேருந்து மோ.சைக்கிள் விபத்தில் இருவர் காயம்



கொழும்பு, செப்.30

நேற்று ஹற்றன், சாஞ்சிமலை பிரதான வீதியில் பேருந்தும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. அதில் இருவர் படுகாயமடைந்தனர்.

சாஞ்சிமலையில் இருந்து ஹற்றன் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தும், எதிர்த்திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளுமே விபத்துக்குள்ளாகின. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களே படுகாயமடைந்தனர். அவர்கள் கண்டி டிக்கோயா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துத் தொடர்பில் ஹற்றன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-ரி4)

# 182 தொண்டராசிரியர்களுக்கு ஓரிரு வாரங்களில் நியமனம்

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

வடமராட்சி, செப்.30
வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் 182பேருக்கு ஓரிரு வாரங்களில் நியமனங்கள் வழங்கப்படும். எஞ்சிய 300க்கு அதிகமானவர்களுக்குப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு சேவையில் உள்வாங்கப்படுவர்.
இவ்வாறு தெரிவித்தார் கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன்.
நெல்லியடி மகா வித்தியாலயத்தின் தொழில்நுட்ப பீட கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 164 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் கோரி விண்ணப்பிக்கப்பட்டது. அவர்களில் பலர் வேறு பணிகளுக்குச் சென்றுள்ளனர். ஆசிரிய நியமனத்துக்கான எஞ்சிய 528 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் பலருக்கு சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் தொண்டர் ஆசிரியராகப் பணியாற்றிய விவரம் இல்லை. போர், இடப்பெயர்வால் இந்தச் சான்றிதழ்கள் தவறி விட்டன. 182 பேர் மட்டுமே நியமனத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஓரிரு வாரங்களில் நியமனம் வழங்கப்படும்.
எஞ்சிய 300க்கும் அதிகமானவர்ளை விடமுடியாது. அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்று அமைச்சு மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. அவர்களை எப்படியாவது உள்வாங்க வேண்டும் என்ற நோக்கில் அவர்கள் சித்தியடையக் கூடிய வகையில் போட்டிப் பரீட்சையை நடத்தி நியமனம் வழங்க ஏற்பாடாகியுள்ளது - என்றார்.
(ற-173)



## அரச தலைவர் வருகைக்கான முன்னேற்பாடுகள் மும்முரம்

கிளிநொச்சி, செப்.30
அரச தலைவர் எதிர்வரும் 14ஆம் திகதி கிளிநொச்சி வரவுள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பான கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.
கிளிநொச்சி வரும் அரச தலைவர் புதிதாக அமைக்கப்பட் டுள்ள சிறப்புப் பொருளாதார மத்திய நிலையத்தைத் திறக்கவுள்ளார்.
அதற்கான முன்னேற்பாடு தொடர்பான கலந்துரையாடலே கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் பீ.ஹரிசனின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.
கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாணசபை உறுப்பினர்கள், மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட மேலதிகச் செயலர் சத்தியசீலன், முப்படை அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
(ற-ரி4)

## விபத்தில் ஒருவர் காயம்

வவுனியா, செப்.30
வவுனியா, வேப்பங்குளத்தில் நேற்று நடந்த விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.
சைக்கிளும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகின. குருமன்காட்டில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிள், வேப்பங்குளம் 7ஆம் ஒழுங்கை நோக்கி சைக்கிளில் செல்ல முற்பட்ட முதியவரை மோதியது என்று கூறப்படுகின்றது.
காயமடைந்தவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பொலிஸார் விபத்துத் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
(ற)

## வித்தியா போன்று பாதித்தோர் அனைவருக்கும் தீர்வுவேண்டும்

### உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, செப்.30
வித்தியா படுகொலை சம்பவத்துக்கான நீதிமன்றத்தின் தீர்ப்பு மனமகிழ்வைத் தருகின்றது. இது போன்று பாதிக்கப்பட்ட பலருடைய விசாரணைகள் நீதிமன்றங்களில் கிடப்பில் போடப்பட்டுள்ளன. அவற்றுக்கும் உரிய தீர்வு காணப்படவேண்டும்.
இவ்வாறு உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் செயலாளர் சண்மலி குணசிங்க தெரிவித்தார்
கொழும்பு மருதானையில் அமைந்துள்ள சமூகம் மற்றும் சமய கேந்திர நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையிலுமான அரசின் வரவு செலவு திட்டத்தில் சிறுவர், மகளிருக்கான நிதி ஒதுக்கீடு குறைந்து வருவதைக் காண முடிகின்றது. நாட்டின் எதிர்கால சிற்பிகள் விடயத்தில் அரசு மிகுந்த அக்கறை கொண்டு திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.
வீதிகளில் அல்லது பொது இடங்களில் சிகரெட் புகைப்பது தடுக்கப்பட்டிருந்தாலும் கஞ்சா, ஹெரொயின் போன்ற போதைப்பொருள் பாவனையில் அதிகளவான இளைஞர்கள் ஈடுபடுகின்றனர். இவர்களுள் பாடசாலை செல்லும் மாணவர்களும் அங்கம் வகிப்பது கவலையைத் தருகின்றது.
நாட்டின் நாலாபுறங்களிலும் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. 12 வயது தொடக்கம் 14 வயது வரையிலான மாணவர்களே இவ்வாறு பாடசாலை இடைவிலக்லை மேற்கொள்கின்றனர். கொழும்பை விட கிராமப் புறங்களிலும் மலையகத்திலும் இதன் வீதம் அதிகரித்து காணப்படுகின்றது.
வித்தியா படுகொலை சம்பவத்துக்கான சட்ட மன்றத்தின் தீர்ப்பானது மனமகிழ்வைத் தருகின்ற போதும் இது போன்று பாதிக்கப்பட்ட பலரின் விசாரணைகள் நீதிமன்றங்களில் கிடப்பில் போடப்பட்டுள்ளன. அவற்றுக்கும் உரிய தீர்வு கண்டு குற்றவாளிகள் சட்டத்துக்கு முன் கொண்டுவரப்பட்டுத் தண்டனை வழங்கப்பட வேண்டும். நீதிமன்ற செயற்பாடுகள் மந்தகதியில் இடம்பெறுவது தவிர்க்கப்பட வேண்டும்.
உடல், உள ரீதியதாக பாதிக்கப்பட் சிறுவர், மகளிரை ஆற்றுப்படுத்தி உரிய தீர்ப்பைப் பெற்றுக்கொடுக்க தென்னாபிரிக்காவின் சிறுவர்களுக்கான நீதிமன்றம் இயங்குகின்றது. அது தீர்க்கமான முறையில் சிறுவர் மகளிரை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. அது போன்ற நீதிமன்றங்கள் இலங்கையிலும் அமைக்கப்பட்டு, அதனூடாக நமது சிறுவர் மகளிரது உடல், உள ரீதியான தேவைகள் வழங்கப்பட வேண்டும் - என்றார்.
(ற-31)



## புதிய ஆசிரியர் விடுதி திறப்பு

மட்டக்களப்பு, செப்.30
மட்டக்களப்பு, பூநொச்சி முனை அல் இக்ரா பாடசாலைக்கான புதிய ஆசிரியர் விடுதி நேற்றுத் திறக்கப்பட்டது.
கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் நசீர் அஹமட்டின் நிதி ஒதுக்கீட்டில் இந்த ஆசிரியர் விடுதி அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் உட்பட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களும், அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
(ற-ரி4)

## அரசியல் நோக்கத்துக்காகவே ரொஹிங்யர் மீது தாக்குதல்

### சமூக செயற்பாட்டாளர் சமன் ரத்னபிரிய கருத்து

கொழும்பு, செப்.30
அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே தஞ்சம் கோரிய ரொஹிங்ய மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று சிவில் சமூக செயற்பாட்டாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் 2008ஆம் ஆண்டு முதல் மியான்மார் அகதிகள் இலங்கையில் தஞ்சமடைந்தனர். அந்தக் காலப் பகுதியில் அவர்களை வெளியேற்றுவதற்கு எவரும் முன்வரவில்லை.
முன்னாள் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலர் மீதான அச்சத்தாலேயே அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை.
இப்போது அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார்.
(ற)

## சில் துணி கைதிகளுக்காக சேர்த்த நிதி ராணுவத்துக்கு

### மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.30
சில் துணி சிறைக் கைதிகளைப் பாதுகாக்கும் நிதியத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி இராணுவத்தினரின் நலனோம்புத் திட்டங்களுக்கு வழங்கப்படும் என்று பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.
"சில் துணி சிறைக் கைதிகளைப் பாதுகாக்கும் நிதியம்" ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள சம்புத்தத்வ ஜயந்தியில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முன்னாள் அரச தலைவரின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு நீதிமன்றத்தால் நட்டஈடு மற்றும் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. அந்த நிதியை பிச்சைப் பாத்திரம் ஏந்தியாவது நாம் பெற்றுக் கொடுப்போம் என்று தெரிவித்திருந்தோம்.
இந்த வேலைத்திட்டத்தை கடந்த 15 ஆம் திகதி ஆரம்பித்து நாடு தழுவிய ரீதியில் நிதி சேகரித்தோம். இரண்டு லட்சத்து 87 ஆயிரத்து 828 ரூபாவை சேகரித்துள்ளோம். இது மக்களின் நிதியாகும். இந்த நிதியை நாம் வைத்துக்கொள்ள முடியாது.
இது தொடர்பில் லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோரிடம் பேச்சு நடத்தினோம். அவர்கள் நிதியை சமூக சேவையில் செலவிடுமாறு வேண்டிக்கொண்டனர். இராணுவத்தினரின் நலனோம்பு விடயங்களில் இந்தநிதியைச் செலவிடவுள்ளோம்.
அங்கவீனமுற்ற இராணுவத்தினர் அண்மையில் தமது கோரிக்கைகளைத் தெரிவிப்பதற்கு அரசதலைவர் செயலகத்துக்குச் செல்ல முற்பட்டனர். அவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர். அப்போது போரின்போது தனது ஒரு கண்பார்வையை இழந்த நிஷாந்த மகிராஜ் என்பவர் இந்தத் தாக்குதலின் போது தனது அடுத்த கண் பார்வையையும் இழக்க வேண்டி ஏற்பட்டது. அவரின் சிகிச்சைக்கும் நிதியுதவி வழங்கவுள்ளோம்.
போரின் போது ஊனமுற்ற மற்றுமொரு இராணுவ வீரரான சிந்தக்க சம்பத் என்பவர் பலகையிலான வீட்டில் வசித்து வருகிறார். அவருக்கு வீடு அமைத்துக் கொடுப்பதற்கும் நிதியை வழங்கவுள்ளோம். என்றார்.
(ற-31)

## பதவி விலகினார் ரங்க கலன்சூரிய

கொழும்பு.செப்.30
அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் ரங்க கலன்சூரிய தனது பதவியிலிருந்து விலகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
பொருளாதார நெருக்கடியே தாம் பதவி விலகுவதற்கு காரணம் என அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர்ரங்ககலன்சூரிய தனது முகப்புத்தகப் பதிவில் தெரிவித்துள்ளார்.
ரங்க கலன்சூரிய தனது பதவி விலகல் கடிதத்தை நேற்று அரசதலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார்.
தனிப்பட்ட காரணங்களுக்காகவே தான் பதவி விலகுகிறார் எனத் தெரிவித்தார். (ற-ரி4)

## கரடி தாக்கியதில் 2 பேர் படுகாயம்

கொழும்பு.செப்.30
ஹம்பாந்தோட்டை பகுதியிலுள்ள யால தேசிய வனப்பகுதியில் கரடி தாக்கியதில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.
காட்டுக்குத் தேன் எடுக்கச் சென்றிருந்த இளைஞர்களை கரடி தாக்கியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர்கள் ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். கதிர்காமத்தைச் சேர்ந்த இளைஞர்களே கரடி தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ரி-4)

# மும்மொழித் தேசியப் பாடசாலையை அமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பம்

### அடிக்கல் நட்டார் மைத்திரி

கொழும்பு. செப்.30
தேசிய நல்லிணக்கத்தை உறுதி செய்யும் பல்லின, மும்மொழி தேசியபாடசாலையின்தேவையை நிறைவு செய்வதற்காக, இந்திய அரசின் உதவியுடன் பொலன்னறுவை, கதுருவெலவில் அமைக்கப்படும் மும்மொழி தேசியப் பாடசாலைக்கான பணிகள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வின் தலைமையில் நேற்று முற்பகல் ஆரம்பிக்கப்பட்டது.



இந்தப் பாடசாலையின் மூலம் அனுராதபுரம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களின் பல்லின மும்மொழி பாடசாலையின் தேவையைப் நிறைவு செய்தல், ஆங்கில மொழிமூல கல்வியைப் பரவலாக்குதல் மற்றும் போட்டித் தன்மையுடைய சமூகப் பொருளாதார உலகுக்குப் பொருத்தமான தேசிய நல்லிணக்கம் மற்றும் சமூக ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் உயர் அறிவுடைய முழுமையான மாணவ தலைமுறையை உருவாக்குவதே அரச தலைவரின் எண்ணக்கருவாகும்.
6 ஆம் வகுப்பில் இருந்து உயர்தரம் வரையான வகுப்புக்கள் நடத்தப்படவுள்ள இந்தப்பாடசாலை, அனைத்து வசதிகளுடனும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதற் கட்டமாக 6, 7ஆம் வகுப்புகளுக்கான இருமாடிக் கட்டடம், மாணவர் விடுதி, நிர்வாகக் கட்டடம், சுகாதார வசதிகள், ஆய்வுகூடம், ஆசிரியர் விடுதிகள் என அமைக்கப்படவுள்ளன.
நினைவுப் பலகையை திறந்து வைத்த அரச தலைவர், பாடசாலை வரைபடத்தையும் பரிசீலித்தார்.
இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், இந்தியத் தூதுவர் தரஞ்ஜித் சிங் சிந்து உள்ளிட்டவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற)





வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியலாயத்தில் நேற்றுக் காலை10மணியளவில் பாடசாலை அதிபர் தே. ஸ்ரீதரன் தலைமையில் வாணி விழா நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் வவுனியா தெற்கு வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் யூட் பரதமாதன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-10)

## கல்முனையில் செயலமர்வு

அம்பாறை.செப்.30
சமாதானமும், சமூகப்பணியும் அமைப்பின் அனுசரணையுடன் இயங்கும் கல்முனை நல்லிணக்க மன்றத்தின் செயலமர்வு, நேற்று இடம்பெற்றது.
அம்பாறை - கல்முனை இக்பால் சன சமூக நிலைய மண்டபத்தில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.
இதில் கல்முனைப் பிரதேச நல்லிணக்கம் தொடர்பான எதிர்கால செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்டதுடன், நல்லிணக்கத்துக்குத் தடையாக உள்ள விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வுக்குப் பிரதான வளவாளராக சமாதானமும், சமூகப் பணியும் அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.எம். சமீர் மற்றும் ஏனைய, வளவாளர்களாக நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ரீ.ராஜேந்திரன், நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் கே.பி.ரோகினி ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-ரி2)

## வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று வாணி விழா நிகழ்வுகள்

வவுனியா. செப்.30
வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்றுவாணிவிழாநடைபெற்றது.
அங்குள்ள பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, பிரதேச செயலாளர் கா.உதயராசா தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.
வரவேற்பு நடனம், பாரதரத்தனா நாட்டியப்பள்ளி மாணவி கார்த்திகா சந்திரகாசனின் மயில் நடனமும், பண்டாரிக்குளம் மாணவர் வழங்கிய இசைச் சங்கம நிகழ்வும் மற்றும் அகிலாண்டேஸ்வரி நுண்கலைக் கல்லூரி மாணவிகளின் இசை நிகழ்வு என்பன நடைபெற்றது.
பண்பாடும் மொழியும் என்னும் தலைப்பில் செல்வன் எஸ்.றிணோஜின் எழுச்சி உரையும் கலாபூசணம் சிவசோதியின் இசைக் கச்சேரி நிகழ்வு இடம்பெற்றன.
வவுனியா பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட இலக்கிய கலைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
நிகழ்வில் கலாபூசணம் தமிழ்மணி அகளங்கள், தமிழ் விருட்சத்தின் தலைவர் எஸ். சந்திரகுமார், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், இ.நித்தியானந்தன் பிரதேச கலாசார உத்தியோகத்தர், ஆர்.பிரதீபன் மற்றும் மாணவர்கள், கலைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற)



## அடைக்கலம் புகுந்தவர்களை கல்லால் அடிப்பது தர்மமல்ல

### உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அறிவுரை

கொழும்பு ,செப்.30
அடைக்கலம் தேடி வந்தவர்களை கல்லால் அடித்து பௌத்த தர்மத்துக்கு இழுக்கை ஏற்படுத்தவேண்டாம். இவ்வாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.
பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களங்களில் கடமை புரியும் நிர்வாக உத்தியோகத்தர்களை வலுவூட்டும் நிகழ்வு நேற்று கண்டி மலைநாட்டு கலை, கலாசார சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.
அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
"மியன்மாரில் இருந்து இதற்கு முன்பும் பல சந்தர்ப்பங்களில் அகதிகளாகப் பலர் வந்து சேர்ந்தனர். பன்னாட்டுச்சட்டங்களின்படிஅவர்களுக்கானநடவடிக்கைகள்எடுக்கப்பட்டன. அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல. தமது உயிரைக் காப்பாற்றப் பயணம் செய்யும் போது நடுக் கடலில் வைத்துக்கைதுசெய்யப்பட்டவர்கள். ஐக்கிய நாடுகள் சபைத் தீர்மானங்களுக்கு அமைய அவர்களை வேறு ஒரு நாட்டுக்கு அனுப்பப்பட உள்ள நிலையில் இவ்வாறு கலகம் விளைவிப்பது வரவேற்கத்தக்கதல்ல.
இது பன்னாட்டு ரீதியாக எமது நாட்டுக்கு களங்கம் விளைவிக்கும் செயலாகும். இவ்வாறான செயல்களை அனுமதிக்க முடியாது.
பௌத்தர்களான நாம் எமது வீடுகளுக்கு பாம்பு அல்லது ஏதேனும் விஷ ஜந்து வந்து விட்டால் அது எமக்கு ஒத்து வராத ஒன்று எனக் கருதும் போது அதைக்கூட அதற்குரிய இடத்துக்கு அனுப்பி விடுவோம். அதுதான் மனிதாபிமானம். அதே விதம் கடலில் தத்தளித்தவர்கள் எந்த இனமானாலும் அவர்கள் உயிருக்குப் போராடும் போது அவர்களுக்கு அபயம் அளிப்பதே மரபு.
அதனை மீறி நாம் நடந்து கொண்டால் எம்மை எத்தகைய ஒரு பிறவியாக பன்னாடு கருதும். எனவே இப்படியான விடயங்களுக்கு யாரும் ஆதரவு அளிக்க வேண்டாம்" என்றார். (ற-ரி2)



முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை வாணி விழா நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் பூசை வழிபாடுகளும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற)

# திருமலை. மாவட்ட செயலகத்தில் நவராத்திரி விழா

திருகோணமலை, செப்.30
திருகோணமலை மாவட்ட செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நவராத்திரி விழா நிகழ்வுகள் மாவட்டச்செயலர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார வின் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.
இலங்கையிலே பல மதங்கள் காணப்படுவதாகவும் அவரவர் தத்தம் மதங்களை பின்பற்றுவதுடன் இலங்கையர் என்றடிப்படையில் நாம் அனைவரும் நல்லிணக்கமாக செயற்படுவதன் மூலம் நாட்டை சுபீட்சமான நிலைக்கு இட்டுச்செல்ல முடியும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் வேறுபாடுகளுடன் நடக்கக் கூடாது. வேறுபாடுகளுடன் கூடிய சிந்தனை காரணமாகவே நமது நாடு பல ஆண்டுகளாகப் பல்வேறு பிரச்சினைகளை முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போதைய அரச நல்லிணக்கச் செயற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்குடன் பல வேலைத்திட்டங்களை மேற்கொள்கின்றது என்று மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் கலந்துகொண்டு நடனமாடிய மாணவிகளுக்கு அரச அதிபர் பரிசில்கள் வழங்கினார்.
கலை கலாசார நிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிகச் செயலர் எஸ்.அருள்ராசா, மாவட்ட மேலதிக செயலர் (காணி) கே.அருந்தவராஜா, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே.பரமேஸ்வரன், மாவட்ட உதவி செயலர் என்.பிரதீபன், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கே.டி.நெரன்ஜன், பதவி நிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள். (ற)

# சாவகச்சேரியில் சேதனப் பசளை இனந்தெரியாதோரால் தீக்கிரை

சாவகச்சேரி, செப்.30
சாவகச்சேரிநகரசபையால் தயாரிக்கப்பட்ட பெருமளவு சேதனப் பசளை நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது.
திண்மக்கழிவைப் பசளையாக்கும் திட்டத்தில் தயாரிக்கப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பசளையே இவ்வாறு நாசமாக்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி நகரசபையினர் வட்டாரங்களில் திண்மக்கழிவுப் பொருள்களைச் சேகரித்தனர். அவற்றைத் தரம்பிரித்து, உக்கக்கூடிய குப்பைகளை பசளையாக்கினர். இவற்றைக் காலபோக நெற்செய்கையாளர்களுக்கு விற்பதற்கென குவியல் குவியலாக வைத்திருந்தனர்.
அவ்வாறு வைக்கப்பட்டிருந்த பசளைக் குவியல்களே விசமிகளால் எரியூட்டப்பட்டன.
கண்ணாடிப்பிட்டித் திடலில் சேதனப்பசளை தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இங்கு தயாரிக்கப்படும் சேதனப் பசளையைக் கொள்வனவு செய்வதில் விவசாயிகள் ஆர்வமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-9)



## கூட்டுறவு வியாபாரம் உயர்வதற்கு நவராத்திரி வழிபாடு வழிவகுக்கும் சங்கத்தின் தலைவர் நம்பிக்கை

கூட்டுறவு வியாபார நடவடிக்கைகள் மேலும் விருத்தி அடைவதற்கு நவராத்திரி வழிபாடு வழிவகுக்கும் என்று யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்.எஸ்.சத்தியநாதன் தெரிவித்தார்.
சங்கத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாணிவிழாவுக்குத் தலைமைதாங்கி உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.
"கல்வியாலும், வீரத்தாலும், செல்வத்தாலும் எமது மக்கள் உயரவேண்டும். இதற்காகவே நவராத்திரி புண்ணிய காலத்தில் துர்க்கை, லக்சுமி, சரஸ்வதி போன்ற தெய்வங்களை வேண்டி நிற்கிறோம்.
மனிதப் பண்புகளை நாம் மதிக்கவேண்டும். கடந்த காலங்களில் எமது மக்கள் பல்வேறுபட்ட சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தார்கள்.
பத்து நாள்கள் நவராத்திரி விழாவை நாம் சிறப்பாகக் கொண்டாடுவது காலத்தின் கட்டாயம். புதிய சிந்தனைகள், கோட்பாடுகள், தத்துவங்கள் யாவற்றையும் கொண்ட கூட்டுறவுச் சமுதாயம் உருவாக இந்த நவராத்திரிப் பெருவிழா வழியமைக்கும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ய-17)

## பணியிடங்களில் பெண்கள் மீதான வன்முறைகளைத் தடுக்கக் குழு

யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்தில் அமைப்பு

யாழ்ப்பாணம், செப். 30
யாழ்ப்பாணக் குடாநாட்டில் பணியிடங்களில் இடம்பெறும் பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்க யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் செயற்குழு ஒன்று நேற்று அமைக்கப்பட்டது.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்தச் செயற்குழு அமைக்கப்பட்டது.
யாழ்ப்பாணத்தில் பாடசாலைகள், அரச, தனியார் அலுவலகங்கள், வியாபார, நிதி நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்து வருவதாகவும் அவை தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கும் வகையிலேயே இந்தச் செயற்குழு அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
யாழ்.மாவட்டச் செயலர் தலைமையில் தொழில் புலமையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோரை அடக்கியதாக இந்தச் செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் பணிகளை முன்னெடுக்க மாவட்டச் செயலகத்தில் தனியான ஓர் அலுவலகம் நாளைமறுதினம் திங்கட்கிழமை திறந்துவைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
தொழில் புரியும் இடங்களில் பெண்கள் மீது இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் அறிவிக்க 021 2214444 என்ற தொலைபேசி இலக்கமும் அந்தச் செயற்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-37)



யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வாணி விழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் என்.எஸ்.சத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சங்கப் பணியாளர்கள், இயக்குனர் சபை உறுப்பினர்கள், கிளைக்குழுக்களின் பொதுச்சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (451)

## 35 பவுண் நகை திருட்டு ஊழியர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 30
வீட்டில் நகை மற்றும் பணத்தை வைப்பதற்கு அஞ்சியவர், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பாதுகாப்பாக வைத்திருந்தபோது அவற்றை இழந்தார்என்றுமுறையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்திக்கு அன்மையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்றது.
35 பவுண் தங்க நகைகளும், 15 ஆயிரம் ரூபா பணமும் இவ்வாறு திருடப்பட்டுள்ளன என்று அவற்றின் உரிமையாளர் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நிலையத்தில் தொழில் புரியும் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணை இடம்பெறுவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மகாஜன மாணவிகள் இருவருக்கு நாடகத்துறையில் தேசிய விருது

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த இரு மாணவிகள் நாடகத்துறையில் தேசிய விருது பெற்றுள்ளனர்.
கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றம் நடத்திய தேசியரீதியிலான நாடகப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியால் ஆற்றுகை செய்யப்பட்ட "எங்கே போய் முடியுமோ" என்ற நாடகம் மூன்றாம் இடத்தைப் பெற்றது.
எனினும் நாடகத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவிகள் இருவருக்கு விருது கிடைத்தது. சிறந்த நடிகைக்கான விருதை மாணவி மோகன்தாஸ் எமிலிசியாவும் சிறந்த நாடகப் பிரதியாக்கத்துக்கான விருதை மாணவி வரதராசா கம்சியாவும் பெற்றனர். (வ-422)

## அனலைதீவு கடற்கரையில் பனம்விதைகள்

யாழ்ப்பாணம், செப்.30
கடலரிப்பைத் தடுத்து, அழிந்துபோகும் பனைவளத்தை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் அனலைதீவு மக்கள் ஈடுபட்டுள்ளனர். இதற்கு முன்னுதாரணமாக கிராம மக்கள் ஒன்றிணைந்து கடந்த புதன்கிழமை புளியந்தீவு கடற்கரையில் பனம் விதைகளை நட்டனர். கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வயதுவேறுபாடின்றி இதில் கலந்துகொண்டு பனம் விதைகளை நட்டுவைத்துள்ளனர். (ய-9)

## நாகர்கோவில் நாகதம்பிரான் அலங்காரத் திருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 30
வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.
தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா இடம்பெறும். ஆலயத்தின் முக்கிய திருவிழாக்களான பாம்புத்திருவிழா 5 ஆம் திகதி வியாழக்கிழமையும், வரலாற்றுச் சிறப்பை எடுத்துக்கூறும் கப்பல் திருவிழா 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், வேட்டைத்திருவிழா 7ஆம்திகதி சனிக்கிழமையும், சப்பறத் திருவிழா 8ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறும்.
சமுத்திரத்தீர்த்தத் திருவிழா 9ஆம்திகதி திங்கட்கிழமை யும், கேணித்தீர்த்தத் திருவிழா 10ஆம்திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெற்று திருவிழா நிறைவடையும். வருடாந்த உற்சவத்தை நாகதம்பிரான் உபாசகர் சிவஸ்ரீ க.சண்முகநாதக் குருக்கள் நடத்திவைப்பார்.
சித்த திருவிழாக்களான கப்பல் திருவிழா சமுத்திரத் தீர்த்த திருவிழா ஆகியவற்றுக்கு வரும் பக்தர்களின் வசதிகருதி தனியார் சிற்றூர்திகள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.
கோயில் சுற்றாடலில் சுகாதாரம், குடிதண்ணீர் வசதிகளை பருத்தித்துறை பிரதேசசபை மேற்கொள்ளும். மருதங்கேணி பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் மேற்கொள்வர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-173)

## புனிததிரேசாள் ஆலய பெருந் திருதிருவிழா

யாழ்ப்பாணம், செப்.30
யாழ்.நக்காசாலை புனித திரேசாள் ஆலய வருடாந்த திருவிழா நடைபெற்று வருகின்றது.
இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும் என்று பங்குத்தந்தை அருட்பணி றெஜி இராஜேஸ்வரன் அடிகள் தெரிவித்துள்ளார். (ய-135)

## வித்தியாரம்பம்

சாவகச்சேரி, செப்.30
சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் வாணி விழாவும், வித்தியாரம்பமும் இன்றுகாலை 8 மணிதொடக்கம் நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

## நல்லூரில் வாணிவிழா

நல்லூர் இளைங்கலைஞர் மன்றம் நடத்தும் வாணி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் சட்டநாதர் சாலையில் அமைந்துள்ள மன்றத்தில் நடைபெறும். நிகழ்வில் சிறப்பு இசைக்கச்சேரிகள் இடம்பெறும். இன்று மாலை 3.30 மணிக்கு விஜயதசமிப் பூசை இடம்பெறும். தொடர்ந்து வயலின், மிருதங்கம், வீணை, பரதநாட்டியம் ஆகிய வகுப்புகளில் புதிதாக இணைபவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று மன்ற நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ய)

## செபமாலை அன்னை வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், செப்.30
கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நடைபெற்று வருகின்றது.
இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழா இடம்பெறும்.
நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி அமலமரித்தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்பணி எட்வின் வசந்தராஜா அடிகள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து அன்னையின் தேர்ப்பவனியும், திருச்சொரூப ஆசீரும் இடம்பெறுமென பங்குத் தந்தை அருட்பணி ஏ. கிறிஸ்தோப்பர் அடிகள் அறிவித்துள்ளார். (ய-135)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 50 | 60 | 60 |
| கத்தரி | 140 | 180 | 140 | 180 | 180 |
| மரவள்ளி | 80 | 70 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 70 | 100 | 120 | 100 | 140 |
| பாகல் | 220 | 400 | 300 | 400 | 200 |
| க.கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 140 | 140 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 250 | 180 | 250 | 240 | 180 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 40 |
| தக்காளி | 120 | 160 | 220 | 140 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 60 | 60 |
| கீரை | 50 | 30 | 40 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 30 | 30 |
| ப.மிளகாய் | 280 | 280 | 260 | 180 | 240 |
| புடோல் | 100 | 100 | 90 | 80 | 100 |
| கோவா | 140 | 100 | 80 | 80 | 80 |
| வெண்டி | 80 | 70 | 80 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 160 | 200 |
| லீக்ஸ் | 150 | 140 | 140 | 140 | 120 |
| தேங்காய் | 70 | 90 | 80 | 90 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 120 | 120 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 280 | 250 | 200 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 15 |
| கறிமிளகாய் | 140 | 120 | 170 | 160 | 160 |
| கரட் | 200 | 180 | 100 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 160 | 200 | 250 | 200 | 140 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 900 | 800 |
| நண்டு | 400 | 400 | 450 | 300 |
| கணவாய் | 700 | 600 | 700 | 800 |
| பாரை | 500 | 500 | 600 | 700 |
| சுறா | 400 | 700 | 800 | 800 |
| சீலா | 400 | 400 | 400 | 500 |
| விளை | 500 | 400 | 500 | 600 |
| முரல் | 400 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 300 | 300 |
| ஓரா | 300 | 300 | 450 | 300 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 150 | 400 | 200 |
| சூடை | 100 | 100 | 160 | 100 |
| ஒட்டி | 150 | 200 | 200 | 250 |
| திருக்கை | 300 | 200 | 400 | 300 |
| மதனம் | 200 | 150 | 200 | 300 |
| கொய் | 100 | 70 | 80 | 50 |
| பாலை | 150 | 200 | 400 | 300 |
| வாளை | 100 | 200 | 300 | 250 |

# கோழிக் கறிக்குள் ஹெரோயின் யாழ். சிறைச்சாலைக்குள் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 14
விளக்கமறியல் கைதிக்கு ஹெரோயின் போதைப்பொருளை கடத்த முற்பட்ட நபரொருவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணச்சிறைச்சாலை உத்தியோகத்தர்களினால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
விளக்கமறியலில் இருக்கும் கைதியொருவரைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவர் போத்தல் ஒன்றினுள் கோழிக்கறி கொண்டு சென்றுள்ளார். அந்த கோழிக் கறி மீது சந்தேகம் கொண்ட சிறைக்காவலர்கள் அதனை பரிசோதித்துள்ளனர். அப்போது கோழிக்கறியின் குழம்பினுள்ளே சிறு சிறு பொலித்தீன் உறைகளுக்குள் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் அடங்கிய சிறிய பொதிகள் பல கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
அவர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரிடமிருந்து 02 கிராம் 500 மில்லி கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட சந்தேக நபரை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று யாழ்ப்பாண நீதவான் மன்றில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.
இதேவேளை கடந்த மாதமும் சிறைக் கைதியொருவரை பார்ப்பதற்காக சென்ற பெண்ணொருவர் கொண்டு சென்ற பிட்டுக்குள்ளிருந்து கஞ்சாகைப்பற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (4,103)

# மூன்று நூல்களின் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.30
மட்டக்களப்பு கல்லடி, வேலூர் வியாகரண சிரோன்மணி ஸ்வர்க்கீயஸ்ரீ பூரண. தியாகாஜக் குருக்களின் வருஷாப்திய தின ஞாபகாரத்தமாக நாளை யாழ்ப்பாணம் கொக்குவிலில் மூன்று நூல்கள் வெளியிடப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறை விரிவுரையாளர் கலாநிதி. ம.பாலகைலாசநாத சர்மா தலைமையில் கொக்குவில் வடக்கு பூதவராயர் ஆலய மண்டபத்தில் பி.ப 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டது. (21)

## உரும்பிராய் கிழக்கில் முதியோர்தின விழா

யாழ்ப்பாணம், செப்.30
உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையம், புலம்பெயர் மண்ணின் மைந்தர்களின் அனுசரணையுடன் நடத்தும் முதியோர், சிறுவர், ஆசிரியர்தின விழாக்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காந்திஜி முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது. நிலையத் தலைவர் தே. றமணதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் கலந்து கொள்வார். (ய)

# கஞ்சா பீடி புகைத்த மூவர் கைது

யாழ்ப்பாணம், செப்.30
ஆள்கள் இல்லாத வீடு ஒன்றினுள் கஞ்சா கலந்து பீடி புகைத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று நண்பகல் 12 மணிக்கு வல்வெட்டித்துறைப் பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். அந்தப் பகுதியில் உள்ள ஆள்கள் இல்லாத வீட்டில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக கிடைக்கப் பெற்ற தகவலின் படி குறித்த வீடு சோதனையிடப்பட்டது. இதன் போது அதனுள் நால்வர் இருந்தது அவதானிக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் பொலிஸாரைக்கண்டதும் தப்பித்துச் சென்றார். ஏனைய மூவரும் சோதனையிடப்பட்டனர். அவர்கள் கஞ்சா கலந்த பீடி புகைத்தது கண்டறியப்பட்டது. இதனை அடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 50 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டது எனத் தெரிவித்த பொலிஸார் கைது செய்யப்பட்டவர்கள் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என மேலும் தெரிவித்தனர். (21,26)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 30
புதிய நாவலர் கல்வி நிலையத்தின் 29ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2மணிக்கு நிறுவனத்தின் முதன்மை மண்டபத்தில், நிலைய இயக்குநர் எஸ்.குணாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலக உதவி மாவட்டச்செயலர் ரி.ஜெயசீலனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மைதிலி தேவராஜாவும், மதிப்புறு விருந்தினராக வேலணை மகா வித்தியாலய உப அதிபர் எஸ். சிவசங்கரும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-5)

# அளவெட்டி ஆலயங்களில் விஜயதசமி சிறப்பு பூசை

அளவெட்டி, செப்.30
அளவெட்டி அருள்மிகு கும்ப ழாவளை விநாயகர் ஆலயத்தில் இன்றுகாலை 7.30 மணிக்கு விஜயதசமி சிறப்பு பூசைகள் இடம்பெறும். காலை.10 மணிக்கு வாழைவெட்டும் நிகழ்வு இடம்பெறும். மாலை நிகழ்வாக அளவெட்டி தவளகிரி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் விஜயதசமி பூசைகள் பி.ப.3 மணிக்கு மணிக்கு ஆரம்பமாகும். மாலை 4 மணிக்கு முத்துமாரி அம்பாள் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலயத்துக்கு வலம் வருவார். மாலை 5 மணிக்கு அம்பாள் கன்னி வாழையை வெட்டி மகுடாசூரன் வதம் செய்வார்.
அங்கு இடம்பெறும் பூசைகளை முடித்து மீண்டும் அளவெட்டி தவளகிரி முத்துமாரி அம்பாள் ஆலய இருப்பிடத்திற்கு செல்வார். அளவெட்டி முதன்மை சாலை, அம்பனை சாலை ஊடாக மங்கல வாத்திய இசையுடன் வீதியுலா இடம்பெறும். (ய-36)

## பழையமாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.30
இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்ட மும், புதிய நிர்வாகத்தெரிவும் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும் என்று அதிபர் அறிவித்துள்ளார். (ய)




ஆண்களுக்கான கண்ணாடி வகைகள் சில சந்தைக்கு அறிமுக மாகியுள்ளன. இவை 650 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# விருது வழங்கலும், கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், செப்.30
ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கிலம், சிங்களம், கணினிப்பாட நெறிகளைப் பூர்த்தி முழுமைப்படுத்திய வர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கலும், சமூக சேவை செய்தவர்களுக்கான கௌரவிப்பும் நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.
கல்லூரியின் அதிபர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் குடிசார் எந்திரவியல் பிரிவின் தலைவர் கலாநிதி சிவகுமார் சிவசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி விமலாதேவி விமலநாதனும் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தனும் கலந்து கொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

# இரணைமடு குளத்துக்கு அருகே 3 ஆழ்துளைக் கிணறுகள்

## தடையை மீறி அமைப்பதாகக் குற்றச்சாட்டு



கிளிநொச்சி, செப்.30

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்படும் எந்தவொரு ஆழ்துளைக்கிணறுகளும் நீர்வள ஆய்வுச் சபையின் அனுமதியின்றி அமைக்கமுடியாது என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும் அதனைமீறி இரணை மடுக்குளத்தை அண்டிய பகுதிகளில் மூன்று பெரும் அழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன என்று இரணைமடு விவசாய சம்மேளனச்செயலாளர் சிவமோகன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரணைமடுக் குளத்தை அண்டிய பகுதிகளில் இன்று (நேற்றுமுன்தினம்) பெரும் இயந்திரம் மூலமாக மூன்று ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் இதேபோன்று மூன்று கிணறுகள்முழங்காவில்பிரதேசத்தில் அமைக்கப்பட்டன. அவற்றில் பரீட்சார்த்தமாகத் தண்ணீர் எடுத்த வேளையில் அயலில் உள்ள பல கிணறுகளில் நீர் வற்றுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் குறித்த விடயம் விவசாயிகளால் உடனடியாகவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதனை ஆராய்ந்த ஒருங்கிணைப்புக்குழுவின்இணைத் தலைமைகள் முழங்காவில் கிணற்றில் தண்ணீர் பெறக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவை விடுத்திருந்தனர். அதேநேரம் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

> மாவட்டத்தின் எந்தப் பாகத்திலும் தண்ணீர்வள ஆய்வுச்சபையின் அறிக்கை பெறப்படாது ஆழ்துளைக்கிணறுகளை அமைக்கமுடியாது என்றும், மாறாக அமைக்கப்படும் கிணறுகள் உடனடியாக மூடப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதாவது, மாவட்டத்தின் எந்தப்பாகத்திலும் தண்ணீர்வள ஆய்வுச்சபையின் அறிக்கை பெறப்படாது ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கமுடியாது என்றும், மாறாக அமைக்கப்படும் கிணறுகள் உடனடியாக மூடப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. நிலத்தடிநீரைப்பேணிப்பாதுகாக்கும் நோக்கிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதாகக் குறிப்பிடப்பட்டது.

இந்தநிலையில் இரணைமடுக்குளத்தை அண்டிய பகுதியில் பெரிய ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பதனால் குளத்தின் தண்ணீர் பெருமளவில் உறிஞ்சப்படலாம் என்றே அஞ்சுகின்றோம்.

எனவே, இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ய-101)

# ஒப்பந்தவேலைகளின் நிபந்தனைகளை தமிழ்மொழியில் வழங்குமாறு கோரிக்கை

அச்சுவேலி, செப். 30

ஒப்பந்தவேலைகளின் கட்டுமான நிபந்தனைகளை (கணியச் சிட்டை) தமிழ் மொழியில் வழங்கவேண்டும் என்று வலி. கிழக்கு கிராம, மகளிர் அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாகிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலி. கிழக்கு பிரதேசசெயலகத்தில் நடைபெற்ற இரண்டு நாள் செயலமர்வில் கலந்துகொண்டபோதே அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர். ஒப்பந்த வேலைகள் தொடர்பான விரிவுரையின்போது மேற்படி கோரிக்கை ஏகமனதாக வலியுறுத்தப்பட்டது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஒப்பந்தவேலைகள் தொடர்பான வழங்கல்களை ஆங்கிலமொழியில் மட்டும் மேற்கொள்வது மொழிக் கொள்கைக்கு முரணானது.

ஒப்பந்த வேலைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் மற்றும் ஒப்பந்தக்காரர் சிக்கல்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

ஆங்கிலமொழியில் இருந்து தமிழ்மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்வதற்கும் கணிசமான செலவை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே தமிழ்மொழியில் செயல்முறைப்படுத்துவதற்கு வடக்குமாகாணசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கோரிக்கை நியாயமானது. ஏற்றுக் கொள்ளத்தக்கது என அதிகாரிகள் தெரிவித்தனர். மேற்படி கோரிக்கை உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் கூறினர். (ய-11)

# தென்மராட்சித் தேங்காய்க்கு வெளிநாடுகளில் கிராக்கி

## சந்தைகளில் நாளாந்தம் 5000 கொள்வனவு

சாவகச்சேரி, செப்.30

தென்மராட்சி பிரதேச தேங்காய்களுக்கு வெளிநாடுகளில் மவுசு ஏற்பட்டுள்ளது. தினமும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தேங்காய்கள் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் சந்தைகளிலிருந்து வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் உற்பத்தியாளர்கள் இலாபமடைகின்றனர். ஆனால் உள்ளூர் மக்கள் சந்தைகளில் அதிகரித்த விலைக்கு தேங்காய்களை கொள்வனவு செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

சந்தைகளில் ஒரு தேங்காய் 50 ரூபா தொடக்கம் 90 ரூபாவரை விற்கப்படுகிறது. சந்தைகளுக்குத் தேங்காய்கள் கொண்டுவரப்படும்போது, வெளிநாடுகளுக்கு தேங்காய் ஏற்றுமதி செய்பவர்கள் நிற்பார்கள். அவர்கள் அதிகவிலை பேசி தேங்காய்களைக் கொள்வனவு செய்கின்றனர். கொள்வனவு செய்யப்படும் தேங்காய்களை மூடைகளாகக்கட்டி பாரஊர்திகளில் கொண்டு செல்கின்றனர். இதனால் உள்ளூர் வியாபாரிகள் தேங்காய்களைக் கொள்வனவு செய்யமுடியாத நிலையில் உள்ளனர்.

முன்னர் தென்பகுதியில் இருந்தே வெளிநாடுகளுக்குத் தேங்காய்கள் அனுப்பப்பட்டன. தற்போது அங்கும் விலை அதிகரித்துள்ளது. இதனால் வடக்கின் தேங்காய்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நிலையில் தற்போது தென்மராட்சிப் பிரதேச தேங்காய்களுக்கு வெளிநாடுகளில் அதிக மவுசு காணப்படுகின்றது. இந்தத் தேங்காய்களை அதிகம் அனுப்பி வைக்குமாறு வெளிநாடுகளில் உள்ளவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

வருடாந்தம் மே மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரை தேங்காயின் விலை வீழ்ச்சியடையும். பருவமழை பெய்யத் தொடங்கியதும் மெல்லமெல்ல விலை அதிகரிக்கும். ஒக்ரோபர் மாதமளவில் 40 ரூபாவரை விற்பனை செய்யப்படும். இந்தவருடம் பருவக்காற்றுவீசத்தொடங்கியதும் பெருமளவு தேங்காய்கள் சந்தைக்குக் கொண்டுவரப்பட்டன. எனினும் வெளிநாடுகளுக்கு அனுப்ப தேங்காய்கள் கொள்வனவு செய்யப்படுவதால் கடந்த ஆறுமாதங்களாக தேங்காய்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. விலை வீழச்சி ஏற்படவில்லை. தேங்காய் விலை அதிகரிப்பு உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு மகிழச்சி அளிக்கின்றது. ஆனால் நகரப்புறத்தில் வாழும் மக்கள் தேங்காய் விலை அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-9)

# தேசிய நூலக மாதத்தில் சிறப்பு வேலைத்திட்டம்

## நாளை முதல் ஆரம்பம்

தென்மராட்சி, செப்.30

தேசிய நூலக ஆவணமாக்கல் சபையின் ஏற்பாட்டில், நூலகமாத நிகழ்வுகளை வடக்கில் உள்ளூராட்சிசபைகளின் பொது நூலகங்களில் நாளை தொடக்கம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நூல்கங்களில் கதைவேளை, பதாகைகள் காட்சிப்படுத்தல், நடமாடும் நூலகசேவை, நூலக மாதகாட்சிப்படுத்தல்கள், முப்பரிமாண நூலகச் செயற்பாடுகள், போட்டி நிகழ்வுகள், வாசிப்பு முகாம், கருத்துரை வழங்கல், விழிப்புணர்வு நிகழ்வுகள், எழுத்தாளர் கௌரவிப்பு, இலவச அங்கத்துவம் வழங்கல், சஞ்சிகை ஆக்கம், துண்டுப் பிரசுரங்கள் விநியோகம், நூல்கள் அன்பளிப்புகள் பெறல் ஆகியவை இடம்பெறும். இறுதிநாள் நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்பட உள்ளன என்று நூலகர்கள் அறிவித்துள்ளனர். அத்துடன் தமது உறவுகளின் நினைவாக பொது நூலகத்துக்கு நூல்களை அன்பளிப்பாக வழங்கி நூலகத்தை விருத்தி செய்ய பிரதேச மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தவகையில் சாவகச்சேரி பிரதேசசபையின் கைதடி பொது நூலகத்தில் தினமும் வாசிப்பினை வளப்படுத்துவதற்கான வலுவூட்டல்கள் இடம்பெறவுள்ளன என்று கைதடி பொதுநூலகர் அறிவித்துள்ளார். (ய-9)

# விவசாயப்போதானாசிரியர்களுக்கு இந்தியாவில் சிறப்புப் பயிற்சிகள்

## வடக்கில் 25 பேர் கொண்ட குழு பயணம்

யாழ்ப்பாணம், செப்.30

வடக்கு மாகாணத்தின் விவசாய போதனாசிரியர்களுக்கான சிறப்பு பயிற்சிகள் இந்தியாவில் இடம்பெறும் என்று வடக்குமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் .சி. சத்தியசீலன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தின் மிகப் பெரிய பொருளாதாரம் விவசாயமாகும். அதனை இலகுவாக மேற்கொள்வதற்கு பல்வேறு வகையான நவீன உபகரணங்கள் உள்ளன. ஆனால் அவற்றை நாம் சரியானமுறையில் பயன்படுத்துவதற்குரிய முழுமையான விளக்கங்கள் போதாதுள்ளன.

விவசாயப் போதனாசிரியர்கள் இதனை முறையாகக் கற்றுக் க. கொள்வதன் மூலம் இங்கே அனைவருக்கும் வழிகாட்ட முடியும். இதற்காக வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் கடமையாற்றும் போதனாசிரியர்கள், பிரதி விவசாயப் பணிப்பாளர்கள் உட்பட 15 பேர் மற்றும் 5 மாவட்டங்களில் இருந்தும் 2 விவசாயிகள் வீதம் 25 பேர் இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர்.

இரண்டுவார காலப் பயிற்சியாக இது அமையவுள்ளது. நவீன விவசாயமுறைகள், நவீன இயந்திரங்களின் பாவனை போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக அவர்கள் பயிற்சிகளைப் பெறவுள்ளனர்.

இவர்களின் இடைநேர் செலவுக்கான 13 லட்சத்து 6 ஆயிரம் ரூபா நிதியை வடக்கு மாகாண சபையின் நிதியிலிருந்து பெற்றுக்கொடுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தப் பயிற்சிநெறிக்குச் செல்லவுள்ளவர்களின் விவரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன. அங்கே சரியான முறையில் பயிற்சிகளைப் பெற்று எமது மாகாணத்தில் விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதே எமது நோக்கம் என்று மேலும் தெரிவித்தார். (ய-ரி)

# வட மாகாணசபை உறுப்பினர்களால் 2,122 திட்டங்களுக்கு அறிக்கை

யாழ்ப்பாணம், செப்.30
வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு நடப்பு வருடத்தில் வழங்கப்பட்ட நன்கொடை நிதியில் 2ஆயிரத்து 122 செயற்திட்டங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாணசபை பேரவைச் செயலாளர் கே.தெய்வேந்திரம் தெரிவித்தார்.
இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் மூலதன நன்கொடை நிதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்ட அறிக்கையை செப்ரெம்பர் மாத இறுதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தோம். தாமதமாக அறிக்கையை வழங்குவதால், கணக்கு அறிக்கைகளை முழுமைப்படுத்த முடியாத நிலை உள்ளது.
ஆகவே மாகாண சபை உறுப்பினர்கள் தமது செயற்திட்ட அறிக்கைகளைக் காலதாமதமின்றிச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தோம். அதற்கமைவாகத் தற்போது அனைத்து உறுப்பினர்களும் திட்ட அறிக்கையை எமக்குச் சமர்ப்பித்துள்ளனர்.
நடப்பு வருடத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கான மூலதன நன்கொடை நிதி தலா 6 மில்லியன் ரூபாவீதம் மொத்தமாக 198 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக 2ஆயிரத்து 122 செயற்திட்டங்களுக்கான அறிக்கையை மாகாண சபையின் 38 உறுப்பினர்களும் சமர்ப்பித்துள்ளனர்.
திட்டங்கள் நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்களுக்கு அமைவாகச் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதற்கமைய செயற்பாடுகள் நடைபெறும் என்று தெரிவித்தார்.
கடந்தவருடம் 198 மில்லியனுக்கு 2 ஆயிரத்து 400 செயற்திட்ட முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ய-ரி)

# சித்த வைத்தியத்துக்கு ஆண்டுதோறும் 24 ஆயிரம் கிலோ எள் தேவை

## வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.செப்.30
வடக்கு மாகாணத்தில் எள்ளு சார்ந்த வைத்திய உற்பத்திகளுக்கு அதிக எள் தேவைப்படுகின்றது. வருடத்துக்கு 24ஆயிரம் கிலோ எள் உற்பத்தி செய்யவேண்டிய தேவை உள்ளது என்று மாகாண சுதேச வைத்தியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.





இதுபற்றி திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது:
மருத்துவ தேவைகளுக்கு எள்ளெண்ணெய் அதிகமாக தேவைப்படுகின்றது. கடந்த வருடம் நேரடியாக எள்ளெண்ணெய் கொள்வனவு செய்யப்பட்டு மருந்துத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. எனினும், அவற்றின் தரம் குறைவு எனத் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் திணைக்களம் நடப்பு வருடத்தில் எள் உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றது.
கிடைப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் எள் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது. இது தவிர பொன்னாங்காணி 2ஆயிரத்து 50கிலோ, தாளம்பிஞ்சு ஆயிரத்து 800 கிலோ போன்றவையும் வருடத்தில் அதிகமாகத் தேவைப்படும் மூலிகைகளாகும்.
வடக்கு மாகாணத்தில் உள்ள சித்த வைத்திய உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான மூலிகைகளை விநியோகம் செய்வதற்கு தொடர்ச்சியான செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
இதற்காக சித்த வைத்திய உற்பத்தி நிலையங்களுக்கு ஒருவருடத்துக்குத் தேவையான மூலிகை வகைகளையும், தேவைப்படும் அளவு உள்ளிட்ட தரவுகளைத் தருமாறு திணைக்களம் கேட்டிருந்தது. இது சார்பான கலந்துரையாடல் திணைக்க ளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
மாகாணத்தில் உள்ள சுதேச வைத்தியத் திணைக்களத்தின் கீழ் உள்ள மூலிகைத் தோட்டங்களில் தற்போர்து பல்வேறு வகையான மூலிகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.
உற்பத்தி செய்யப்படும் மூலிகைகள் மருத்துவத் தேவைக்காக சேமிக்கப்பட்டு வருகின்றன. எனினும், மூலிகைகளின் தேவை அதிகமாக உள்ளது. இதனால், வடக்கு மாகாணத்தில் உள்ள சுதேச மருத்துவத் திணைக்களத்துடன் தொடர்புடைய அனைத்து மருந்து உற்பத்தி நிலையங்களுக்கும் தேவையான மூலிகைகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட வுள்ளன.
தற்போது பெறப்பட்ட தகவல்களின்படி 69 வகையான மூலிகை வகைகளை உற்பத்தி செய்யவேண்டிய தேவை உள்ளது. இதில் எள் மாத்திரம் வருடத்துக்கு 24 ஆயிரம் கிலோ தேவையாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# அனுமதியின்றி கள் விற்ற மூவருக்கு ரூ.7000 தண்டம்

கிளிநொச்சி, செப். 30
அனுமதியின்றி கள் விற்பனை செய்தமை மற்றும் வைத்திருந்த 3 பேருக்கு கிளிநொச்சி நீதிமன்று 7 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.
சந்தேகநபர்கள் மதுவரித் திணைக்களத்தினரால் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். விசாரணையின்போது தம்மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டது.
இதில் ஒருபோத்தல் கள் விற்பனை செய்த ஒருவருக்கு ஆயிரம் ரூபா தண்டமும், மற்றொருவருக்கு (முன்னரும் தண்டம் விதிக்கப்பட்டவர்) 3 ஆயிரம் ரூபா தண்டமும், பிறிதொரு நபருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (ய-6)



மாந்தை கிழக்கு கொல்லவிழாங்குளத்தில் நேற்றுமுன்தினம் மாலை கடும் சுழல்காற்று வீசியது. மரங்களும் மின்கம்பங்களும் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து தடைப்பட்டது. இதன்காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சில மணிநேரங்களின் பின்னர் மின்சார இணைப்புகள் சரி செய்யப்பட்டு, போக்குவரத்தும் சீர்செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ய-6)

# திருட்டு மணல் ஏற்றியவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சி, செப்.30
சட்டவிரோதமாக மணல் ஏற்றிய உழவியந்திரச் சாரதிக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.
கிளிநொச்சிபொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சாரதி கடந்த புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.
விசாரணையின்போது அவர் தன்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து அவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ய-6)

# வடக்கு மாகாணத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் மொழிச் சிகிச்சையாளர்கள்

யாழ்ப்பாணம், செப்.30
வடக்கு மாகாணத்தில் மொழிச் சிகிச்சையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்தார்.
இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் விபத்து, அதிர்ச்சி நோய்கள் போன்ற பல்வேறு காரணங்களால் பேச்சுத் தடைப்பட்ட பலர் உள்ளனர். இவர்களுக்கு மொழிச் சிகிச்சைகளை வழங்குவது அவசியம். மாவட்டத்திற்கு ஒரு மொழிச் சிகிச்சையாளர்கூட நிரந்தமாக நியமிக்கப்படாதநிலை காணப்படுகின்றது.
வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் மொழிச் சிகிச்சையாளர்களுக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணிகள் 4 உள்ளன. அவற்றில் 3 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
ஆளணிகளை நிரந்தரமாகப் பெறவேண்டுமாயின் பதிவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டு அமைச்சினால் அனுமதி வழங்கப்படவேண்டும். இதற்கான அனுமதி கிடைக்கும் வரையில், தற்காலிகமாக மொழிச் சிகிச்சையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கவுள்ளோம். இதற்கான ஆளணியை உள்வாங்குவதற்காக விளம்பரத்தைப் பிரசுரிப்பதுக்கான அனுமதியைப் பெறுவதற்காகத் தற்போது ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ளோம். அனுமதி கிடைத்ததும் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ரி)

# கமக்கார அமைப்புக்களின் நிர்வாகங்கள் கிளிநொச்சியில் மறுசீரமைக்கப்பட்டன

## மாவட்ட கமநல உதவி ஆணையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப்.30
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கமக்கார அமைப்புக்களின் 75 நிர்வாகங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே.ஆயகுலன்தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிலகமக்காரஅமைப்புகளில் முறையற்ற விதத்தில் சில அத்துமீறல்கள் இடம்பெறுவதாகவிவசாயிகள்தொடர்ச்சியாகமுறைப்பாடுதெரிவித்தனர்.அதையடுத்துதற்போது கமக்கார அமைப்புகள் சீர் செய்யப்பட்டுவருகின்றன.
கிளிநொச்சி மாவட்டத்தில் புளியம்பொக்கனை, பளை, பூநகரி, இராமநாதபுரம், முழங்காவில், உருத்திரபுரம் மற்றும்அக்கராயன்போன்ற கமநல அபிவிருத்தி நிலையங்களின் கீழ் 121 கமக்கார அமைப்புகள்காணப்படுகின்றன. அதில் முதல்கட்டமாக 75 அமைப்புக்கள் சீர் செய்யப்பட்டுள்ளன. ஏனையவற்றையும் சீர்செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்குநிர்வாகத்தெரிவுகளை நடத்துவதற்கு விவசாயிகளின் வருகை முக்கியமானதாகக் காணப்படுகின்றது.
தற்போது காலபோக நெற்செய்கைஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் மீதியான அனைத்து கமக்கார அமைப்புகளும் சீர்செய்யப்படும் எனத்தெரிவித்தார். (ய-6)

# புதிய அரசமைப்பு கூட்டாட்சித் தீர்வையே வலியுறுத்துகிறது

## ஏற்றுக் கொள்ள முடியாது என்று அமரபுர பௌத்த பீடம் அறிவிப்பு

கொழும்பு, செப். 30

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையைத் தற்போதுள்ள வடிவத்தில் ஏற்றுக் கொள்ள முடியாது என்று பௌத்த மக்களின் நம்பிக்கைக்குரிய பௌத்த பீடங்களுள் ஒன்றான அமரபுர பௌத்த பீடம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமரபுர மகாபீடத்தின் தலைவர் கொடுகொட தம்மவன்ன தேரர் உள்ளிட்டவர்கள் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏக்கிய என்ற ஒற்றையாட்சிப் பதத்துக்குத் தமிழில் ஒருமித்த என்ற பதம் வழங்கப்பட்டுள்ளது. தமிழில் ஒருமித்த என்ற சொல்லுக்கான உண்மை விளக்கம் ஐக்கியம் என்பதாகும். இது நாட்டைக் கூட்டாட்சி அரசமைப்புக்குக்கொண்டு செல்லும் பிரயத்தனமாகும் - என்றுள்ளது. (5,33)

# தரிசு வயல் நிலங்களில் சூரிய மின்சக்தித்திட்டம்

## அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, செப். 30

பயிர் செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையிலுள்ள வயற்காணிகளைச் சூரியசக்தி மின் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

முதற்கட்டமாக மேல் மாகாணத்திலும் சப்ரகமுவ மாகாணத்திலும் கைவிடப்பட்ட நிலையிலுள்ள வயற்காணிகளை விவசாய அபிவிருத்தி ஆணையாளரினதும் சம்பந்தப்பட்ட ஏனைய அரச அதிகாரிகளினதும் சம்மதத்துடன் சூரியசக்தி மின் திட்டத்துக்குப் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையில் மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் மின்சாரத் தேவை அதிகமாகவுள்ளபோதிலும் அங்கு சூரியசக்தி மின் திட்டங்களை முன்னெடுப்பதற்கான காணி வசதிகள் இல்லை. இவ்விரு மாகாணங்களிலும் கைவிடப்பட்டுள்ள நிலையிலுள்ள வயற்காணிகளை இந்தத் திட்டத்துக்குப் பயன்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (5)

# கல்வித்துறையில் பெரும்புரட்சி

## ஸ்மார்ட் வகுப்பறைத் திட்டத்தை புகழ்ந்து பேசுகிறார் ரணில்



கொழும்பு, செப். 30

கல்வி துறையில் புரட்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளோம். ஸ்மார்ட் வகுப்பு அறையைத் திறந்து வைத்தோம். நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளிலும் ஸ்மார்ட் வகுப்பறைத் திட்டத்தைக் கொண்டு செல்லவுள்ளோம். அனைத்துப் பாடசாலைகளையும் வைபை வலயமாக மாற்றியமைக்கவுள்ளோம். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கல்வித் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் கொழும்பு கோட்டை மகா வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பு அறை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அங்கு அவர் தெரிவித்ததாவது:

ஸ்மார்ட் வகுப்பறைகளுக்காக ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கவுள்ளோம். தற்போது கல்வித் துறையில் ஒரு கொள்கையே கடைப்பிடிக்கப்படுகின்றது.

முன்னைய காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வரும் போது ஒரு கொள்கையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வரும் போது வேறொரு கொள்கையும் கடைப்பிடிக்கப்பட்டது. தற்போது அந்தப் பிரச்சினை இல்லை.

நாம் ஆட்சிக்கு வந்த போது நிதி போதுமானதாக இல்லை. கடன் சுமை அதிகளவில் காணப்பட்டது. தற்போது கடனைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். 2020ஆம் ஆண்டளவில் கடன் சுமையைக் குறைத்துக்கொள்ள முடியும். இந்த ஆண்டு நாம் பல்வேறு சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்தோம். அடுத்து இரு ஆண்டுகளும் எமக்கு மிகுந்த சவாலான ஆண்டுகளாக இருக்கும் - என்றார். (5,31)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உறவைப் பேண பீஜிங் விருப்பம்

கொழும்பு, செப். 30

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி இரண்டுடனுமே நாம் உறவைப் பேணுகின்றோம். எதிர்காலத்தில் தமிழர் தரப்பு அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் தொடர்பைப் பேணுவதற்கு விரும்புகின்றோம்.

இவ்வாறு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மையக்குழு பன்னாட்டுப் பிரிவின் பணிப்பாளர் நாயகமும் சமகால உலக விவகார ஆய்வு மையத்தின் தலைவருமான ஜின் சிங் தெரிவித்தார்.

சீனத் தூதரகத்தின் ஏற்பாட்டில் தமிழ் ஊடகவியலாளர் குழு சீனாவுக்குச் சென்றிருந்தது. இந்தப் பயணத்தில், ஜின் சிங்குடன் சந்திப்பு இடம்பெற்றது. அந்தச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லிணக்கம் தொடர்பில் இலங்கை சில முன்னேற்றத்தைக் காண்பித்துள்ளது. உலகில் எந்த நாட்டிலும் அந்த நாட்டினுடைய முன்னேற்றத்துக்கு விரைவாகப் பயணிப்பதற்கு வீதிகள் முக்கியம். இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்காக வீதி நிர்மாணத்துக்குச் சீனா உதவியது.

ஒரு மண்டலம் ஒரு பாதை என்னும் திட்டத்தின் கீழ் இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

இலங்கை விவகாரத்தில் அரசுக்கு அரசு என்ற உறவுமுறையே பேணப்பட்டு வருகின்றது. இலங்கையில் இடம்பெறும் திட்டங்கள் தொடர்பில் மேற்குலக நாடுகள் சில தவறான கருத்துக்களைப் பரப்புகின்றன. திட்டத்தின் உண்மைத் தகவல்கள் வெளிக் கொண்டு வரப்படவேண்டும் - என்றார். (5,101)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பூபாலசிங்கம் அன்புராசன்



தோற்றம்
07.08.1980

மறைவு
11.10.2016

திதி: தசமி

வாழ்க்கை எனும் பாதையிலே
எம்மோடு பயணித்த
- அன்புத் தெய்வமே!
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

வரிக்கம்புரை,
இராசபாதை வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தவயோகநாயகி குருமூர்த்தி

(இளைப்பாறிய விஞ்ஞான ஆசிரியை - நடேஸ்வரா கல்லூரி)



பிறப்பு 18.12.1939 இறப்பு 27.09.2017

மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமாகிய திருமதி தவயோகநாயகி குருமூர்த்தி 27.09.2017 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற ஞானேஸ்வரியின் அருமை சகோதரியும், காலஞ்சென்ற செல்லையா குருமூர்த்தியின் (பொறியியலாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் மைத்துனியும், சிவஞானசுந்தரி (லண்டன்), சூரியகுமாரன் (லண்டன்), இரதிதேவி (லண்டன்), ஸ்ரீகுமார் (லண்டன்), இரஞ்சினிதேவி (லண்டன்) ஆகியோரின் அருமை சிறிய தாயாரும், ஜெயக்குமார்(லண்டன்), சாந்தாதேவி (லண்டன்), நாகராஜா (லண்டன்),அனுஷா (லண்டன்), மூர்த்தி(லண்டன்) ஆகியோரின் சின்ன மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 - 4 மணியளவில் லண்டனில் (HENDON CREMATORIUM) நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சூரியகுமாரன் - +44 79 461 79895,
இரதிதேவி - +44 75 435 49039

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 24 . 01 . 1959

விண்ணில் 25 . 10 . 2012

### அமரர் தவராசா தவராணி

அன்பின் உருவாய் அவதரித்தாயே
பண்பாய் பாசமாய் உடனிருந்தாயே
நன்றே எம்மை வளர்த் தெடுத்தாயே - இன்று
நினைவில் மட்டும் கலந்திட்டாயே!

எங்கோ சென்று மறைந்திட்டாயே
ஏங்கி ஏங்கி தவிக்க விட்டாயே
எண்ணம் எல்லாம் நீயானாயே - இன்றும்
எம்மைக் காத்து உன் இருப்பாயே..!

உற்றார். உறவினர் அறிய வைத்தாயே
உகை வாழ்வை புரியவைத்தாயே
உள்ளமெல்லாம் என்றும் நிறைந்திருப்பாயே - எம்
உயிருள்ள வரை நினைவிருப்பாயே.....!

ஈரைந்து மாதங்கள் எமைச் சுமந்தாயே
இந்த ஐந்து ஆண்டுகளாய் துடிக்கவிட்டாயே
ஈடில்லாத் துன்பமதை உணர வைத்தாயே - நீ
இனி யேனும் எமை நாடி வருவாயே ....!!!

115/2, ஆலடி வீதி,
தோணிக்கல்,
வவுனியா.

என்றும் உம் நினைவோடு வாழும்
கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மூன்றாண்டு நினைவஞ்சலி

### ஜனார்த்தனன் அச்சுதன்



மனம்மகிழ 23.07.1993

மனம்நெகிழ 03.10.2014

திதி: புரட்டாதி தசமி

எங்கள் உயிரின் உயிரே மூன்றாண்டுகள்
என்ன முப்பதாண்டுகளானாலும்
எங்கள் உடலில் உயிர் இருக்கும்வரை
மறப்போமா ஐயா! உந்தன் நினைவை

என்றும் உந்தன் நினைவோடு
அப்பா, அம்மா, குடும்பத்தினர்.

கோகிலமஹால் ரெக்ஸ் ரைல் உரிமையாளர்- யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 29.01.1959

கடவுளின் சொத்தாய் 31.08.2017

31.08.2017 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

அமரர்

### மகேந்திரநாதன் சுமதினி

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் அன்னாரின் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

இல.03, சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

இடம் : நீர்வேலி மாட்டுவண்டி சவாரித்திடல்
காலம் : நாளை (01.10.2017) ஞாயிறு
நேரம் : பகல் 12.00 மணி


வைரமுத்து சின்னத்தம்பி (சாமி – கொல்லங்கலட்டி)


செல்லையா இளையதம்பி (இளையண்ணை – கரவெட்டி)


இளையதம்பி அருணாசலம் (ஐயாஅண்ணை அல்வெட்டி)


சுப்பிரமணியம் குணராசசிங்கம் (பெரியண்ணை – மல்லாகம்)


தம்பையா சுப்பிரமணியம் (சுப்பண்ணை – மாவிட்டபுரம்)
விநாசித்தம்பி கந்தசாமி (உரும்பிராய்)


காசியர் சபாபதி (மயிலிட்டி)


கிருஷ்ணபிள்ளை கணேசமூர்த்தி (ஓடிகணேஸ் – புத்தூர்)


கந்தையா மயில்வாகனம் (மயிலம்மான் அல்வெட்டி)


வைரமுத்து செல்வராஜா (நெல்லியடி)


கனகசபை செல்லக்கண்டு (அராலி மேற்கு வட்டுக்கோட்டை)


தம்பையா குணசிங்கம் (குணம் – சுவிஸ்)


வேலுப்பிள்ளை செல்லத்துரை (செல்லக்கண்டு – மயிலிட்டி)

கணபதி நடுவிலார் (குழந்தை மட்டுவில்)


பொன்னையா சக்திவடிவேல் (சங்குவேலி)


கனகசபை புவனேந்திரன் (சங்குவேலி)


வல்லிபுரம் செல்லப்பா (மட்டுவில்)


செல்லப்பா கனகரத்தினம் (கனகர் – பண்ணாலை)

முத்துக்குமார் சிவபாலன் (வேலி வட்டுக்கோட்டை)

ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவர்களது குடும்பத்தினரின் அனுசரணையுடன் நடைபெறும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் அனைவரையும் பங்குபற்றுமாறும், போட்டியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக பார்வையாளர்களை கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ் மாவட்ட மாட்டு வண்டிச் சவாரிச்சங்கம்
யாழ்மாவட்டம்


# தேங்காயின் விலை உச்சத்தில் ஏற்றுமதியை நிறுத்தக் கோரிக்கை

## அரசிடம் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் முன்வைப்பு

கொழும்பு, செப். 30
தேங்காய் விலை அதிகரித்து வரும் நிலையில், நாட்டின் தேங்காய் ஏற்றுமதியை நிறுத்துமாறு, இலங்கை நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

'எப்போதும் இல்லாதவாறு தேங்காயின் விலை 100 ரூபா வரை அதிகரித்துள்ளதால், மக்கள் அதிக சிக்கலை எதிர்கொண்டுள்ளனர். தேங்காயின் விலையில் வீழ்ச்சி ஏற்படும் வரை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தற்காலிகமாக நிறுத்துமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கின் றோம்' என்று நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

அதிக விலைகளுக்குத் தேங்காய்களை விற்பனை செய்யும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று தேங்காய் உற்பத்தி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

அந்தச் சபையின் தலைவர் கபில யகந்தாவள, கடந்த இரண்டு ஆண்டுகளாக, நாட்டில் நிலவும் வறட்சியே, தேங்காய் விலை உயர்வுக்குக் காரணம்.

தேங்காய் ஒன்று 75 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். (5)

# தமிழருக்காகக் குரல்கொடுத்தது நாமே

## மார்தட்டுகிறார் டியூ

கொழும்பு, செப். 30
தமிழ் மக்களின் உரிமைக்காக ஆரம்பம் தொடக்கம் போராடியது நாம்தான். இந்த நாட்டில் தேசியப் பிரச்சினை இருப்பதாக முதன் முதலில் கூறியதும் நாம்தான். இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 21ஆவது தேசிய சம்மேளன மாநாடு நாரஹேன்பிட்டி சாலிகா மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் தேசியப் பிரச்சினை இருப்பதாக 1944ஆம் ஆண்டு எமது கட்சி ஆரம்பிக்கப்பட்டு முதல் வருடத்திலேயே நாங்கள் தெரிவித்தோம். தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தையும் முன்வைத்தோம். தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் எதிர்காலத்தில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தோம். அதன்பிரகாரம்1956ஆம் ஆண்டு மொழிப்பிரச்சினை ஏற்பட்டது.

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரத்தின்போது எமது கட்சி முன்னின்று தமிழ் மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தது. எமது கட்சி தடை செய்யப்பட்டது.

எமது கட்சியின் 20ஆவது சம்மேளன மாநாடு 2014ஆம் ஆண்டு இடம்பெற்றபோது, நாட்டில் அரசியலில் 2015ஆம் ஆண்டு மாற்றம் இடம் பெறலாம் என்று தெரிவித்தேன். அரச தலைவர் தேர்தலுக்கு செல்லவேண்டாம் என்று மகிந்த ராஜபக்சவுக்கு 2 மணி நேரம் நான் தெளிவுபடுத்தினேன். தேர்தலுக்குச் சென்றால் நிச்சயமாக தோல்வியடைவோம் என்று அரசியல் எதிர்வுகூறலாகத் தெரிவித்தேன். மகிந்த என்னிடம் வந்து, உங்கள் பேச்சை கேட்காமல் இருந்தது நான் செய்த மடத்தனமாகும் என்று தெரிவித்தார் - என்றார்.(5-31)


## கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்

"வைரவிழா மலர்"
வெளியீட்டு விழா

60 YEARS 1956-2016

வைரவிழா நிகழ்வும்
பரிசளிப்பு விழாவும்

இடம்:- வித்தியாலய பிரதான மண்டபம்
காலம்:- 02.10.2017(திங்கட்கிழமை)
நேரம்:- மு.ப 9.00 மணி

தலைவர்
திரு.ம.கிறிஸ்ரி லெனாட் மனுவல்
(வித்தியாலய முதல்வர்)

பிரதம விருந்தினர்
திரு.த.முகுந்தன்
(பிரதேசசெயலர்,பிரதேசசெயலகம்,கரைச்சி)

சிறப்பு விருந்தினர்
திருமதி.பிறேமா மதுரநாயகம்
(உதவிக்கல்விப் பணிப்பாளர்-தமிழ்
வலயக்கல்வி அலுவலகம்,கிளிநொச்சி)

கௌரவ விருந்தினர்
திரு.வே.க.இரத்தினகுமார்
(ஓய்வுநிலை அதிபர்
கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்)

வெளியீட்டுரை
திரு.அ.கேதீஸ்வரன்
(உதவித்திட்டமிடல் பணிப்பாளர்
மாவட்டச்செயலகம் கிளிநொச்சி)

மதிப்பீட்டுரை
திருமதி.ச.மணிமேகலை
(உள்ளூராட்சி உதவியாளர்,
பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம்
கரைச்சி-கிளிநொச்சி)

இடம்:-வித்தியாலய மைதானம்
காலம்:- 02.10.2017(திங்கட்கிழமை)
நேரம்:- பி.ப 4.00 மணி

தலைவர்
திரு.ம.கிறிஸ்ரி லெனாட் மனுவல்
(வித்தியாலய முதல்வர்)

பிரதம விருந்தினர்
கௌரவ சிவஞானம் சிறிதரன்
(பாராளுமன்ற உறுப்பினரும்,
முன்னாள் எமது வித்தியாலய ஆசிரியரும்.)

சிறப்பு விருந்தினர்
கௌரவ வைத்தியநாதன் தவநாதன்
(வடக்கு மாகாணசபை உறுப்பினரும்,
பழைய மாணவர்சங்க போசகரும்.)

கௌரவ விருந்தினர்
திரு.திருஞானம் ஜோன்குயின்ரஸ்
(வலயக்கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்,கிளிநொச்சி)

எமது பாடசாலையின் பழைய மாணவர்கள்,ஆசிரியர்கள்,பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்
கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்

# இது நியாயமா?

## உணவக உரிமையாளர் சங்கத்திடம் அமைச்சர் மகிந்த அமரவீர கேள்வி



கொழும்பு, செப். 30
காஸ் சிலிண்டரின் விலைக் குறைப்புச் செய்யப்பட்டபோது சிற்றுண்டிகளின் விலைகள் குறைப்புச் செய்யாமல், விலை அதிகரிப்பின்போது மாத்திரம் சிற்றுண்டிகளின் விலைகளை அதிகரிப்புச் செய்வது நியாயமா ? இவ்வாறு உணவக உரிமையாளர் சங்கத்தை நோக்கி, அமைச்சர் மகிந்த அமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

காஸ் சிலிண்டரின் விலை 110 ரூபாவால் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரிக்க நேர்ந்துள்ளதாக உணவக உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்திருந்தனர். இது தொடர்பில் அமைச்சர் மகிந்த அமரவீர பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு ஆட்சிக்கு வந்ததையடுத்து சமையல் எரிவாயுவின் விலையைக் குறைத்தபோது, எந்தவொரு உணவுப்பொருள்களின் விலைகளும் குறைக்கப்படவில்லை. எனினும் சமையல் எரிவாயுவின் விலை 110 என்ற சிறிய தொகையால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்காக உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரிப்பது அநீதியான செயல் - என்றார். (5,33)

## புகையிலைக் கட்டுப்பாட்டுக்கு இலங்கைக்கு பிரிட்டன் நிதி உதவி

இலங்கையில் புகையிலை சார்ந்த பொருள்களின்பாவனையைக்கட்டுப்படுத்தும்வேலைத் திட்டத்துக்குப் பிரிட்டன் நிதி உதவி வழங்கவுள்ளது. ஐ.நா. சபையின் ஊடாக இந்த நிதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்த மற்றும் நடுத்தர வர்க்க நாடுகளில், புகையிலை சார்ந்த பொருள்களின்பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான, உலக சுகாதார நிறுவனத்தினால் நெறிப்படுத்தப்பட்டுள்ள புதிய வேலைத்திட்டம் ஊடாக இந்த நிதி வழங்கல் இடம்பெறவுள்ளது.

2016ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டு கால வேலைத்திட்டமான இதற்குப் பிரிட்டன் 20 மில்லியன் டொலர்களை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. (5,33)

### அறிவித்தல்

தென்மராட்சி பிரதேச மக்களின் சுகாதார நலனிற்காக கடமையாற்றி அமரத்துவம் அடைந்த
**வைத்திய கலாநிதி**
**சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன்**
அவர்களது ஞாபகார்த்தமாக உருவச்சிலை ஒன்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் A9 வீதியினை அண்டிய மதில் ஓரமுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இது தொடர்பில் எவராவது ஆட்சேபனை தெரிவிக்கவிரும்பின் இவ்வறித்தல் பிரசுரமாகி 7 நாள்களுக்குள் செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்க முடியும்.

**கா.சண்முகதாசன்**
**செயலாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

### HOTEL விற்பனைக்கு

யாழ் நகர் சுண்டுக்குழியில் ஐரோப்பிய பாணியில் ஐரோப்பிய கட்டடக் கலைஞரால் 6 பரப்பு 5 குளி அளவுள்ள காணியில் வடிவமைக்கப்பட்ட
**HOTEL, COTTAGE + RESTAURANT** (17 அறைகள்)
**வாகனத் தரிப்பிட வசதி**
மற்றும் அனைத்து உபகரணங்களுடன் விற்பனைக்கு உண்டு.
**077 783 4024, 0044 7503 098 204**

## ஆஸியில் தஞ்சம் புகுந்தோர் அமெரிக்காவுக்கு அனுப்பிவைப்பு

### சிட்னி ஊடகங்கள் தகவல்

சிட்னி, செப். 30
ஆஸ்திரேலிய அரசினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 50 ஏதிலிகள் அமெரிக்காவில் குடியேற்றப்படவுள்ளனர். மானஸ் மற்றும் நவுறு தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏதிலிகள் இரண்டு குழுக்களாக இந்த வாரம் அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் முன்னாள் அரச தலைவர் பராக் ஒபாமாவின் நிர்வாகத்திற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில், ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்துள்ள ஆயிரத்து 250 அகதிகள் அமெரிக்காவில் குடியேற்றப்படவுள்ளனர்.

இந்தத் திட்டத்துக்கு புதிய அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப் முதலில் எதிர்ப்பைத் தெரிவித்தாலும், பின்னர் ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் மெல்கம் டர்ன்புல்லுடன் இடம்பெற்ற பேச்சுக்களையடுத்து இணக்கம் வெளியிட்டார்.

அமெரிக்க அதிகாரிகள் மானஸ் மற்றும் நவுறு தீவுகளில் உள்ள முகாம்களில் வசிக்கும் ஏதிலைகளை நேரில் சென்று தெரிவு செய்து அமெரிக்காவில் குடியேற்றவுள்ளனர்.

முதல் 50பேர் இந்த வாரம் அமெரிக்காவின் அரிசோனா, டெக்ஸாஸ், கலிபோர்னியா, ஓரிகன் மற்றும் நியூயோர்க் உள்ளிட்ட பகுதிகளில் குடியேற்றப்படவுள்ளதாக, ஆஸ்திரேலிய அகதிகள் ஆலோசனைக் குழு தெரிவித்துள்ளது. (5,33)

### புதிய ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

இன்று 10 மணிக்கு விஜயதசமி திருநாளில் ஆரம்பம் . உடன் தொடர்புகளுக்கு
PE RSONAL: **077 969 1716**
விரும்பின் அழைக்கவும்



### நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

**இல.303,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**வி.ஜெயந்தி**
T.P: 077 9733 183
021 221 6071

### கடை வாடகைக்கு

யாழ் நகரின் கஸ்தூரியார் வீதியில் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் நவீன முறையில் கட்டப்பட்ட முழுவதும் மாபிள் பதித்த 10 X 35 அடி கடை தரிப்பிட வசதியுடன் வாடகைக்கு
**077 737 4726**

### விற்பனைக்கு உண்டு

AC, TV, குளிர்சாதனப்பெட்டி, அலுமாரி, கட்டில், மோட்டார் சைக்கிள், மின்விசிறி, போட்டோ கொப்பி இயந்திரம், கடையில் பாவித்த அலுமாரிகள் மேசை, கதிரை லைட் போட்டுகள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு.
**076 851 4296**

மத்தியகல்வி அமைச்சின் ஓய்வுநிலை
நிபுணத்துவ ஆலோசகர்
கலாநிதி **நா.தணிகாசலம்பிள்ளை**
அவர்களின்

### பவள விழா




**இடம் :** "சபாலிங்கம் மண்டபம்"
யாழ் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
**காலம்:** (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** காலை 9.00 மணி

அனைவரையும் இவ்விழாவில் பங்குபற்றுமாறும், விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
**பவள விழாக்குழுவினர்.**

### Vacancy

**Receptionist (Female)**

யாழில் நான்கு வருடங்களாக சிறந்த சேவையாற்றிவரும் எமது நிறுவனத்திற்கு சிறந்த பேச்சாற்றலும் அடிப்படைக் கணினி அறிவும் கொண்ட **வரவேற்பாளர்** தேவை.

நேர்முகத் தேர்வு: 29.09.2017 - 30.09.2017
முற்பகல் 10.00 - பிற்பகல் 2.00

**Winstar Visa Consultants**
**106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.**
**021 300 4641**

### PALMYRAH DEVELOPMENT BOARD
### MINISTRY OF PRISON REFORMS, REHABILITATION, RESETTLEMENT AND HINDU RELIGIOUS AFFAIRS
### EXTENSION OF TENDER NOTICE

The Chairman of procurement committee Palmyrah Development Board invites sealed quotations under the two bid system technical and financial proposals from the eligible bidders for supplying, commissioning and fixing the Jaggery plant and supplying fixing and commissioning of fiber extraction machine in Jaffna Srilanka. The paper advertisement of the relevant subject published on **14th of September 2017** in Daily news and Uthayan newspapers.

According to the pre bid meeting discussion held on **21st September 2017** from 2.00p.m, there are some changes made on the specification slightly for the both machineries. Therefore, the bidders are invited to collect the amended documents from the following offices.

1. **Palmyrah Development Board, 01st Floor, NHDA Building, Kandy road, Jaffna.**
2. **Palmyrah Development Board, 17 A 1/1, Collingwood place, Colombo 6.**

Sealed tenders were invited up to up to **3rd of October 2017 at 2.30 p.m**. and the above tender has been extended **up to 12th October 2017 at 2.30 p.m.** and will be **opened on 12th October 2017 at 2.45p.m** at Palmyrah Development Board, first floor, NHDA building, Kandy road, Jaffna, Sri Lanka. Specification sheet only has being changed, rest of the procedures followed based on the previous tender notice and the Bidding Document.

If you need any clarification, do not hesitate to contact on Tel. **021-2222034, or fax 0212224154 or E-Mail** to slpdbho@yahoo.com on or before 11th October 2017 before at 1.00p.m.

**The Chairman,**
**Procurement Committee,**
**Palmyrah Development Board,First floor NHDA Building, Kandy Road,Jaffna, Sri Lanka.**

### World Heart Day
September 2017

உங்களுக்கும் கொலஸ்டரோலா?
கருஞ்சீரகத்தின் பரிபூரண நற்குணங்களுடன்

**Garlichol**
Garlic Oil with Black seed Oil




கருஞ்சீரகம், வெள்ளைப்பூண்டு சேர்க்கையினால் தயாரிக்கப்பட்ட Baraka Garlichol பாவனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது

○ கொலஸ்ட்ரோல் மற்றும் ரைகிளீசரைட் அளவை சமநிலைப்படுத்தும்
○ இரத்தம் அடர்த்தியடைவதைத் தடுக்கும்
○ நிர்ப்பீடணத் தொகுதியை வலிமையாக்கும்.

GMP, HACCP, ISO 22000 & 14001 CERTIFIED COMPANY
**Hotline: 0117 772277**
www.baraka.lk
**Baraka**

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினசிங்கம் தையல்நாயகி



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மூத்த விநாயகர் கோயிலடி முதலாம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசிங்கம் தையல்நாயகி 27.09.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும், வாசுகி (சீதா), சசிகரன் (இத்தாலி), ரஜிகரன், காலஞ்சென்ற மயூகரன் ஆகியோரின் அன்புத் தாயும், இராசமணி, சுதாமதி, பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, செல்லத்துரை, தர்மராசா, இராசம்மா, ஐயாத்துரை, புஸ்பவதி மற்றும் வாமதேவன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கிருபாலினி, கயல்விழி, கிரிஷா, சசிக்கா (இத்தாலி) விதுசன் (இத்தாலி), மயூரிக்கா, சுஜீபன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.10.2017 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மூத்தவிநாயகர் கோயிலடி,**
**முதலாம் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 217 9276**

## வரவு - செலவுத் திட்டம்

### 5ஆம் திகதிவரை ஆலோசனை முன்வைக்கலாம்

கொழும்பு, செப். 30
2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் பொதுமக்கள் தங்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும் என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய நிதியமைச்சரின் கன்னி வரவு -செலவுத் திட்டம் சகல தரப்பினரும் நன்மையடையக் கூடிய வகையில் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே நிதியமைச்சர் மங்கள சமரவீர பொதுமக்களின் கருத்துக்களையும் ஆலேசனைகளையும் வரவேற்பதாக நிதியமைச்சுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (5)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




### அமரர் வல்லிபுரம் சின்னத்தம்பி
**(இரத்தினம்)**

கடந்த 01.09.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் வல்லிபுரம் சின்னத்தம்பி (இரத்தினம்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (01.10.2017)ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப் படும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை மனமுவந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 17.10.1924 — மறைவு 01.09.2017

**குடும்பத்தினர்.**
புறாப்பொறுக்கி, ஆடை,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 703 5624



மலர்வு 08 . 04 . 1922

உதிர்வு 29 . 09 . 2017

### சின்னத்தம்பி சிவசாமி

**(இளைப்பாறிய அதிபர், மருதானை ஹகிரா கல்லூரி (1944 1967), கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி (1967 1974), கிரிலப்பனை றோ.க.த.ப (1974 1980), பதுளை, எலதளுவ தமிழ் மகா வித்தியாலயம் (அதிபர்) சென்தோமஸ் கல்லூரி கொள்ளுப்பிட்டி (ஆசிரியர்) முன்னாள் கொள்ளுப்பிட்டி முத்தமிழ் இந்து கலாசார மன்றத் தலைவர்)**

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவரும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான சின்னத்தம்பி சிவசாமி 29.09.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லமுத்து தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் (பிரபல இரணை வைத்தியர்) முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும் ஸ்ரீரஞ்சன் (ஓய்வு பெற்ற அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்) காலஞ்சென்ற ஸ்ரீ பாரதி ஸ்ரீ கிருசாந்தி (ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. கு.க.மடம்), ஸ்ரீசுமதி(கனடா), ஸ்ரீ சாருமதி (பிரான்ஸ்), ஸ்ரீ வளர்மதி (முன்னாள் சர்வதேச பாடசாலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்ஜோதி, உமாபதிசிவம் (Cey - Nor Ltd), சரவணநாதன்(கனடா), செந்தில்நாதன் (பிரான்ஸ்), சுகர்தன்(முன்னாள் சர்வதேச பாடசாலை ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சிவலிங்கம் (பிரபல இரணவைத்தியர்), பூபாலசிங்கம்(ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தவேளின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற திருகாலசுந்தரம் புஸ்பவதியார் ஆகியோரின் மைத்துனரும் தனுப்பிரியா, கீதாமிர்தன், சாருஜன், கார்த்திகா, சகிதா சௌந்திரி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கண்ணீர் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கிரியைகள் இடம் பெற்று அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.18, வேம்படி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**ஸ்ரீரஞ்சன் - மகன்**

**தொடர்பு: 021 300 3404**

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 08 . 1933



இறப்பு 27 . 09 . 2017

### திருமதி சரஸ்வதி சிதம்பரப்பிள்ளை

யாழ். சுழிபுரம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிதம்பரப்பிள்ளை 27.09.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை(ஓலுமடுமாங்குளம்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம், நடராஜா, ராசம்மா, மற்றும் பாக்கியம், வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தரமூர்த்தி (தொல்புரம்,ஒலுமடுமாங்குளம்), சத்தியமூர்த்தி (ஜேர்மனி),கிருஷ்ணமூர்த்தி(ஜேர்மனி),பத்மா(தொல்புரம்),கணேசமூர்த்தி(ஜேர்மனி), உமா (தொல்புரம்), சச்சிதானந்தன் (ஜேர்மனி), ரேவதி (லண்டன்), கந்தநாதன் (நோர்வே), விஜயகாந்தன்(சுவிஸ்), சிறிகாந்தன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிரஞ்சனா (தொல்புரம்), குமாரி (ஜேர்மனி), இன்பராணி (ஜேர்மனி), ஸ்ரீராம் (இளைப்பாறிய பொறியியலாளர் லங்கா சீமெந்து நிறுவனம், தொல்புரம்), ஜெயந்தினி (ஜேர்மனி), வேலுப்பிள்ளை (இளைப்பாறிய மாவட்ட புள்ளிவிவரவியலாளர்- கச்சேரி முல்லைத்தீவு, தொல்புரம்), சுசானா(ஜேர்மனி), தில்லைவாசன்(லண்டன்), சிறிரஞ்சனி(நோர்வே), ஜெயகௌரி(சுவிஸ்), சிவரஞ்சனி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஜன், நிரோஜா, நிரஞ்சன், லியோனி, கிரிசாந்தினி, நிமலினி, குகன், ராகவராம், ராகினி, ராஜாராம், கஜனி, நிதுசா, லக்சனா, திவ்யா, ஜனார்த்தனன், வினோர்த்தனன், சாந்தன், சுபானுஜா, ஆடியர், லக்சுமி, தினேஷ், தணிக்கா, தர்சன், சரண்யா, விதுஷன், இந்துசன், அபிஷன், சிந்துஜா, கவுதமன், சரண், சகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யசிந்தினி, லோஜன், லோஜினி, சரவன், சாருஜன், அபிஷேக், அஷ்வின், ஜோகீஷ், விருத்தன் ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொல்புரம், சுழிபுரம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**



## படைப் புலனாய்வுப் பரிமாற்றம் கொழும்பு - வொஷிங்டன் பேச்சு

கொழும்பு, செப். 30
அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் கப்பற்படையின் பிரதிநிதியான லெப். கொமாண்டர் ரூபென் புலோப்வ்ஸ் ரெய்ன் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். கடற்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.
கடற்படையினர் மற்றும் அமெரிக்கக் கடற்படைப் புலனாய்வுப் பணியகம் மற்றும் அமெரிக்கப் பசுபிக் கடற்படை ஆகியவற்றுக்கிடையில், புலனாய்வுவிடயங்கள் தொடர்பான நிபுணத்துவப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஒருகட்டமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த, விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (5)

## கூச்சல் குழப்பத்துடன் முடிவுக்கு வந்த கிழக்கு மாகாணசபையின் இறுதி அமர்வு

கொழும்பு, செப். 30
இன்று நள்ளிரவுடன் பதவிக் காலம் முடிவடைகின்ற கிழக்கு மாகாணசபையின் இறுதி அமர்வுகடும்அமளிதுமளியுடன் முடிவுக்கு வந்துள்ளது.
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும் நேற்று வெள்ளிக்கிழமையும் 86ஆவது அமர்வு நடைபெறும் என்று நிகழ்ச்சிநிரலில்குறிப்பிடப்பட்டிருந்தாலும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையுடனேயே இறுதி அமர்வு முடிவடைந்தது.
காலை அமர்வுக்குப் பிரதி அவைத் தலைவர் பிரசன்னா இந்திரகுமார் தலைமை தாங்கினார். அவைத் தலைவர் சந்திரதாஸ கலப்பதி தலைமையில் மாலை அமர்வு இடம்பெற்றது.
மாலை அமர்வில், அவசர பிரேரணையொன்றை முன்வைத்து உரையாற்றிய மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமட், மாகாண சபையின் அதிகாரம் ஆளுநரிடம்தொடர்ந்து இருக்கக் கூடாது. விரைவாக தேர்தல் நடத்தப்பட வேண்டும். சட்டத் திருத்தங்கள் என்று கூறிக் கொண்டு காலத்தை இழுத்தடிக்காமல் அரசு தேர்தலை நடத்த வேண்டும் - என்றார்.
ரோஹிஞ்ய முஸ்லிம் அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த வீடு பிக்குகள் உள்ளிட்ட கடும்போக்கு பௌத்தர்களினால் முற்றுகைக்குள்ளான சம்பவத்திற்கு கண்டனத் தீர்மானமும் கிழக்கு மாகாண சபையின் இறுதி அமர்வில் நிறைவேற்றப்பட்டது.
கிழக்கு மாகாண சபையின் முடிவடைந்த அமர்வு இறுதி அமர்வாக இருந்தாலும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவு வழங்கியமை தொடர்பான சர்ச்சை மற்றும் ஆளும் எதிர்த்தரப்பு உறுப்பினர்களின் சொற்பிரயோகங்களினால் கூச்சலுடனும் குழப்பத்துடனும் அமர்வு முடிவடைந்தது. (5)

## ரோஹிங்யர்கள் மீதான தாக்குதலுக்கு தமிழ்க் கூட்டமைப்பு கடும் கண்டனம்

கொழும்பு, செப். 30
இலங்கையில் ரோஹிங்ய அகதிகளின் உரிமை மீறப்படுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.
இது தொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தனது கீச்சகத்தில் நேற்றுப் பதிவிட்டுள்ளார்.
இலங்கைக்கு ஏதிலிகளாக வந்த அகதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை கடும் கண்டனத்துக்குரியது. அவர்களைப் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையும் கண்டனத்துக்குரியது என்று பதிவிட்டுள்ளார். (5)



## விரைவில் போர் வெடிக்கும் இலங்கைக்கு ஆபத்து அதிகம்

### ஆருடம் கூறுகிறார் திஸ்ஸவிதாரண

கொழும்பு, செப். 30
மிக விரைவில் அமெரிக்கா- சீனா போர் தோன்றும் நிலை காணப்படுகின்றது. இலங்கையும் அதில் தொடர்புபடும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று முன்னாள் அமைச்சர் திஸ்ஸவிதாரண எச்சரித்துள்ளார்.
கொழும்பில் மகிந்த அணி நேற்றுமுன்தினம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அமெரிக்காவின் அழுத்தம் காரணமாகவே இலங்கையின் பாதுகாப்புச் செலவு அதிகரிக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் இந்த அரசு திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்காவுக்கு கையளிக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளது. அதன் பின்னர் இந்துமா சமுத்திரப் பகுதியில் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கும். அதற்கு ஒத்தாசை வழங்கும் வகையிலேயே இலங்கையின் பாதுகாப்புச்செலவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினருக்கான பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (5)

### ரோஹிங்யர்களை

## நாங்கள் தாக்கவில்லை முடிந்தால் நிரூபியுங்கள்

### அரசுக்கு சவால்விடுகிறது சிங்கள ராவய

கொழும்பு, செப். 30
ரோஹிங்ய அகதிகளை நாங்கள் தாக்கவில்லை. நாங்கள் அவர்களைத் தாக்கியதாக அரசு முடிந்தால் நிரூபிக்கட்டும் என்று சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் சவால் விடுத்துள்ளார்.



சிங்கள ராவய அமைப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கல்கிசைப் பிரதேசத்தில் ரோஹிங்கிய முஸ்லிம்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்தது. நாங்கள் அங்கு சென்று கல்கிசைப் பொலிஸில் இது தொடர்பாக வினவினோம். பொலிஸார் இது தொடர்பாக எதுவும் தெரியாது என்று எங்களிடம் தெரிவித்தனர். நாங்கள் அவர்கள் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து அந்த இடத்தில் இருந்து அவர்களை வெளியேற்றுமாறு தெரிவித்தோம்.
இவர்கள் ஐ.நா. அமைப்பின் அகதிகள் தங்கவைக்கப்படும் முகாமில் அவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அகதிகள் முகாமில் தங்கவைக்கப்படவேண்டும். அவர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். அந்த இடத்தில் ஐக்கிய நாடுகளின் கொடி தொங்கவிடப்படவேண்டும். அவ்வாறு எதுவும் இங்கு இடம்பெறவில்லை.
மாறாக ரோஹிங்கிய அகதிகள் கல்கிசைப் பகுதியில் சொகுசு மாடி வீட்டில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பிள்ளைகள் பிரபல பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். எமது பிள்ளைகளை அந்தப் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வதென்றால் அதற்குப் பல நிபந்தனைகளை விதிப்பார்கள். இவர்கள் பொலிஸாருக்குத் தெரியாமல் இருப்பது பெரும் தவறாகும்.
அமைச்சர்களான ராஜித, மங்கள போன்றவர்கள் தெரிவிப்பதுபோன்று நாங்கள் அந்த மக்களைத் தாக்குவதற்குச் செல்லவில்லை. அவர்களை அந்த இடத்தில் இருந்து அகற்றுமாறு தெரிவித்தே ஆர்ப்பாட்டம் செய்தோம். என்றாலும் மாலை வரை பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் தான் மக்கள் குழப்பமடைந்து செயற்பட்டனர். அவ்வாறு நாங்கள் அவர்களைத் தாக்கியதை முடியுமானால் அரசு நிரூபிக்கட்டும்.
ரோஹிங்கிய இனத்தவர்கள் நாட்டில் இல்லை. அவர்களை வெளியேற்றியதாக அமைச்சர்கள் பகிரங்கமாகத் தெரிவித்து வந்தனர். அப்படியானால் இவர்கள் இருப்பது அரசுக்கும் தெரியாது. நாட்டின் புலனாய்வுத்துறைக்கும் தெரியாது. அரசு செய்த தவறை மறைப்பதற்கே தேரர்களை விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர் - என்றார். (5)

## பயணிகளை அசௌகரியமாக்கிய கணினி தொழில்நுட்பக் கோளாறு

### கட்டுநாயக்க உள்ளிட்ட பல்வேறு வானூர்தி நிலையங்களில் சம்பவம்

கொழும்பு, செப். 30
கட்டுநாயக்கபன்னாட்டுவானூர்தி நிலையத்தின் கணினி வலையமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பப் பிரச்சினை யால், நேற்றுமுன்தினம் பிற்பகல் வானூர்தி நிலையத்தில் பயணிகள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகினர்.
நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு இந்தத் தொழில்நுட்பப் பிரச்சினை ஏற்பட்டது. மாலை 4.30 மணி வரை இந்த நிலை நீடித்தது. உலகம் முழுவதிலும், உள்ள வானூர்தி நிலையங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.
பயணிகளின் ஆவணங்களைச் சோதனையிடும் இணையவழி வலையமைப்பிலேயே பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



இணையவழிச் சோதனைகள் முடங்கியதால் உள்வரும், வெளிச்செல்லும் பயணிகளை அனுமதிக்க முடியாமல் அதிகாரிகள் திணறினர்.
கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில், கணினிகளின் கடவுச்சீட்டு விபரங்களைப் பரிசோதிக்க முடியாதிருந்த போதிலும், பயணிகளுக்கான பயண அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
உலகில் சுமார் 100 இற்கும் மேற்பட்ட வானூர்திச் சேவை நிறுவனங்களுக்கு இணையவழிப் பரிசோதனை மென்பொருளை வழங்கி வரும், அமாடியஸ் நிறுவனத் தின் பிரதான வழங்கல் மையத்திலேயே குழப்பம் ஏற்பட்டுள்ளது.
லண்டனின் ஹீத்ரோ, மற்றும் கட்விக், பரிஸ், சிங்கப்பூரின் சாங்கி, ஜொகனஸ்பேர்க், மெல்போர்ண், சூரிச் மற்றும் வொசிங்டனின் றீகன் வானூர்தி நிலையம் போன்றனவும் இந்தத் தொழில்நுட்பப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (5)

## அமெரிக்காவை மிரட்டும் வடகொரியாவுக்குக் கட்டுப்பாடு விதிக்கின்றது இலங்கை

கொழும்பு, செப். 30
வடகொரிய நாட்டவர்கள் இலங்கைக்குள் நுழைவதற்கான நுழைவிசைவுக் கட்டுப்பாடுகளை அரசு அதிகரித்துள்ளது.
அணுகுண்டு மற்றும் ஏவுகணைச் சோதனைகளை நடத்திய வடகொரியா மீது, ஐ.நா. பாதுகாப்புச் சபை தடைகளை விதித்துள்ளதை அடுத்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
வடகொரிய நாட்டவர்கள் இலங்கையின் இணைய இலத்திரனியல் பயண அனுமதி முறைக்குத் தகுதி பெற்றவர்களாக இருக்கமாட்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது.
வடகொரியாவைச் சேர்ந்த தடை செய்யப்பட்ட தனிநபர்களை இலங்கைக்குள் அனுமதிக்காதிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு குடிவரவு-குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
தடைப்பட்டியலில் இல்லாத வடகொரிய நாட்டவர்கள், இடைத்தங்கல் பயணத்துக்காக வந்தாலும் கூட உரிய கண்காணிப்பை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
அதேவேளை இந்த கட்டுப்பாடுகள் கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக நீடிப்பதாக அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (5)



# யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை
# ஸ்ரீ வேங்கடேச வரதராஜ பெருமாள்
## தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2017.09.30

**தேர்த்திருவிழா**

காலை 7.00 மணி வசந்த மண்டபப்பூஜை, 9.00 மணி இரதோற்சவம்.
பகல் 11.30 மணி இரதவரோகணம்.
12.30 மணி மஹா ஆசீர்வாதம், மாலை கருடசேவை.

### கடமைகளை உணர்த்தியவன்

அகில லோக இரட்ஷகன் கருணைக்கடல் நாயகன் யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கட வரதராஜ பெருமாளுக்கு இன்று மிகவும் சிறப்பாக தேர்த்திரு விழா நடைபெறுகின்றது.

தர்மத்தை காக்க யுகம் தோறும் அவதரித்த பரந்தாமன் பார்த்தனுக்கு சாரதியாகி கடமையைச் செய்பலனை எதிர்பாராதே என அனைவருக்கும் தத்தமது கடமைகளை உணவர்த்திய வேங்கடவன் இன்று தேரிலே ஏறி எம்மிடம் உள்ள ஆணவம் முதலிய மங்கலங்களை நீக்க வருகின்றார்.

இந்த வேளை தேர்வடம் தொட்டிழுத்து வேங்கட வரதராஜப் பெருமாளது பேரருளுக்கு பாத்திரமாவீர்களாக !

கோவிந்தா ! கோவிந்தா !

**இ.ரமணிதரக்குருக்கள்**
**பிரதமகுரு**
**வேங்கட வரதராஜ பெருமாள் கோயில்.**

### நல்லை ஆதீன குரு முதல்வரின் ஆசிச் செய்தி



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற காத்தற் கடவுளான மகா விஷ்ணு வானவர் தம்மை நினைந்து மனம் நைந்துருகி வழிபடும் அடியார்களின் துன்பதுயரங்களை நீக்கும் பொருட்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்தலம் தான் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.

இந்த அருள்மிகு அற்புத தேவஸ்தானத்தில் இன்று தேர்த்திருவிழா. மஹோற்சவத்தில் ரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். அந்த வகையில் ஜீவகாருண்ய மூர்த்தியான ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் இன்று அழகிய வண்ணச் சித்திரத் தேரில் ஆரோகணித்து துன்பங்களை நீக்கி அடியார்களுக்கு அருட்காட்சி நல்குவார்.

உலகமுண்ட பெருவாயனான ஸ்ரீ மகாவிஷ்ணு உலகைக் காக்கும் பரம்பொருளாக. உயிர்கள்ள இரட்சிக்கும் திருமாலாக இன்று யாழ் வண்ணையம் பதியிலே ஓர் கூடித் தேரிழுக்க பார் மகிழும் பரந்தாமன் அருள்பாலிக்கும் அழகே தனி.

இந்த வண்ணைப்பதி வேங்கடேசன் இன்று தேரேறி வந்து அதனை வரையும் காத்து ரட்சிக்க வேண்டுமென்று அவரின் பத்ம மலர்ப்பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். வேங்கடேசன் திருவருள் எங்கும் பரவி அனைவரும் நலமே வாழ வாழ்த்துகின்றோம்.

' என்றும் வேண்டும் இன்ப அன்பு '

**ஆதீன குருமுதல்வர்.**

## விளம்பர அனுசரணை

**சாரங்கா நாணயமாற்று சேவை**
**இல157/1,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**சாரங்கா நகைமாடம்**
உங்கள் வாழ்க்கையின் அழகான தருணங்கள்
எங்கள் தங்கத்தில் மிளிரட்டும்.
**T.P: 021 222 6972**

47 வருடமாகியும் அதே சுவையுடனும், தரத்துடனும்
இலங்கை நான்கு திசைகளிலும் அன்றுபோல்
இன்றும் VSP வெற்றி நடை போடுகின்றது.
**V.S.P நல்லெண்ணெய்**
தாயின் அன்பைப் போன்று நம்பிக்கையானது
VSP நல்லெண்ணெய் போலிகளை கண்டு ஏமாறாமல்
V.S.P நல்லெண்ணெய் வாங்கும்போது
தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ் 26/A,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியை பார்த்து வாங்கவும்
V.S.P SPECIAL LUNCH OIL

KIRUBA LEARNERS
**கிருபா**
KIRUBA LEARNERS
திறமையான சாரதிகள் ஆக வேண்டுமா? கிருபா லேணர்ஸ் உடன் இணையுங்கள்
லேணர்ஸ்
No. 1 In North
0777225292
தலைமைக் காரியாலயம்
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 021 492 3200

தீபாவளியை முன்னிட்டு
**சங்கானையில் NR**
**வர்த்தக விளம்பர ஒளிபரப்பு சேவை**
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00மணி வரை
ஒளிபரப்பாகும் சேவையில் உங்கள் பொருள்களை
சந்தைப்படுத்துவதற்கு மக்களுக்கான எமது சேவையுடன்
இணைந்து நிறைவான அனுகூலங்களைப்
பெற்றுக் கொள்ளுங்கள்.
**077 936 1583**

**சிறி மீனாட்சி நகை அகம்**
**Sree Meenakchi Nagai Aham**
*Dealers in 22 Kt. Solid Gold Jewellery*
இல. 183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**021 222 6109**

சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும்
குளிரூட்டிகளும் சிறந்த முறையில்
திருத்த வேலை செய்து கொள்ள
**சேகர் குளிர் ஊற்று**
இல. 400, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
**021 222 6634**

**ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா**
திருமணம், கொண்டாட்டங்கள், பெரு நிறுவன நிகழ்வுகள்
பிறந்த நாள் விழா விசேட நிகழ்வுகள் இன்னும் பல...
அனைத்து வைபவங்களையும் சிறப்பாக ஒரே கூரையின்
கீழ் கொண்டாடி மகிழ ஏற்ற மண்டபம்
இல.84, ஐயனார் கோயில் வீதி.
தட்டாதெரு சந்தி (அருகில்), யாழ்ப்பாணம்.
021 222 9296, 075 783 6550 / 0044 746 657 8511

**அண்ணா தொழிலகம்**
அண்ணா மல்லிக் கோப்பி உலகத் தரம் வாய்ந்த பொதிகளில்
உங்கள் வசதிக்கேற்ப எமது விற்பனை முகவர்களிடம் இருந்து
பெற்றுக்கொள்ளலாம்.
ANNA INTERNATIONAL (PVT) LTD.
214 /5,Messenger Street, Colombo - 12.
+ 941 124 36063
துரை வீதி, இணுவில்.
021 224 1565

**செல்வி நகை அகம்**
நம்பிக்கையான நாணயமுள்ள
நகைகளை
நல்ல முறையில் உத்தரவாதத்துடன்
செய்து கொடுப்பவர்கள்
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**021 222 9441**

**நதியா நகை மாடம்**
02,149,Kasthuriyar rd, Jaffna.
**021 222 3479/021 567 0313**

**Ruba Versatile Traders**
104A, Stanley Road, Jaffna.
**021 222 8330**

**நல்லூர்க் கந்தன் திருமணசேவை**
எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல
திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.
இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**077 973 3183/ 021 221 6071**

# கொரியாவின் எல்லையில் ரஷ்யா கடும் கண்காணிப்பு

மொஸ்கோ, செப். 30

வடகொரிய எல்லையில் பெருமளவில் ரஷ்யச் சிப்பாய்கள் குவிக்கப்படுகின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. அவர்கள் அங்கு தீவிர கண்காணிப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா மற்றும் வடகொரியா இடையே அமைந்துள்ள ஹசன் பகுதியில் வழக்கத்துக்கு மாறாகப் பெருமளவு ரஷ்யச் சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமின்றி சீனா, வடகொரியா மற்றும் ரஷ்ய நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் சாவோஜியோனாரா மலைப் பகுதியிலும் ரஷ்ய இராணுவம் கடும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வந்தது. இந்தச் சோதனைகளுக்கு எதிராக கடும் போக்கைக் கடைப்பிடித்தது அமெரிக்கா. வடகொரியாவின் மீது அமெரிக்கா ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளது. எனினும் வடகொரியா கட்டுப்பட்ட பாடில்லை. தீபகற்பப் பகுதியில் உள்ள அமெரிக்காவுக்குச்சொந்தமான குவாம்தீவைத் தாக்கும் திட்டத்துடன் வடகொரியா தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கூட்டத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அண்மையில் உரையாற்றினார். அதில் வடகொரியாவுக்கு தனது கடும் கண்டனத்தையும் தெரிவித்தார். "வடகொரியா இவ்வாறு தொடர்ந்து செயற்பட்டால், அதைத் தாக்கி அழிப்பதைத் தவிர வேறுவழி எமக்குத் தெரியவில்லை" என்றும் ட்ரம்ப் தெரிவித்தார்.

ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்த இரண்டாவது நாளில், "அமெரிக்கா எம்மீது போர் தொடுக்க தயாராகியுள்ளது" என்று புலம்பித் தள்ளினார் வடகொரியாவின் அயலுறவுத்துறை அமைச்சர். இந்தப் பின்னணியிலேயே வடகொரியாவுடன் எல்லையைப் பகிரும் நாடான ரஷ்யா தனது சுயபாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது என்று கருதப்படுகிறது. (ம)



# வெடித்துச் சிதற தயாராகியுள்ளது 'ஆகங்' எரிமலை

ஜகார்த்தா, செப. 30

இந்தோனேசியாவில் பாலி தீவில் உள்ள 'ஆகங்' என்ற எரிமலை வெடிக்கும் நிலையில் உள்ளதால் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அங்கிருந்து 1 லட்சத்து 30 ஆயிரம் பொதுமக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்தோனேசியாவின் பாலி தீவில் 'ஆகங்' என்ற எரிமலை உள்ளது. உயிர்ப்புடன் உள்ள ஆபத்தான எரிமலைகளில் இதுவும் ஒன்று. இது இறுதியாக கடந்த 1963ஆம் ஆண்டு வெடித்தது. அதில் சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில் 54 ஆண்டுகளுக்கு பின்பு இது மீண்டும் வெடிக்கும் நிலையில் உள்ளது. கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கரும்புகையைக் கக்கத்தொடங்கியது. இதனால் அங்குள்ள மக்களுக்கு கவனமாக இருக்கும்படி எச்சரிக்கப்பட்டது. தற்போது எரிமலையில் இருந்து வெளிவரும் கரும்புகையின் அளவு அதிகரித்துள்ளதை அடுத்து எரிமலைக்கு 12 கிலோமீற்றர் சுற்றுப்புறத்திலிருந்த சுமார் ஒரு லட்சத்து 30ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். (ம)



# ஆபத்தில் அந்தாட்டிக்கா

அந்தாட்டிக்காவின் மேற்கு பகுதியில் சுமார் 250 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட மிகப்பெரிய பனிப்பாறை ஒன்று உடைந்துள்ளதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பனிப்பாறைகளால் நிரம்பியுள்ள அந்தாட்டிக்காவில் உலக வெப்ப அதிகரிப்பு காரணமாக பனிபாறைகள் உருகியும், அவை உடைந்து சிதறியும் வருகின்றன. இதனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. இந்த நிலையில் அந்தாட்டிக்காவின் மேற்குப் பகுதியில் சுமார் 250 கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட மிகப்பெரிய பனிப்பாறை ஒன்று உடைந்துள்ளதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். (ம)

# 800,000 போதை மாத்திரைகளுடன் 3 ரொஹிங்யர்கள் அதிரடிக் கைது

சுமார் 8 லட்சம் போதை மாத்திரைகளைக் கடத்திய ரொஹிங்ய இளைஞர்கள் மூவரை பங்களாதேஷ் பொலிஸார் நேற்றுமுன் தினம் கைது செய்தனர்.

மியன்மார் அரசின் வதைகளை அடுத்து ஏராளமான ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். அவ்வாறு செல்லும் ரொஹிங்யர்கள் தமது வாழ்வாதாரத்தைத் தக்க வைப்பதற்கு பெரும் துன்பியல்களை எதிர்கொள்கின்றனர். சுமார் 8 லட்சம் போதை மாத்திரைகளை



கடத்திய மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையானது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. கடந்த வாரம் சுமார் 4லட்சத்து 30 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ரொஹிங்ய இளைஞர்கள் இருவர் கைதாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

American English

First time in Jaffna

வயது வேறுபாடின்றி ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

வகுப்புக்கள் :
வார நாட்கள், வார இறுதி மற்றும் இரவு நேரங்களில் நடைபெறும்.

மொத்தமாக 7 level கொண்ட இப் பாடநெறியானது மாணவர்களின் ஆங்கில அறிவை சரளமாக வளர்க்க கூடியது. வகுப்பறை பயிற்சி மற்றும் களப்பயிற்சிகள் உள்ளடங்கலாக நவீன கற்றல் சாதனங்களின் உதவியுடன் இலகுவாக மாணவர்கள் ஆங்கிலம் பயில்வது உறுதிசெய்யப்படுகின்றது.

Speaking
Listening
Reading
Writing
Skills 4



ஆங்கிலத்தில் ஆரம்ப அறிவு இல்லை என்றால் level 1 இனை தெரிவு செய்யுங்கள்.

BRC யில் நடாத்தப்படுகின்ற English Placement test இல் தோற்றி உங்கள் ஆங்கில அடைவு மட்டத்தை அறிந்து உங்களுக்குரிய கற்கை நெறியை தொடருங்கள்.

கொழும்பிலிருந்து வருகைதரும் ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில் தனிப்பட்ட கவனிப்பு, விரும்பிய கற்றல் நேரம் என மேலும் அதிகமான சலுகைகளுடன்.

Course Duration : Each stage 1 - 1 1/2 month
Course Fees : Each stage Rs. 2900/=
Registration Rs. 1000/=
(one time only)

076 584 22 22

சான்றிதழ் :- ஒவ்வொரு level இனையும் நிறைவு செய்பவர்களுக்கு தனித்தனி சான்றிதழ் வழங்கப்படும்.
(முழுமையாக நிறைவு செய்பவர்களுக்கு Diploma சான்றிதழ் வழங்கப்படும்.

BRC
BRITISH ROYAL COLLEGE
267, Power House Road, Jaffna.
T-021 221 4191
E-mail: collegebritishroyal@gmail.com
Web: www.britishroyalcollege.com

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இனவாதிகளின் பின்னணி யார்?

மியன்மாரில் இருந்து உயிர்தப்பி வெளியேறிய முஸ்லிம் அகதிகளை, ரொஹிங்யர்களை அண்மையில் பிக்குகளுடன் சேர்ந்து சிலர் தாக்க முற்பட்ட சம்பவத்தை உதயன் கடுமையாகக் கண்டிக்கிறது. முன்னாள் அரச அதிபர் மகிந்த ராஜபக்ச உட்படப் பல அரசியல் தலைவர்களும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். இலங்கையில் இதுபோன்ற சம்பவங்களைக் கடந்த காலங்களில் அதிகளவில் எதிர்கொண்டவர்களான தமிழர்களின் தலைவர்கள், சம்பவத்தை உடனடியாகக் கண்டித்திருக்கவேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. ஒரே ஆறுதலாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சபை அமர்வில் இந்த விடயத்தை எடுத்துக்கொண்டு உரையாற்றியிருக்கிறார்.

மியன்மாரில் ரொஹிங்யர்களுக்கு எதிராக நடப்பது இனச் சுத்திகரிப்பு என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. இனச் சுத்திகரிப்பை எப்படிச் செய்யவேண்டும் என்பதற்கான பாலபாடம் போன்று மியன்மார் படையினரின் செயற்பாடுகள் இருக்கின்றன என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது. அப்படிப்பட்ட ஒரு நிலையில், இலங்கையில் இனப்படுகொலையை எதிர்கொண்டவர்கள், இன்னும் அந்த ஆபத்தில் இருந்து நீங்காதவர்கள் ஆகிய தமிழர்கள் ரொஹிங்யர்களுக்கு தமது முழுமையான ஆதரவைத் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது கீச்சகப் (ருவிற்றர்) பக்கத்தில் கண்டனம் தெரிவித்தார், மாகாணசபையில் ஒருவர் குரல் கொடுத்தார், இவற்றுக்கெல்லாம் முன்பாகச் சிலர் யாழ். நகரில் ஒன்றுகூடி ஒரு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்கு மேல், தமிழ்ச் சமூகம் இது பற்றிப் பெரிதாக அலட்டிக்கொண்டதில்லை. ஆனால், தமக்குக் கொடுமைகள் நிகழும்போதும், தாம் அடக்குமுறைக்கு உள்ளாகும் போதும் மொத்த உலகமும் எழுந்து நின்று கேள்வி கேட்க வேண்டும் என்று விரும்புவார்கள். இப்போதும் எங்கள் பிரச்சினையில் உலக நாடுகள் தலையிட்டுத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்று அழுத்தமாக எதிர்பார்ப்போம். ஆனால் அடுத்தவருக்குத் துயர் வரும்போது நமக்கு ஏன் வம்பு என்று திரும்பிக்கொண்டுவிடுவோம்.

இது ஒருபுறமிருக்க, ரொஹிங்யர்களுக்கு எதிராக பிக்குகள் தலைமையில் இடம்பெற்ற அடாவடிகள் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எழுப்பியுள்ள கரிசனை கவனத்திற்குரியது.

இனவாதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அரசு கொள்கையளவில் தீர்மானம் எடுத்திருக்கையில், இதுபோன்று இனவாதத்தோடு செயற்படுபவர்களின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்று விசாரணை நடத்த வேண்டும் என்று சட்டம், ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

போருக்குப் பின்னர் இலங்கையில் பௌத்த மேலாதிக்கத்தால் முஸ்லிம்கள் தொடர்ந்து இலக்கு வைக்கப்பட்டு வரும் நிலையில், மற்றொரு பௌத்த நாடான மியன்மாரில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள முஸ்லிம் அகதிகள் இலக்கு வைக்கப்பட்டதன் பின்னணியில் இனவாதத்துடன் செயற்படுபவர்கள் நிச்சயம் கண்டறியப்பட வேண்டும்.

சிங்கள, பௌத்த வாக்குகளுக்காக இன்று இந்த விடயத்தை அரசு கண்டுகொள்ளாமல் விடுமானால், அதுவே பின்னர் இந்த அரசின் அனைத்து நல்ல முயற்சிகளுக்கும் ஆபத்தாக மாறிவிடும். தீர்வு முயற்சிகள், நல்லிணக்க முயற்சிகள் என அனைத்துக்குமே ஆபத்தாக முடியும்.

இனவாதப் பின்னணியில் இயங்கி, இலங்கையைப் பௌத்த சிங்கள நாடாக நிலைநாட்ட முயற்சிப்பவர்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்காத வரையில், நிரந்தரமான தீர்வு ஒன்று இலங்கையில் ஏற்படவே போவதில்லை. பௌத்த சிங்கள வாக்குகளுக்காக இத்தகைய இனவாதச் செயற்பாடுகளை கண்டும் காணாமலும் அரசு நடந்துகொள்வது எதிர்காலத்திற்கும் பெரும் ஆபத்தாக முடியும். எனவே இனவாதிகளையும் அவர்களின் பின்னால் இருந்து இயக்குபவர்களையும் கண்டறிந்து களையெடுக்கவேண்டும் அரசு.

# ஒற்றுமை இழந்து அவலப்படுகின்றனர் ஈழத் தமிழர்கள்

சேரலாதன்

ஈழத் தமிழர்களின் இன்றைய பரிதாபகரமான நிலைக்கு அவர்களது ஒற்றுமையீனமே முக்கிய காரணமெனக் கூற முடியும். ஈழத் தமிழர்கள் அரசியலில் மட்டுமல்லாது வேறெந்தவொரு விடயத்திலும் ஒற்றுமையாகச் செயற்பட்டதாக வரலாறு கிடையாது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது முதுமொழி.

நாட்டின் சுதந்திரத்துக்குப் பின்னர் அரசியல்ரீதியில் ஒன்றுபட்டுத் தமது உரிமைகளுக்காகப் போராடியிருந்தால், அவற்றை இலகுவாக ஈட்டியிருக்க முடியும். ஆனால் ஒருவரையொருவர் தூற்றிக்கொள்வதிலேயே இவர்களின் காலம் கழிந்தது. மக்களும் அரசியல் தலைவர்களை நம்பினரே தவிர, தமது எதிர்காலம் தொடர்பாகச் சிந்திக்கத் தவறிவிட்டனர்.

### ஆயுதப் போராளிகள் மத்தியிலும் ஒற்றுமை இருக்கவில்லை


அரசியல் கட்சிகள் ஓரம் கட்டப்பட்டு, ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், ஒற்றுமையுணர்வை அங்கும் காண முடியவில்லை. தமிழ் இளைஞர்கள் பல தரப்புக்களாக இயங்கினர். இவர்களது நோக்கம் ஒன்றாக இருந்த போதிலும், அவர்களால் ஒற்றுமையாகச் செயற்பட முடியவில்லை. பொது எதிரிக்கு எதிராகப் போராட வேண்டிய இவர்கள், தமக்குள்ளும் முட்டி மோதிக் கொண்டனர். இதைவிடக் காட்டிக்கொடுப்புகளும், துரோகங்களும் இணைந்து போராட்டங்களை நலிவுறச்செய்து விட்டன.

அன்றைய நாள்களில் வெள்ளையருக்கு எதிராகப் போராடிய கட்டப்பொம்மனும், பண்டாரவன்னியனும், எட்டப்பனாலும், காக்கை வன்னியனாலும் காட்டிக்கொடுக்கப்பட்டனர். ஈழத்தமிழர்களின் போராட்டத்திலும் இத்தகைய துரோகங்களுக்கும், காட்டிக்கொடுப்புக்களுக்கும் குறைவிருக்கவில்லை. ஈழப்போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதைக் கொண்டாடியவர்களும் இங்கு இருக்கத்தான் செய்தனர். தமது சொந்த விருப்பு வெறுப்புக்களை இவர்கள் மனதில் கொண்டார்களேயொழிய முழுத் தமிழ் இனத்துக்கும் ஏற்பட்ட மிகப்பெரிய தோல்வியும் அவமானமும் அதுவென்பதை அவர்கள் உணரவில்லை.

### தோற்கடிக்கப்பட்டவர்களாகப் பார்க்கப்படும் ஈழத்தமிழர்கள்

ஈழத் தமிழர்கள் தோற்கடிக்கப்பட்டவர்களாகவே மற்றவர்களால் நோக்கப்படுகின்றனர். ஒரு காலத்தில் வீரத்துக்கும், தியாகத்துக்கும் அடையாளமாகக் கருதப்பட்டவர்கள், இன்று மற்றவர்களின் பார்வையில் பரிதாபத்துக்குரியவர்களாகத் தோன்றுகின்றனர். இந்த இழிநிலை மாறுவதற்கான அறிகுறி தென்படுவதாக இல்லை.

ஆனால் இன்றும் இங்கு நடப்பதென்ன? எம்மவர்கள் சுயநினைவை இழந்த நிலையில் மீண்டும் பழைய பல்லவியைப்பாடுகின்றனர். மாகாண சபைக்குள் குழப்பம், கூட்டமைப்புக்குள் கொந்தளிப்பு, பதவிக்கான போராட்டங்கள், பதவிகளைப் பயன்படுத்தி ஊழலில் ஈடுபடுகின்ற மக்கள் பிரதிநிதிகள், மக்களைப் பற்றிச் சிந்திக்காத அரசியல்வாதிகள், தறிகெட்டுத் திரிகின்ற இளைஞர்களின் அடாவடித்தனங்கள், மதுவிலும் போதைப்பொருள்களிலும் மூழ்கிக் கிடக்கும் சமுதாயத்துக்கு உதவாத பேர்வழிகள், பெண்களுக்கு அச்சமானதொரு சூழ்நிலை, கலை கலாசாரத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகள் போன்ற இவற்றைத்தான் போருக்குப் பின்னரான எமது அறுவடைகளாகக் காண முடிகின்றது.



உலகில் 11 கோடி தமிழர்கள் வாழ்கின்றனர் எனக் கூறுகின்றார்கள். இதில் தமிழ்நாட்டில் மட்டும் ஏழுகோடிப்போர் வாழ்கின்றனர். தமிழ்நாடு எமது மூதாதையரின் தொன்மை வாய்ந்த பூமியாகும். அருந்து வந்து இலங்கையில் குடியமர்ந்த நாம் எமக்கெனத் தனியான பண்பாட்டுக் கோலங்களைக் கொண்டுள்ளோம். இதைவிட வாழ்க்கை முறைகளிலும் ஈழத் தமிழர்களும், தமிழ் நாட்டுத் தமிழர்களும் வேறுபாட்டைக் கொண்டிருக்கின்றனர். ஆனால் பிளவுபட்டு நிற்பதில் மட்டுமே ஒற்றுமையைக் காண்பிக்கின்றனர். தமிழ் நாட்டின் இன்றைய அரசியல் நிலைமை எள்ளிநகையாடக் கூடிய அளவுக்கு கீழிறங்கிப் போய்விட்டது. மக்கள் பிரதி நிதிகள் எனக் கூறிக்கொள்வோர் மக்களை மதிக்காமல் தமது எண்ணம் போன்று செயற்படுகின்றனர்.

ஜனநாயகத்தை இழிவுபடுத்துகின்ற வடக்கு மாகாண்சபையில் கூட, மாகாணசபை உறுப்பினர்களின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற வடக்கு மாகாணசபையில், ஆளும் தரப்பினர் பிளவுபட்டு நிற்கின்றனர்.

### வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள்

கூட்டமைப்பினால் முதலமைச்சர் பதவியில் அமர்த்தப்பட்ட சி.வி. விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் தலைமைக்கு மதிப்புக் கொடுப்பதற்கு தயங்கி நிற்கின்றார். மாகாணசபையில் எல்லாமே தாமென்ற இறுமாப்பு அவரிடம் காணப்படுகின்றது. அவரது செயற்பாடுகளால் ஆளும்கட்சி உறுப்பினர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்துசெயற்படுகின்றனர். சரிபாதிப்போர் முதலமைச்சருக்கு ஆதரவாகவும், மீதிப்பேர் எதிராகவும் நடந்து கொள்கின்றனர். கூட்டமைப்பில் விரிசல் ஏற்பட்டமை தொடர்பாக முதலமைச்சர் சிறிதும் கவலைப்படவில்லை. தமது பதவியைக் காப்பாற்றுவதிலேயே அவர் கண்ணும் கருத்துமாகச் செயற்படுகின்றார்.

ஏகப்பட்ட பிரச்சினைகளை நாம் எதிர்கொள்கின்றோம். ஆனால் எமது பிரதிநிதிகள் விழிப்புடன் உள்ளார்களா என்று தோன்றவில்லை.

தமிழ் மக்களது பூர்வீக நிலங்கள் படிப்படியாகப் பறிபோய்க் கொண்டிருக்கின்றன.


இந்த நிலையில் கூட இவர்கள் விழித்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இப்போது விழிப்பு வராதவர்களுக்கு ஒருபோதுமே அதுவரச்சாத்தியமில்லை. தமிழரின் தலைவிதி இதுவென்றால் எவர்தான் என்ன செய்ய முடியும்?

இந்துமதி

# ஐ.நா. சபையின் மெத்தனப் போக்கு அதன்மீதான நம்பிக்கையை இழக்க வைக்கும்

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பாக இலங்கை அரசு காட்டி வரும் அக்கறையீனத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மீண்டுமொருதடவை சுட்டிக்காட்டியுள்ளார். போர்க்குற்றங்கள் தொடர்பான சர்ச்சைகள் இலங்கையில் தீவிரமாக எழுந்துள்ள நிலையில் மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்து முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கையில் போர் ஆரம்பமான காலம் முதல், போர்க் குற்றங்களும், மனித உரிமை மீறல்களும் இடம் பெற்று வந்துள்ளன. இறுதிப் போரின் போது இவை பெரிய அளவில் இடம்பெற்றுள்ளன. ஆனால் போர்க் குற்றங்கள் எவையும் இடம்பெறவில்லையென இலங்கை அரசு திரும்பத் திரும்பக் கூறி வருகின்றது. இந்த நிலையில்தான் முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போது அமைச்சர் பதவியொன்றை வகிப்பவருமான சரத்பொன்சேகா இறுதிப் போரின் போது போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாகக் கூறியுள்ளமை நாட்டில் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. முன்னாள் இராணுவத் தளபதியான ஜெகத் ஜயசூரியமீதே அவர் போர்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார். ஜெகத் ஜயசூரிய மீது வெளிநாடுகளிலும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் பொன்சேகாவின் தற்போதைய கருத்துக்கள் முக்கியத்துவமான இடத்தைப் பிடித்துள்ளன.



### போர்க் குற்றங்கள் குறித்த ஐ.நாவின் தீர்மானத்தை தட்டிக் கழிக்கும் இலங்கை அரசு

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் போர்க்குற்றங்கள் தொடர்பாக நீதியான விசாரணைகள் இடம்பெற வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளபோதிலும், இலங்கை அரசு அதைத் தட்டிக்கழித்துக் காலத்தைக் கடத்துவதிலேயே குறியாகச் செயற்பட்டு வருகின்றது. போர் வெற்றியை ஈட்டித்தந்தபடையினரைப்பாதுகாக்க வேண்டுமென அரச தலைவர் உட்பட அமைச்சர்கள் மற்றும் அரசில் அங்கம் வகிக்கின்ற முக்கியஸ்தர்கள் கூறி வருகின்றனர்.

பொறுப்புக் கூறலில் இலங்கை அரசு அசட்டையாக இருப்பதால், பன்னாட்டு விசாரணைக்கு அவசியம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கூறியுள்ளமை, நிலைமையின் தீவிரத்தை எடுத்துக் காட்டுகின்றது. இறுதிப் போர் இடம்பெற்றபோது சுமார் 40 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளனர். ஏராளமானவர்கள் அங்கவீனமடைந்து தமது வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு நிற்கின்றனர். படையினரிடம் அகப்பட்ட தமிழ்ப் பெண்கள் பாலியல் இம்சைகளுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளைக்கொடி ஏந்தியவாறு சரணடையச் சென்றவர்களும், படையினரிடம் அகப்பட்டவர்களும் ஈவு இரக்கமற்ற வகையில் கொலை செய்யப்பட்டனர். இவ்வாறெல்லாம் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதுடன், அதற்கான ஆதாரங்களும் பன்னாட்டு அளவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசு இவைகளையெல்லாம்நிராகரித்து விட்டது.

ஓர் இனம் தொடர்ந்து நீதி மறுக்கப்பட்ட நிலையில்வாழுவதென்பதுபன்னாட்டு நியமங்களுக்கு விரோதமானது. பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றமும் இதை அனுமதிப்பதில்லை.

ஆனால், இலங்கை அரசு இவற்றுக்கெல்லாம் தண்ணி காட்டிக்கொண்டிருக்கின்றது. உலகில் சுமார் 11 கோடித் தமிழர்கள்வாழ்கின்றபோதிலும், அவர்களால் ஈழத்தமிழர்களுக்கு உதவ முடியவில்லை. இன்றுவரை உதவுவதற்கு எவருமில்லாத ஏதிலிகளாகவே ஈழத் தமிழ் மக்கள் காணப்படுகின்றனர்.

### படையினரது ஆதரவை தம் பக்கம் ஈர்க்க முயலும் மகிந்த தரப்பு

போர்க்குற்ற விசாரணைகளுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்ற மகிந்த தரப்பினர், படையினரைத் தம் பக்கம்ஈர்த்துக்கொள்கின்றமுயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர். கணிசமான படையினரின் ஆதரவு மகிந்தவுக்கு உண்டு என்பதை எவருமே மறுக்க முடியாது. இதனால் படையினர் விடயத்தில் அரசு தீவிரமாகச் செயற்பட முடியாதுள்ளது. அத்துடன் போர் வெற்றியை ஈட்டித் தந்த படையினர் தண்டிக்கப்படுவதைப் பெரும்பான்மையின மக்களும் விரும்பவில்லை. இதனால் மைத்திரி அரசு இக்கட்டானதொரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ச தொடர்ந்தும் பதவியில் இருந்திருந்தால் போர்க்குற்றச்சாட்டுக்களை அவர் நிச்சயமாக எதிர்கொள்ள வேண்டி இருந்திருக்கும். நல்லவேளையாக அரச தலைவருக்கான தேர்தலில் தோல்வியைத் தழுவியதால் மகிந்ததப்பித்துக்கொண்டார். இதனை வெளிப்படுத்தும் வகையிலேயே, மின்சாரக் கதிரையில் மகிந்த அமர்வதைத் தாமே தடுத்து நிறுத்தியதாக மைத்திரி தரப்பினர் கூறி வருகின்றனர்.

### அதிகாரத்தை நிலைநாட்ட இயலாத நிலையில் ஐ.நா.

ஐ.நா. ஒரு வலுவில்லாத நிறுவனம் என்பது பல வகையிலும் நிரூபிக்கப்பட்டுவிட்டது. இலங்கைவிவகாரம்உட்படப் பல நாடுகளின் விவகாரங்களில் அது கோட்டைவிட்டு விட்டதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

வட கொரியா, ஐ.நா.வின் உத்தரவுகளை மதிக்காது அணுகுண்டுப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றது. கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து செல்லக்கூடிய ஏவுகணைப் பரிசோதனைகளிலும் அந்த நாடு ஈடுபட்டு வருகின்றது. அமெரிக்காவையும், கொரியத் தீபகற்பத்தையும் அச்சுறுத்தும் வகையிலேயே வடகொரியா இவ்வாறு நடந்து கொள்கின்றது. அதைத் கட்டுப்படுத்துவதற்குஐ.நாவாலும்முடியவில்லை .வல்லரசுநாடுகளாலும்முடியவில்லை. மிகப்பெரிய வல்லரசான அமெரிக்கா கூட வடகொரியா மீது போர் நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர்த்து வருகின்றது. மத்திய கிழக்கிலும், ஆப்கானிஸ்தானிலும்தனதுபலத்தைக்காண்பித்த அமெரிக்கா, வடகொரியாவின் விடயத்தில் வாலைச் சுருட்டிக்கொண்டிருப்பது ஆச்சரியம்தரக்கூடிய ஒருவிடயமாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் ஐ.நா போதும் போதுமென்ற அளவுக்கு விட்டுக்கொடுத்து நடந்துள்ளது. இலங்கை அரசுக்குப்போதிய கால அவகாசமும் வழங்கப்பட்டது. ஆனால் இலங்கை அரசு இவற்றையெல்லாம் அலட்சியம் செய்துவிட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், தம்மை மோசமாக நடத்திப் போர்க் குற்றம் புரிந்தவர்கள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்றே விரும்புகின்றனர். இனிமேல் இந்த நாட்டில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு இது உதவுமென்பது இவர்களின் நம்பிக்கையாகும். ஐ.நா இந்த விவகாரத்தில் இனியும் மெத்தனமாக இருப்பது அதன் மீதான தமிழ் மக்களது நம்பிக்கையை முற்றாகவே இழக்கச்செய்துவிடும்.

## ஆசிரியருக்கான கடிதம்

### பாவம் வட மாகாண வாக்காளர்கள்

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 16 பேர் உள்ளூராட்சி நிர்வாகத்தை மேம்படுத்துவது தொடர்பான செயலமர்வொன்றில் பங்குபற்ற இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு அடுத்த வாரமளவில் செல்லவுள்ளதான பத்திரிகைச் செய்தியொன்றை வாசித்த போது ஆத்திரம் மேலிடுகிறது.

வடக்கு மாகாண பொதுமக்களது, குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் இனத்தவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடித்தரும் வகையில், அவர்களது தேவைகளை நிறைவேற்றித் தரும் வகையில் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை காரணமாகவே வேகாத வெயிலிலும் எமக்கான வர்க்களிப்பு நிலையங்களுக்குச் சென்று புனிதமான ஒரு கைங்கரியத்தை மேற்கொள்கிறோம் என்ற மனத் திருப்தியுடன் ஆய்ந்தோய்ந்து பார்த்து இன்றைய வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வாக்களித்துத் தெரிவு செய்திருந்தோம்.

நாட்டின் ஏனைய மாகாண சபைகளுக்கெல்லாம் முன்னுதாரணமாகச் செயற்படப் போகிறார்கள் என்ற நம்பிக்கையில் பெருமிதமும் கொண்டிருந்தோம். ஆனால் எமது அத்தனை எதிர்பார்ப்புக்களிலும் மண்ணை வாரி இறைத்தது போன்று மாகாண முதலமைச்சர் முதல் பெரும்பாலான உறுப்பினர்களும் தத்தமது சுய இலாபநோக்குடன் செயற்பட்டு, ஒரு தரப்பினர் மீது மறுதரப்பினர் அசிங்கமாகக் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி, வட மாகாணசபை அமர்வுகளை கேலிக்குரியதாக ஆக்கினார்களே தவிர, மக்கள் நலன்சார் செயற்பாடுகளில் பாரபட்சமின்றி, சொந்த விருப்புவெறுப்புக்களைக் கருதாது விசுவாசமாகச் செயற்பட்டதாகக் கொள்ள முடியவில்லை. இதனை வடக்கு மாகாண வாக்காளப் பெருமக்கள் அனைவருமே நன்கறிவர். அந்த வகையில் கடந்த மாகாணசபைத் தேர்தலில் நாம் விட்ட தவற்றுக்குப் பிராயச்சித்தம் தேட எப்போதடா வாய்ப்புக் கிட்டும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றோம்.

இந்த நிலையில், வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் இவர்கள் நடந்துகொண்ட, நடந்துகொள்ளும் சீத்துவாரத்தைக் கண்டு கைகொட்டிச் சிரிக்கும் நிலையில், இவர்களெல்லாம் புதுடில்லியில் போய் உள்ளூராட்சி நிர்வாகத்தை மேம்படுத்துவது எப்படி என்ற விடயம் தொடர்பில் என்னதான் வெட்டிக் கிழித்துவிட்டுவரப்போகிறார்களோ என்று எண்ணும்போது சிரிப்புத் தான் வருகிறது.

வ.அரசரட்ணம், ஏழாலை

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரத்தினேஸ்வரி சரவணமுத்து

தோற்றம் 01.01.1950 | திதி: 30.09.2017 | மறைவு 25.09.2016

மறுபிறவி இருந்தால் செருப்பாக பிறக்க வேண்டும்
என் அம்மா காலில் மிதிபட அல்ல..
என்னைச் சுமந்த அவளை ஒருமுறை நான் சுமப்பதற்காக
எத்தனை சொந்தம் என் வாழ்வில் வந்தாலும் அம்மா!
உன் ஒற்றைப் பார்வையின் பந்தம் எதுவும் தந்ததில்லை.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

பிள்ளைகள்
மூத்தமகள் சிவகௌரி.

## நீங்காத நினைவலையில் ஆண்டு ஒன்று...

மலர்வு 06 . 07 . 1944



உதிர்வு 11 . 10 . 2016

### அமரர் தம்பிஜயா வேலுப்பிள்ளை

சமாதான நீதிவான் (J.P)

திதி: சிரார்த்த திதி விஜயதசமி (30.09.2017)

ஆண்டொன்று கடந்தாலும் ஆறிடுமோ
உங்கள் நினைவலைகள்
மாண்டீர் என்று சொல்ல
மனம் மறுக்குதையா
கலங்காத நெஞ்சுடனே
காலமெல்லாம் வாழ்ந்தீரே!
கலங்கவிட்டு எமையெல்லாம்
பிரிந்து சென்றதேனோ?
நீங்கள் நடந்த இடமெல்லாம்
வெறுமையாகிப் போனதையா
காலமெல்லாம் எம்முடன்
வாழ்ந்திடுவீர் என்றிருந்தோம்
காலனவன் உம்மைப் பறித்தானே
எத்தனை ஜென்மம்
எடுத்தாலும் ஆறிடுமோ எம் துயரம்
ஆறிடாத் துயரோடு
உங்கள் நினைவலைகளுடன் வாழ்கின்றோம்
என்றும் உம் நினைவுகளுடன்...

4ஆம் வட்டாரம்,
கோம்பாவில், புதுக்குடியிருப்பு,
077 740 2914

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும்
குடும்பத்தினர்.

## நெஞ்சம் விட்டகலா முதலாம் ஆண்டு


"உரிமைக்குரல்"

### அமரர் மரியாம்பிள்ளை அன்ரனி ஜெயநாதன்

(முல்லைத்தீவு மகா வித்தியாலய முன்னாள் அதிபர், ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி,
வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி அவைத் தலைவர்)



தோற்றம் 11 . 05 . 1948 | மறைவு 01 . 10 . 2016



ஓடி உருண்டது உம்மைப்பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகின்றோம் உம்மைப் பிரிந்து நிதம்
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
எம் நெஞ்சத்தில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்

மக்கள் தொண்டனாய் நீராற்றிய சேவைகள்
என்றென்றும் நினைவிருக்கும்
உண்மைகளைச் சொல்ல தயங்காத உங்கள்
துணிவு மீது என்றும் மதிப்பிருக்கும்

அன்னாரது முதலாவது ஆண்டு நினைவேந்தல் நாளை (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு அன்றைய தினம் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மணல் குடியிருப்பு, முல்லைத்தீவு.

குடும்பத்தினர்.

# ஆதி பராசக்தியின் அருள் விளங்கும் விஜயதசமி

■ மலர்விழி கனகசபை

அன்றாட வாழ்வில் சர்வமும் சக்திமயம் என்பதற்கிணங்க எல்லாம் வல்ல ஆதி பராசக்தியை வேண்டி கலைமகள், அலைமகள், மலைமகளாகப் பாவனை செய்து மகாசக்தியிடம் முறையே வீரம், செல்வம், கல்வி ஆகிய முப்பெரும் பேறுகளையும் பெற்று மனிதனாகப் பிறந்ததன் பயனை அனுபவித்திட கடைப்பிடிக்கப்படுகின்ற விரதமே நவராத்திரி விரதமா கும். நவராத்திரி விரத அனுட்டான காலத்தில் அண்ட, புவன போகங்களை எல்லாம் காத்து இரட்சித்து உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியை அடியவர்கள் ஒன்பது இரவுகள் பக்திபூர்வமாக வழிபாடு இயற்றுகின்றனர். இறுதி நாளில் விஜயதசமி எனப் பெயர்குறிப்பிடப்படும் வெற்றித்திருநாளை கொண்டாடுகின்றனர். அந்த வகையிலே இன்றையதினம் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும், கோவில்களிலும் பக்திபூர்வமான பூஜை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெறும்.

ஒன்பது தினங்களும் அம்பிகையை வெவ்வேறு வடிவங்களில் எழுந்தருளச் செய்து இந்து மதத்தவர்கள் வழிபாடு இயற்றுவர். குறிப்பாக, முதல் மூன்று நாள்களும் துர்க்கா பூசையும், அடுத்த மூன்று நாள்களும் லட்சுமி பூசையும் இறுதி மூன்று நாள்களும் சரஸ்வதி பூசையும் இடம்பெறும். இறுதி பத்தாவது நாளன்று விஜயதசமி பூசை இடம் பெறுகின்றது. அதாவது அம்பிகையானவள் மகிடா சூரனைச் சங்கரித்த பத்தாம் நாளை இந்து சமயத்தவர்கள், ஒரு சமய விழாவாக அன்றி கல்வி, கலை, பண்பாடு விழுமியங்களை வெளிக்கொணரும் ஒரு சமூக உன்னத விழாவாக கொண்டாடுவர்.

நவராத்திரி விரதத்தை கடைப்பிடிப்பதன் பயனாக சகல சௌபாக்கியங்களையும் வாழ்வில் பெற்றுக் கொள்ள முடியுமென்பது சான்றோர்கள் அருளிய உண்மை.

ஆக, ஆயிரம் இதழ்களையுடைய தாமரையில், இருகைகளிலும் தாமரைப் பூக்கள் தாங்கி அபயம், வரதம் என்ற முத்திரைகளுடன் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஆதிப்ராசத்தியின் அருளினை இன்றைய தினத்தில் அடியவர்களாக வேண்டிப் பணிவோம். நல்லவர்களாக வாழ்ந்து நன்மக்கட்பேற்றுடன் இந்த மண்ணிலே மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அனுபவித்து வாழ் வாங்கு வாழ்வோமாக.



# கேதார கௌரி விரதம்



■ க.அகலிகா

## சர்வ மங்கலங்களையும் தரும் அனுட்டானம்

கேதார கௌரி விரதம் சர்வ மங்கலங்களையும் தரும் அனுட்டானம். புரட்டாதி மாதம் சுக்கில பட்ஷ தசமி முதல் நாளில் ஆரம்பமாகி ஐப்பசி அமாவாசை தினத்துடன் நிறைவு பெறும். விரத அனுட்டானத்தின் ஆரம்ப நாளன்று விரதத்தை சங்கற்பித்து ஆரம்பிப்பது வழக்கமாக காணப்படுகிறது.

### வழிபாடு

தினமும் வீட்டில் பூஜை வழிபாடு செய்து மாலை வேளையில் விசேடமாக ஆலய தரிசனம் காண்பது விரத அனுட்டான கால வழிபாட்டு முறையாகும். இக்காலத்தில் சிறீ பஞ்சாட்சர மந்திர ஜபம், திருமுறைப்பாராயணஞ் செய்தல் வேண்டும்.

இயலாதவர்கள் இவ்விரத அனுட்டான காலத்தில் மதிய போசனஞ் செய்து இரவு வேளையில் ஆலய தரிசனம் கண்டு பின் பால் பழம் அருந்தலாம். ஏனையவர்கள் மாலைப் பூஜை வேளையின் பின் தானியம், பழம் அருந்தி விரதத்தை கடைப்பிடிக்கலாம். முடிவற்று உபவாசம் இருந்து பாறணை செய்தும் தான தர்மங்களை செய்தும் கேதார கௌரி விரதத்தை மங்கலமாக நிறைவு செய்து கொள்ளலாம்.

இவ் விரதத்தை ஆண், பெண் இருபாலாரும் கடைப்பிடிக்கின்றனர். குறிப்பாக, மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்கலமாக இருக்க வேண்டியும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் இந்த விரதத்தினை அனுட்டானம் செய்கின்றனர். விரத அனுட்டானம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு, இறுதி நாளன்று அந்த நூலைகோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடதுகையிலும் அணிந்து கொள்வர்.



### சிவ பக்தியின் அனுட்டானம்

சக்தி ரூபமான பார்வதி தேவி சிவனை நினைந்து விரதமிருந்து, வழிபட்டு அதன் பலனாக சிவபெருமானின் (இடது பக்க) பாதியுடம்பை பெற்றார் என்பது வரலாறு. சிவமும் சக்தியும் அர்த்நாரிஸ்வரராகவும், அர்த்தநாரீஸ்வரியாகவும் ஒன்றாகிய விரதமே கேதார கௌரி விரதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

'கேதாரம்' என்பது இமயமலைச் சாரலில் உள்ள ஒரு சிவதலம். இத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் சிவனை நினைந்து பார்வதி தேவியாகிய 'கௌரி' விரதத்தினை மேற்கொண்டதால் இப் பெயர்கூறல் உண்டாயிற்று. சிவனுக்குச் சமமான நிலையில் சக்தி அமையும் போது அது பராசக்தி எனப் போற்றப்படுகின்றது.

தென்நாட்டுச் சைவம் எனப் போற்றப்படும் சைவ சித்தாந்தம் கூறும் பரம்பொருள் சிவம். சிவனின் அருள் வேண்டி அனுஷ்டிக்கப்படும் விரதங்கள் பல இருந்த போதிலும் கேதார கௌரி விரதம் பலவகையிலும் முதன்மைச் சிறப்புடைய விரதமாகக் கொள்ளப்படுகின்றது. பக்தர்கள் இவ்விரதத்தினை மன ஒருமைப்பாட்டுடனும், புனிதத் தன்மையுடனும் கைக்கொள்கின்றனர். விரத அனுட்டானத்தை மேற்கொள்ளும் அடியவர்கள் என்ன அருள் வரத்தை வேண்டிக் கொள்கிறார்களோ அந்த வரங்களை அம்பாளின் வேண்டுகோளிற்கு இணங்க சிவன் மிக விரைவாகவே கொடுத்து விடுகிறார் என்பது பலரது அனுபவ உண்மையாக காணப்படுகிறது.

இதனை விட சர்வலோக மாதாவாகிய பார்வதி தேவியே இந்த நோன்பினை முதன் முதலில் அனுஷ்டித்து பரம்பொருளின் கிருபையோடு இடப் பாகத்தினைப் பெற்று அவன் அருகாகவே அமர்ந்து கொண்டார் என்பது இவ் விரதத்திற்கு கொடுக்கப்படும் தனிச்சிறப்பாகும்.

### புராண வரலாறு

கைலயங்கிரியின் சிகரத்தில் நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட சிம்மா சனத்தில் உமாதேவி சமேதராய் விளங்கும் பரம சிவன் பக்த கோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவசபையில் வீற்றிருக்கின்றார். அங்கே தேவவாத்தியங்கள் முழங்க கிருதாசி, மேனகை முதலிய தேவமாதர்கள் நாட்டியம் செய்கின்றனர். அந்த நடன ஸ்திரீகளில் சௌந்தர்யம் மிக்கவளாகிய அரம்பையானவள் அற்புதமான நடன விசேடங்களை நடித்துக்காட்டுகிறாள்.

### பிருங்கி மகரிஷியின் விகட நாட்டியம்

அப்போது அந்தரங்க பக்தராகிய 'பிருங்கி மகரிஷி' பக்தியோடு விசித்திரமான விகட நாட்டியம் ஒன்றை ஆடிக் காட்டுகிறார். பார்வதியும் அங்கே இருக்கின்றாள். தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கின்றனர். பார்வதக்குகையெங்கும் அந்தச் சிரிப்பொலி கலகல வென எதிரொலிக்கின்றது. பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கிறார். பரமசிவன் அனுக்கிரகமும் பிருங்கி மகரிஷிக்குக் கிடைக்கிறது. அதைக் கண்டு சபையிலுள்ளோர் பிருங்கி மகரிஷியை கௌரவித்துப் பாராட்டுகிறார்கள். இவ்வேளை பிரம்மா, விஷ்ணு, தெய்வேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், அட்டதிக்குப் பாலகர்களும், முனிவர்களும், பதினெண்ணாயிரம் ரிஷிகள் என்போரும் இருவரையும் மூன்று தடவை பிரதர்சனம் செய்து வணங்கிச் சென்றனர்.

### பிருங்கி மகரிஷி வண்டின் உருவம் கொள்ளல்

அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி வண்டின் உருவம் பெற்று பரமேஸ்வரனுக்கும், பார்வதி தேவிக்கும் இடையில் சென்று பரமேஸ்வரனை மட்டுமே 3 தடவைகள் வலம் வந்து பயபக்தியோடு வணங்கினார்.

பிருங்கி ரிஷியின் செய்கையைக் கண்டு கோபமுற்ற பார்வதிதேவி, பரமேஸ்வரனிடம் காரணம் கேட்க பரமேஸ்வரனும் அர்த்தபுஷ்டியான ஒரு புன்முறுவலுடன் பின்வருமாறு பதில் கூறினார். "தேவி...! பிருங்கி முனிவர் உலக இன்பத்தை நாடுபவர் அல்ல. மாறாக மோட்சத்தை நாடுபவர். மோட்சத்தை நாடும் அவர் உலக இன்பங்களை நல்கும் உன்னை வணங்காது மோட்சத்தை நல்கும் என்னை வணங்கியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே தேவி" என்றார்.

### பார்வதிதேவியின் சாபம்

இதனைக் கேட்டிருந்த லோகமாத பார்வதி தேவி, "எனது சக்தி இல்லாமல் மோட்சத்தை நாடும் உங்கள் பக்தர் பிருங்கி முனிவர் மோட்சத்தை அடைய முடியாது. இங்கிருந்து ஒரு அடி கூட எடுத்து வைத்து தனது இருப்பிடத்தை அண்ட முடியாது. அவ்வாறான சக்தியைக் கொடுக்கும் என்னையே ஏளனம் செய்தார்" என கோபமுற்றாள். 'நிற்க முடியாமல் போகக் கடவாய்' எனப் பிருங்கி முனிவருக்குச் சாபம் கொடுத்தாள். நிற்க முடியாது சக்தி அனைத்தையும் இழந்த முனிவர் தள்ளாடியவாறே நிலத்தில் சாய்ந்தார். இந்த நிலையில் "என் பக்தனைக் காப்பாற்றுதல் என் தர்மம்" எனக் கூறிய சிவப் பரம்பொருள் பிருங்கி முனிவரின் கையில் தண்டு (ஊன்றுகோல்) ஒன்றைக் கொடுத்து உதவினார். ஊன்றுகோலைப் பெற்றுக் கொண்ட முனிவர் சக்தியைப் பெற்றவராக மீண்டும் பரமேஸ்வரனை மட்டும் வணங்கி தனது ஆச்சிரமத்தை அடைந்தார்.

இதனைக் கண்ணுற்ற லோகமாதாவுக்கு மேலும் கோபம் உண்டாகியது. பிருங்கி முனிவர் மட்டுமன்றி தனது கணவரான பரமேஸ்வரனும் தன்னை அவமதித்து விட்டாரே என்ற எண்ண மேலீடு கொண்டார். ஏனையவர்கள் முன்பு என்னை அவமதித்த உங்களுடன் இனி நான் வாழப் போவதில்லை எனக் கூறியபடி கைலையை விட்டு நீங்கினார். பூலோகத்துக்கு வருகை தந்து வால்மீகி மகரிஷி சஞ்சரிக்கின்ற பூங்கா வனத்தில் உள்ள ஓர் விருட்சத்தின் அடி அமர்ந்து கொண்டார்.

### ஆதி பராசக்தி அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் பெறல்

இந்தச் சந்தர்ப்பத்திலே பார்வதி தேவியானவள் இறைவனை மீண்டும் அடைந்து ஆறுதல் அடைய விரும்பினாள். விரத அனுட்டானத்தை மேற்கொள்ள வால்மீகியின் அறிவுரையைக் கேட்டாள். அதற்கு வால்மீகி,

"தாயே..! இவ்வுலகில் இதுவரை யாரும் கடைப்பிடிக்காத விரதம் ஒன்று உள்ளது. அது 'கேதார கௌரி விரதம்' என சிறப்பிக்கப்படுகின்றது. அதனை மெய்யன்புடனும் பயபக்தியுடனும் அனுஷ்டித்தால் விரத முடிவில் பரமேஸ்வரனின் அருள் பூரணமாக கிடைக்கப் பெறுவீர்கள்" எனக் கூறினார். அதன்படியே 21 நாள்கள் அம்பிகை விரதமிருந்தாள். விரதத்தில் மகிழ்ந்து 21 ஆவது நாள் அம்பாளின் முன் தேவ கணங்கள் புடைசூழ ரிஷபவாகனத்தில் அம்பிகையின் முன் காட்சி கொடுத்த எம்பெருமான் தனது இடது பாகத்தை கொடுத்து அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் பெற்று கைலாயம் சென்றார்.

ஆக, நாமும் இவ் அரிய நோன்பினை நோற்று பரம் பொருளின் பூரண அருள் கடாட்சத்தினைப் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக.

# ‘மனித சாகசம்’

நான்கு மனிதர்கள் ஒரு நகரத்தில் இருந்து காட்டுக்கு வேட்டையாட வந்தனர். அவர்களைக் கரடியும் சிங்கமும் புலியும் குரங்கும் பிடித்து வந்து ஒரு பெரிய கூண்டில் அடைத்தன. மிருகங்கள் பிடித்து வந்த அனைவரும் சாகச தொழில் நடத்துபவர்கள். இதனை சிங்கம் அவர்களிடம் விசாரணை செய்து தெரிந்து கொண்டது.

“சிங்கராசா எங்களை விட்டு விடுங்கள் இனிமேல் இந்தப் பக்கமே வர மாட்டோம்” என்று மனிதர்கள் அழுதனர். ஆனால் சிங்கராஜா இரங்கவில்லை. அவர்களை வைத்து ‘மனித சாகசம் ’நடத்த உத்தரவிட்டார்.



காட்டின் நடுவே இருந்த வெட்டை வெளியொன்றில் பெரிய கூடாரம் ஒன்றுபோடப்பட்டது. அதில் ஒரு மனிதன் சைக்கிள் ஓட்டினான். ஒருவன் வித்தைகள் பல செய்தான். ஒருவன் தலை கீழாக நடந்தும் சாட்டையால் அடிபட்டும் குரங்கு லீலைகள் புரிந்தான். ஒருவன் கையில் விலங்குடன் சிறுத்தை போல உறுமினான். மனிதர்கள் சாகசங்களை சரியாகப் பண்ணாத போது அவர்களைக் குதிரையும் குரங்கும் ஒரு பெரிய சாட்டையால் அடித்தன. இதனைப் பார்த்த குரங்குக் குட்டிகள் சத்தமிட்டு துள்ளிக் குதித்தன. மனிதர்கள் அடிபட்டுத் துடித்தனர். பறவைகள் காட்டு மிருகங்களின் குட்டிகள் எல்லாம் கூட்டம் கூட்டமாக வந்து மனித சாகசத்தைப் பார்த்து ரசித்தன. பசுவும் காட்டெருமையும் நாயும் மனிதர்களை விடுதலை செய்ய வேண்டுமென சிங்கத்திடம் வேண்டுதல் செய்தன. சிங்கக் குட்டி அதற்கு ஆதரவு தெரிவித்தது. யானையும் அவர்களை விடுவிக்க வேண்டுமென பிளிறியது. இதனால் மனிதர்களை சிங்கம் விடுதலை செய்து நகருக்கு விரட்டியது. இந்த அனுபவம் மனிதர்களைச் சித்திக்கத் தூண்டியது.

“எம்மைப் போலவே அவையும் ஊனும் உயிரும் கொண்ட உயிரினம்தானே. அவைக்கு எமக்கிருக்கும் ஆறாம் அறிவான பகுத்தறிவு இல்லையேயன்றி மற்றைய உடல் வேதனைகள், நோய்கள், அழுகை, சிரிப்பு, கோபம், பரிவு, அன்பு போன்ற உணர்வுகள் உண்டு. நாம் அவற்றைத் துன்புறுத்தி வேலைகள் வாங்கும் போது அவை உள்ளுக்குள்ளே புழுங்கி வேதனை அடைகின்றன” என்று பலவாறு சிந்தித்து மிருகங்களை வன்முறையால் சாகசசெயல்கள் செய்விக்கும் தொழிலைச் செய்யக் கூடாதென முடிவெடுத்துக் கொண்டார்கள். எம்மைப்போல் பிற உயிர்களையும் நேசிப்போம்.


# ஒக்ரோபர் மாதம் வாசிப்பு மாதம்







- ஒக்ரோபர் மாதம் வாசிப்பு மாதமாகும்.
- வாசிப்பு ஒவ்வொரு மனிதரையும் பூரணமாக்குகிறது.
- வாசித்தல் மாணவர்களிடத்து பல்வேறு திறன்களை விருத்தி செய்கின்றது.
- சைக்கிளில் சவாரி செய்வது போல மெதுவாக வாசிக்கத் தொடங்கி படிப்படியாக வேகமான வாசிப்பில் பயணிப்போம்.
- புற சன சந்தடி இல்லாத அமைதியான இடத்தில் அமர்ந்து மௌனமாக வாசிப்போம்.
- கருத்தூன்றி வாசித்து கிரகிப்போம்.
- முதலில் எழுத்துக்களைக் கூட்டி சொற்களையும், பின்னர் சொற்களைச் சேர்த்து வாக்கியங்களையும் வாசிப்போம்.
- முதலில் மெதுவாகவும் பின்னர் தொடர்ந்து வாசிப்பின் வேகத்தை கூட்டியும் விரைவாகவும் வாசிப்போம்.
- வாசிக்கும் போது தரிப்புக் குறியீடுகளுக்கேற்ப நின்று நிதானித்து வாசிப்போம்.
- நாங்கள் வாசித்து கிரகித்தவற்றை நண்பர்களுக்கும் கூறித் தெளிவுபடுத்துவோம்.
- தினம் தினம் தொடர்ந்து வாசிப்பவனே கல்வியைப் பெற்று விரைவில் உயர்வடைகிறான்.
- எனவே நாளை பிறக்கும் ஒக்ரோபர் மாதம் முதல் திகதியன்று தினமும் பயனுள்ள ஒரு விடயத்தை வாசிக்கத் தொடங்குவோம்.
- நாள்களைத் தள்ளிப்போடாமல் நாளையே வாசிக்க ஆரம்பிப்போம்.
- வாசிப்பின் அவசியம் உணர்வோம்; வாசிப்பை நேசிப்போம்.

# பூக்களின் பெயர்களை எழுதுங்கள்





# வர்ணம் தீட்டுவோம்



# ஆய்வுப் பணிக்காக அரச பணியை உதறிய விஞ்ஞானி



**‘ராமன் விதி’** என்று அழைக்கப்பட்ட ஒலிக்கொள்கையை வழங்கி நோபல் பரிசு பெற்று உலகப்புகழை அடைந்த இந்திய விஞ்ஞானி சேர்.சி.வி. இராமன். இவர் தென்னகத்தில் பிறந்து சென்னையில் படித்து எம்.ஏ.பட்டம் பெற்றார். பின்னர் கொல்கத்தா அஞ்சல்துறையில் துணை கணக்காய்வாளர் பொறுப்பில் அமர்ந்துபணியாற்றினார். இவரின்கவனமெல்லாம்இயற்கைவிஞ்ஞானத்தின் மீது இருந்தமையால் கொல்கத்தா பல்கலைக்கழக துணை வேந்தரான சேர் அசுடோஷ் முகர்ஜியோடு தொடர்பு கொண்டு பல்வேறு ஆய்வுகளில் ஈடுபடத் தொடங்கினார். இவரது இந்த ஆர்வம் அரசவேலையைத் துறக்கக் கூட அவரை உந்தியது. அப்பொழுது முகர்ஜி அவரிடம் கணக்காய்வாளர் “அவசரப்பட்டு முடிவுக்கு வரக் கூடாது. நீர் இப்பொழுது வகிக்கும் பதவி மாநிலத்திலேயே உயர்ந்தபதவி. இதிலிருந்து மேலும் பல பதவிகளை வகிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டும். ஆய்வுத் துறையில் இப்பொழுது கிடைக்கும் சம்பளத்திலும் கால் பகுதியே கிடைக்கும். உமது எதிர்காலத்துக்கும் உத்தரவாதம் இல்லை” என்றார். ஆனால் இளைஞர் ராமனோ ஒரு நிமிடம் கூட யோசிக்காது. “என் எதிர்கால வாழ்வு பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. அறிவியல் துறையில் ஏதாவது பயனுள்ளதாக சாதிக்க முடிந்தால் போதும். அதையே பெரும்பாக்கியமாகக் கருதுவேன். வறுமையில் வாடினாலும் பரவாயில்லை. வாழ்க்கைச் சௌகரியமெல்லாம் கிடைக்கா விட்டாலும் அதற்காகக் கவலைப்படப் போவதில்லை” என்றார் உறுதியோடு. அடுத்த சில நாள்களில் சொன்னபடி அரச பதவியை உதறி விட்டு குறைந்த வருமானமே கிடைக்கும் ஆசிரியப் பணியை ஏற்றுக் கொண்டார் சி.வி.இராமன்.

கைநிறையச் சம்பளம், அடி பணிந்து சேவை செய்ய எத்தனையோ உதவியாளர்கள், உயர் அந்தஸ்தும் மதிப்பும் செல்வாக்கும் தங்குவதற்கு இலவச வீடு இன்னும் எண்ணற்ற வசதிகள். அவை அத்தனையும் உதறி விட்டு ஆசிரியர் பணியை ஏற்றுக் கொண்ட இவர் இம்முடிவை எடுத்திருக்கா விடின் **‘ஒலிக்கொள்கை’** எமக்குக் கிடைத்திருக்காது. **‘ஸ்படிகங்களின் இயற்பியல்’** என்ற தத்துவ விளக்கமும் நமக்குக் கிடைத்திருக்க முடியது.




அனைவருக்கும்
ஆயுதபூஜை
நல்வாழ்த்துக்கள்

பஸ்ஸில் உங்க பக்கத்தில் அழகான
இளம்பெண் உட்கார்ந்ததுக்காக
சந்தோசப்படாமல் ஏன் வருத்தப்படுறீங்க..



எப்படிச் சந்தோசப்பட முடியும்? வயசுப்
பொண்ணு கூச்சமில்லாம நம்ம பக்கத்தில்
உட்கார்ந்தா என்ன அர்த்தம்?
நம்மை வயசானவனா நினைக்கிறாள்னு
அர்த்தம்....

மதிப்பும் மரியாதையும்
கிடைக்காத இடத்தில்...



கௌரவமான தலை குனிவு
செல்போன்...



# காஞ்சனா 3இல் ஓவியா

ராகவா லோரன்ஸ் இயக்குநராக அவதாரம் எடுத்து தமிழில் அவர் இயக்கிய முதல் படமான 'முனி' பெரும் வரவேற்பைப் பெற்றது. வழக்கமான பேய்ப் படங்களில் இருக்கும் பண்புகளை மாற்றி, நகைச்சுவையோடு சேர்த்து இந்தப் படத்தைத் தயாரித்திருந்தார். இந்தப் படம் கொடுத்த வெற்றி ராகவா லோரன்ஸை 'காஞ்சனா', 'காஞ்சனா - 2' என வரிசையாக படங்களை இயக்க வைத்தது. இந்த மூன்று படங்களும் ரசிகர்களுக்குப் பிடித்துப்போக, எப்போது 'காஞ்சனா 3' வரும் என ஆர்வமாக இருந்தனர் அவரது ரசிகர்கள்.

இந்த நிலையில், ராகவா லாரன்ஸ், கடந்த மாதம் "காஞ்சனா -3 படத்தை நானே தயாரித்து இயக்கப் போகிறேன். விரைவில் யாரெல்லாம் இந்தப் படத்தில் பணிபுரிவர் என்ற தகவலை வெளியிடுவேன்" என்று தெரிவித்திருந்தார். இதன்படி ஓவியா, காஞ்சனா மூன்றாம் பாகம் திரைப்படத்தில் நடிக்கவுள்ளார் என்ற தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

புத்தகம் வாங்கியதும்
மூலையில் போட்டு விடாதீர்கள்
மூளையில் போட்டு
விடுங்கள்.

கோபப்பட்டு வென்று விட்டாய்
என்றால் உன் கோபம் பெரிது
என்று அர்த்தமல்ல.

அதை தாங்கிக்
கொண்டவர்களின் பொறுமை
பெரிது என்று தான் அர்த்தம்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகும். மன உறுதி மிகவும் அவசியம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும்.

**இடபம்:** தாமதித்த செயலில் புதிய திருப்பம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப்பணியில் ஈடுபடுவீர்கள். வருமானத்துடன் நிலுவைப் பணம் வசூலாகும்.

**மிதுனம்:** கடந்த காலத்தில் உழைப்புக்கான பலன் பலன் தேடி வரும். அவமதித்தவரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை படைப்பீர்கள்.

**கடகம்:** சுயலாபத்திற்காக சிலர் உங்களை புகழ்ந்து பேசுவர். முன்யோசனையுடன் நடப்பது நல்லது. தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.

**சிங்கம்:** நிதானமுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் தடையூறை முறியடிப்பது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**கன்னி:** மனதில் உற்சாகமும் செயலில் நேர்மையும் நிறைந்திருக்கும். விலகிச் சென்றவரும் விரும்பி வந்து அன்பு பாராட்டுவர். தொழிலில் இலாபம் அதிகரிக்கும்.

**துலாம்:** இஷ்ட தெய்வ அருள் வாழ்வில் துணைநிற்கும். சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனக்குழப்பம் உருவாகி சிரமம் தரலாம். நண்பரின் உதவி கிடைக்கும். தொழிலில் எதிர்பார்த்த இலக்கு எளிதாக நிறைவேறும்.

**தனுசு:** முக்கியமான செயலை பிறரை நம்பி ஒப்படைக்க வேண்டாம். நிதர்னமுடன் பேசுவது நற்பெயரைக் காப்பாற்றும். உறவினர் வகையில் உதவி உண்டு.

**மகரம்:** ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். திட்டமிட்ட பணிகளை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை முன்னேற்றம் பெறும்.

**கும்பம்:** கூடுதல் பணி மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தும். நற்பெயரை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபா ரத்தில் சராசரி இலாபம் கிடைக்கும்.

**மீனம்:** எதிர்கால நலன் கருதி பாடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். ஆதாயம் உயரும்.





## மனிதப் பண்பு

இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒருவர், ஒரு நாள் மாலை வேலை முடியும் வேளையில் இறைச்சி பதப்படுத்தும் அறைக்குள் ஏதோ வேலையாக இருந்த போது எதிர்பாராதவிதமாய் அதன் தானியங்கிக் கதவு பூட்டிக்கொண்டுவிட்டது.

உடனே பெரும் கூச்சலிட்டாலும் அவர் எழுப்பிய ஓசை வெளியே எவருக்கும் கேட்கவில்லை மேலும் பெரும்பாலானோர் வேலை முடிந்து கிளம்பிவிட்டனர். இன்னும் சிறிது நேரத்தில் குளிரில் உறைந்து இறக்கப்போகிறோம் என்று எண்ணி கவலை அடைந்தார் அவர்.

அப்போது கதவு திறக்கும் சத்தம் கேட்டது. மகிழ்ச்சியின் மேலீட்டால் வெளியே ஓடி வந்தார். தொழிற்சாலை காவலாளி நின்று கொண்டிருந்தான். சந்தோஷத்தில் அவனை கட்டித் தழுவிக்கொண்டர்.

அவனிடம் "நான் உள்ளே இருப்பது உங்களுக்கு எப்படி தெரிந்தது?" என்று கேட்டார்.

"சேர். நான் இங்க 10 வருசமா வேலை செய்றேன்...நீங்க ஒருத்தர் மட்டும்தான் என்னையும் ஒரு மனுசனா மதிச்சு காலையிலயும் மாலையிலையும் வணக்கம் சொல்வறர்.

இண்டைக்கு காலையில வணக்கம் சொன்னீங்க .. மாலையில் உங்களை சந்திக்கவில்லை. உடனே சந்தேகம் வந்திட்டுது. உள்ள வந்து ஒவ்வொரு இடமா தேடினேன்... அப்போதான் உங்கள கண்டு பிடிச்சேன் ..." என்றான்

ஒருவருக்கொருவர் மற்றவர்களை தரக்குறைவாக எண்ணாமல் பரஸ்பரம் மரியாதை செலுத்திக்கொள்வது எப்போதுமே நன்மை பயக்கும் ஒரு விஷயம்தான்.

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | | | | 2 | |
| | | 5 | 6 | 3 | | | 8 | 1 |
| | 6 | | 4 | | | | 5 | |
| | | | | 7 | | | | 3 |
| | 9 | 2 | 3 | | | 8 | 7 | |
| 5 | | | | 9 | 8 | | | |
| | 8 | | | | 3 | | 6 | |
| 3 | | 6 | 8 | 1 | 5 | | | |
| | 5 | | | | | | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. [உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 1 | 7 | 9 | 2 | 5 | 3 | 8 |
| 8 | 3 | 9 | 4 | 5 | 6 | 7 | 2 | 1 |
| 2 | 7 | 5 | 8 | 1 | 3 | 4 | 6 | 9 |
| 1 | 4 | 6 | 3 | 7 | 8 | 2 | 9 | 5 |
| 7 | 2 | 3 | 5 | 6 | 9 | 1 | 8 | 4 |
| 9 | 5 | 8 | 1 | 2 | 4 | 3 | 7 | 6 |
| 6 | 8 | 7 | 2 | 4 | 5 | 9 | 1 | 3 |
| 3 | 1 | 4 | 9 | 8 | 7 | 6 | 5 | 2 |
| 5 | 9 | 2 | 6 | 3 | 1 | 8 | 4 | 7 |

## வரலாற்றில் இன்றைய தினம் 30.09.2017

1399 - நான்காம் ஹென்றி பிரிட்டனின் அரசராக அறிவிக்கப்பட்டார்.

1860 - பிரிட்டனின் முதலாவது 'ட்ராம்' வண்டிச் சேவை பிக்கன்ஹெட், மேர்சிசைட்டில் தொடங்கப்பட்டது.

1895 - மடகஸ்கார், பிரெஞ்ச் அதிகாரத்தினுள் வந்தது.

1915 - தரையிலிருந்து எதிரி விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்திய முதல் நபரானார் சேர்பிய படைவீரர்.

1938 - செக்கோஸ்லோவாகியா சுடென்ரென்லாண்ட் பகுதியில் ஜேர்மனி நிலைகொள்ளும் மியூனிச் ஒப்பந்தத்தில் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகியன கைச்சாத்திட்டன.

1990 - கனேடியத் தலைநகர் ஒட்டாவாவில் ஆற்றிய உரையில், மனித உரிமைக்கு கனடாவின் பங்களிப்புப் பற்றி தலாய்லாமா பெருமிதம்.

1966 - பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த பீச்சுவேனோலாண்ட் தனது சுதந்திரத்தை அறிவித்தது.

2016 - யாழ். நகரில் இரவு வேளை 3 பேர் மீது வாள் வெட்டு

## நாளை

**01.10.2017**

ஞாயிற்றுக்கிழமை

**புரட்டாதி 15**

திதி: ஏகாதசி பி.இ. 01.05 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.இ. 07.28 வரை
சுபநேரம்: 09.02–10.32 வரை
ராகுகாலம்: 04.32–06.02 வரை

ஏகாதசி விரதம்

# புரட்டாதி மாத ராசிபலன்

(17.09.2017 – 17.10.2017)

**உங்களுக்கு எப்படி?**



## மீனம்

**இலாபம் மந்தநிலை**

பூமியைப்போல்பொறுமையும், ஆன்மிக நாட்டமும் உடைய நீங்கள், மறப்போம்மன்னிப்போம்என்றிருப்பீர்கள். செய்நன்றி மறவாதவர்கள். 13ஆம் திகதிவரைசெவ்வாய்6ஆம்இடத்தில் அமர்ந்திருப்பதால் உங்களை எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். அதிகாரப் பதவியில்இருப்பவர்களின்அறிமுகம் கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். சொன்ன திகதியில் பணத்தை தந்து முடித்துபழையகடனில்ஒருபகுதியை தீர்ப்பீர்கள். ஒருசொத்தைவிற்றுமறு சொத்து வாங்குவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். 22ஆம் திகதி முதல் புதன் உங்கள் ராசிக்கு சாதகமான வீடுகளில் செல்வதால் உறவினர்களால்இருந்தஅன்புத்தொல்லைகள்விலகும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

பழைய நண்பர்களில் ஒரு சிலர் பெரிய பதவியில், பெரியபொறுப்பில்,பொருளாதாரத்தில்பெரியநிலையில் இருக்க வாய்ப்பிருக்கிறது. அவர்களால் சில உதவிகள் கிடைக்கும். 9ஆம் திகதி வரை சுக்கிரன் 6இல் மறைந்திருப்பதால் வாகன விபத்துகள் ஏற்படக்கூடும். கணவன்மனைவிக்குள் கருத்து மோதல்கள் வரும். 10ஆம் திகதி முதல் சுக்கிரன் உங்கள் ராசிக்கு 7இல் அமர்ந்து உங்களைப் பார்க்கயிருப்பதால் சோர்வு, களைப்பு நீங்கி உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில், கணவன்மனைவிக்குள் இருந்து வந்த கசப்புணர்வுகள் நீங்கும். பழுதான வாகனம், மின்சார சாதனங்களை சரி செய்வீர்கள். உங்கள் ராசிக்கு8இல்குருமறைந்திருப்பதால்மற்றவர்களைநம்பிபெரிய விவகாரங்களில் ஈடுபட வேண்டாம். எதுவாக இருந்தாலும் நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது. இடைத்தரகர்களை நம்பி ஏமாறாதீர்கள். அவ்வப்போது தூக்கம் குறையும்.

நடைப்பயிற்சி, மூச்சுப் பயிற்சி செய்ய தவறாதீர்கள். கொழுப்புச் சத்துள்ள, கார உணவுகளை குறைத்துக் கொள்வது நல்லது. ராசிக்கு 7ஆம் வீட்டில் சூரியன் அமர்ந்ததால் உஷ்ணம் சம்பந்தப்பட்ட உடல் நலக் குறைவு ஏற்படும். எனவேஉணவில்கீரை,காய்கறிகளை சேர்த்துக் கொள்ளுங்கள்.

அரசியல்வாதிகளே!தொகுதிநிலவரங்களை உடனுக்குடன் மேலிடத்துக்கு கொண்டுசெல்லுங்கள்.

கன்னிப்பெண்களே!காதல்விவகாரத்தில்சிக்கிக்கொள்ளாதீர்கள். பெற்றோரின் ஆலோசனையைகேட்டுமுடிவுகள்எடுப்பதுநல்லது. மாணவ, மாணவிகளே! நுழைவுத் தேர்விற்கு இப்போதிருந்தே தயராகுங்கள். கடைசி நேரத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று அலட்சியமாக இருந்துவிடாதீர்கள். வியாபாரிகளே!வியாபாரத்தில்இலாபம் மந்தமாகஇருக்கும்.வேலையாள்களிடம் கண்டிப்புக்காட்ட வேண்டாம். பங்குதாரருடன் மனக்கசப்புவந்து நீங்கும். உத்தியோகத்தர்களே! உத்தியோகத்தில்பணிகளைமுடிப்பதில்அலட்சியம்வேண்டாம். சகஊழியர்களால்உங்கள்பெயர் கெடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். கலைத்துறையினரே! உங்களைப்பற்றியவிமர்சனங்களும், கிசுகிசு தொந்தரவுகளும்வந்து போகும். விவசாயிகளே!பக்கத்து நிலக்காரருடன் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். வரப்புச்சண்டை, வாய்க்கால் தகராறு என்று நேரத்தை வீணடிக்காதீர்கள். விளைச்சலில் கவனம் செலுத்துங்கள். சுற்றுப்புறசூழ்நிலையை உணர்ந்து செயல்பட வேண்டிய மாதமிது.





உலகின் முன்னணி ஆங்கில வல்லுனர்களிடம் இணைந்து பயிலுங்கள்.

சிறந்த கற்கை அனுபவத்தினை மாணவர்கள் பெறும் வகையில் புதிய தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தி எமது பாடத்திட்டங்கள் வடிமைக்கப்பட்டுள்ளன.

எம்மிடம் சிறுவர் மற்றும் பெரியோர்க்கான பல்வேறு பாடநெறிகள் உள்ளன.

அக்டோபர் மாதம் ஆரம்பமாகும் அடுத்த கற்கை நெறிக்காக அழையுங்கள் - 0217 521 521 (ext 6901)

பிரிட்டிஷ் கவுன்சில் | 70 ரக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.




# கண் ஒளிதரும் கடவுள்

## பார்வைக் குறைபாடுகள் பற்றிய பார்வை

கோமகன்

வெளியே உள்ள ஒளியை உணர்வதற்கு உதவும் ஒரு உறுப்பாகக் கண் உள்ளது. மனிதர்களின் கண்கள் முப்பரிமாணப் படிமத்தைக் காண உதவுகின்றன. ஐம்புலன்களில் ஒன்றான பார்த்தலுக்கு உதவுவது கண். எமது உடலில் உள்ள கண்ணின் தொழிற்பாடு எவ்வாறுள்ளது என்பதையும், அதன் தொழிற்பாடு எவ்வாறாக ஒரு நிழற்படக் கருவியோடு ஒப்பீடு செய்யப்படுகின்றது என்பதையும் பற்றி எமது கல்வியில் விஞ்ஞானப் பாடங்கள் ஊடாகவும், இயற்பியல் போன்ற உயர்தரப் பாடங்கள் ஊடாகவும் படித்திருக்கின்றோம். ஒளியின் உதவியுடன் படம் பிடிக்கப்படும் பொருள்களின் உருவம் மனதில் பதிவுசெய்யப்பட்டு மூளையால் உணரப்படுகின்றது. கண்ணில் உள்ள பல பாகங்கள் இணைந்து இதனைச் சாத்தியமாக்குகின்றன. விம்பத்தைத் தேக்கி வைத்திருப்பது விழிப்படலம் (Comea) ஆகும்.

### இழையங்கள்

கண்ணில் உள்ள கண்மணிக்குள் ஒளிக்கதிர்கள் திசைமாற்றி கண்மணிக்குப் பின்னால் உள்ள குவிவு ஆடியைச் சென்றடைகின்றன. விழித்திரை அல்லது ஒளிமின் மாற்றி (Retina) எனப்படும் பாகம் தலைகீழ் உருவத்தைப் பதிக்கின்றது. பதிக்கப்படும் இந்த உருவம் மூளைக்குள் மின் விசைகளாகச் செலுத்தப்பட்டு விருத்தி செய்யப்படுகின்றது. கண் இமைகள் கண்களின் மேற்பரப்பில் வீசப்படும் காற்றின் திசையைத் திருப்பிப் பாதுகாப்பு அளிப்பதாக ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. புலன் உணர்வு தொடர்பான விடயங்களைத் தொழிற்படுத்தும் நரம்புத் தொகுதியின் பகுதிகளை இணைத்து உணர்வுத் தொகுதி (Sensory System) என்று அழைக்கப்படுகின்றது. பார்த்தல், கேட்டல், தொட்டுணர்தல், சுவைத்தல், முகர்தல் ஆகிய ஐம்புலன்களும் உணர்வுத்தொகுதியால் உணரப்படுகின்றன. கண்ணால் பார்க்கக் கூடியவற்றை உணரக்கூடிய பகுதி ஏற்புப் புலம் (Receptive field) எனப்படும். கண்ணும் பார்வைக்குரிய புலன் உணர்வுத் தொகுதியின் முக்கியமான உறுப்பாகவே கருதப்படுகின்றது.

### குருட்டுத்தன்மை

குருட்டுத்தன்மை (Blindness) என்பது உடல் அல்லது நரம்புப் பாதிப்பினால் ஏற்படும் பார்வை உணர்வுக் குறைவு ஆகும். வடிவங்களை, எழுத்துக்களை, பார்க்கக் கூடிய ஒளியை முற்றாக உணரமுடியாத நிலையாகக் குருட்டுத்தன்மை உள்ளது. மருத்துவ ரீதியாக ஒளியுணர்வுத்தன்மை (No light Perception) என்றும் சட்டரீதியாக சட்டக் குருட்டுத் தன்மை (Legal Blindness) என்றும் குருட்டுத்தன்மை விவரிக்கப்படுகின்றது. பார்வைக் கூர்மையின் அளவு 20/200 அல்லது 6/60 இனைவிடக் குறைவாக இருத்தல் குருட்டுத் தன்மையாகக் கொள்ளப்படுகின்றது. சாதாரண பார்வை கொண்ட ஒருவர் 200 அடி (60 மீற்றர்) தொலைவில் இருந்து பார்க்கக்கூடியதை சட்டக் குருட்டுத்தன்மை கொண்டவர் 20 அடி (6 மீற்றர்) தூரத்தில் இருந்தே தெளிவாகப் பார்க்க முடியும் என்பதே இதன் விளக்கம் ஆகும். பார்வைப் புலம் (Visual Field) 180 பாகைக்குப் பதிலாக 20 பாகைக்குள் கொண்டிருக்கும் ஒருவரும் குருட்டுத் தன்மை உள்ள ஒரு மாற்றுத்திறனாளர் ஆகக் கருதப்படுகின்றார்.

கண் மருத்துவத்தில் இசுநெல்லின் கண் அட்டவ்ணை (Snellen Eye Chart) பார்வைத் திறனைப் (Visual acuity) பரிசோதிப்பதற்கு கண் பரிசோதனை பயன்படுத்தப்படுகின்றது. இது அதிக ஒப்புமையுடைய எழுத்துக்களும், எண்களும் கொண்ட அட்டவணை. ஒரு தனிமனிதன் அதிக பட்சமாக 25 அடித் தொலைவில் பார்க்க முடிகின்றது. பெரும்பாலானவர்கள் அதே பொருளை 40 அடித் தொலைவில் காண முடிகிறதெனில் பார்வைத்திறன் 25/40 ஆகும். இதன் கருத்து பெரும்பாலான மக்களால் 40 அடித் தொலைவில் தெளிவாகப் பார்க்கும் பொருள் 25 அடித் தொலைவில் இந்த மனிதரால் காணமுடிகின்றது என்பதாகும்.

### கண்புரை (Cataract)

கண்புரை (Cataract) என்பது கண் வில்லையில் (lens) ஒளி ஊடுருவுதல் தன்மையைக் குறைக்கும் ஒரு நிலை. இயல்பு நிலையில் இருந்து மாற்றமடைந்த ஒருவிதப் புரதத்தில் ஆனவை. கண்புரை என்றால் கண்ணில் திரை ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படுவ துண்டு. திரை என்பது இங்கு தோலில் ஏற்படும் சுருக்கத்தைக் குறிக்கின்றது.

வயதானவர்களில் ஏற்படும் கண்புரை ஒளிபுகாத்தன்மையுடன் ஆரம்பித்து முற்றாக ஒளிபுகா வண்ணம் ஏற்படும் சுருக்கம் ஆக உள்ளது. மார்காக்னிய கண்புரை (Margagnian Cataract) என்பது கண்வில்லையின் புறப்பகுதி (cortex) பால்போன்ற திரவமாக மாறித் தடிப்பை ஏற்படுத்துவதைக் குறிக்கின்றது. இதனால் கண்வில்லையின் உறை உடைபடலாம். சரியான முறையில் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் குளுகோமோ என்ற கண்நோய் உருவாகலாம்.

### கிட்டப் பார்வை

கிட்டப் பார்வை என்பது கண்வில்லையின் புறவளைவுப் பகுதி அதிகரிப்பதனாலும், கண்கோளம் நீட்சியுறுவதா லும் ஏற்படுகின்றது. உட்செல்லும் ஒளிக்கதிர்கள் தேவைக்கு அதிகமாகச் சிதறலடை யும் பொழுது ஒளிக்கதிர் விழித்திரைக்கு முன்னாலேயே குவிக்கப் படுகின்றது. இதனால் பிம்பம் தெளிவற்றதாக உணரப்படுகின்றது. இது கிட்டப்பார்வை எனப்படும். இந்தக் குறைபாட்டுக்குக் குழிவில்லைகள் கொண்ட மூக்குக் கண்ணாடிகள், தொடுவில்லைகள் (Contact Lenses) போன்றவற்றைப் பயன்படுத்தி நிவர்த்தி செய்யலாம். சீரொளி(Laser Light)

(24ஆம் பக்கம் பார்க்க)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
வாழ்த்துக்கள்

யாழ்.மண்ணில் தம் முன்னோர்
வழிவந்த தம் தந்தையின் வழி நிற்கும்
British Business College இன்
புதிய தலைவர்
திரு.லினேஷ் ஆனந்குமார்
அவர்களின் கல்விப்பணி சிறக்கவும்
அவர்தம் கனவுகள் நனவாகி
சேவைகள் யாவும் சிறப்புடன்
விளங்கவும் என்றென்றும்
இறையருளுடன் நற்பணிகள் தொடரவும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள்.
British Business College

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**Post of Career Guidance Counselor**

University of Jaffna will entertain applications from qualified persons for the Post of Career Guidance Counselor.

**Minimum Requirements/Qualifications:**
Graduate of a recognized University with four years' experience in the field of student affairs. (Applicant with postgraduate qualifications in the area of counseling and or experience in Career Guidance activities will be given preference)

**Salary Scale**: Rs.49,860 - 3 x 1,240 – 53,580(EB)54,820- 14×1240-72,180/- p.m

**Note:**
a. The above salary scales are fully operative w.e.f **01.01.2020** and the placement of salary applicable to the posts for the years 2017, 2018, 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No.17/2016 dated 05.12.2016.
b. The following requirements should be fulfilled for the **efficiency bar** on completion for four years of service from the date of appointment and having earned all three annual increments.
i. Obtain a postgraduate qualifications in an area related to counseling
and
ii. Obtain good record of service during the four year period.

In addition to the above salary,
1. The following allowances will be paid as the percentage of the basic salary to the financial value existed as at 31.12.2015:
i) Additional monthly allowance – 20% of the basic salary
ii) Monthly Compensatory Allowance - 20%
2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Selection By** : Interview
**Age Limit**: Not more than 45 years
(Aged limit is not applicable for the applicants in the Government Department/State Corporation and Statutory Bodies)

**Statutory benefits:**
*I. Allowance approved by the University Gants Commission*
*II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system*
*III. Gratuity payments*
*IV. Employees' Trust Fund benefits*
*V. Free Medical Services*

**Closing date**: **27.10.2017 (application should reach us on or before the given date)**

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of the University of Jaffna. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self–addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Applications for the above posts should be sent to the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

**Registrar**
University of Jaffna
Jaffna.
**29.09.2017**

## மரண அறிவித்தல்

| அன்னை மடியில் | | அம்பாளின் பாதத்தில் |
|---|---|---|
| 22 . 06 . 1988 |  | 28 . 09 . 2017 |

### திருமதி அமுதகௌரி கரன்

நயினாதீவு5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொக்குவில் மணியகாரன் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமுதகௌரி கரன் (28.09.2017) வியாழக்கிழமை அமரத்துவமடைந்தார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் கரன் (தாதிய உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புமனைவியும் அன்புமழலை அமுதகௌரியின் அன்புத்தாயாரும் சோ.குகநேசன் (ஓய்வு நிலை அதிபர்) - தர்மகுலராணி (கொக்குவில் நாமகள் ம.வி) தம்பதியரின் அன்புமகளும் வை. பாலசுப்பிரமணியம் (ஓய்வு நிலை நீதிமன்ற உத்தியோகத்தர், நாயன்மார்கட்டு) -மனோன்மணி தம்பதியரின் அன்புமருமகளும் கற்பகரூபி(கனடா) ,விமலசேகர் (அஞ்சல் அலுவலகம் நயினாதீவு) ஆகியோரின் அன்புச்சகோதரியும் மு. நற்குணசிங்கம் காலஞ்சென்றவர்களான நீலாம்பிகை, டாக்டர் சோமசேகரம், கற்பகம் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சிவசுப்பிரமணியம் சிவகாந்தன் (கனடா) ,ஜனார்த்தனி (ஆசிரியை நயினாதீவு ம.வி) ஆகியோரின் மைத்துனியும் சங்கீர்த்தனி (கனடா), ஷாயினி (கனடா) ஆகியோரின் அன்புச்சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.10.2017) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
228/9, மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
பா.கரன் (077 6569 745)
சோ.குகநேசன் (077 8247 463)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 29 . 11 . 1930 |  | 26 . 09 . 2017 |


### செல்வி. பரமேஸ்வரி சின்னத்துரை (செல்லக்கா)
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

நாவலர் வீதி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி. பரமேஸ்வரி சின்னத்துரை (செல்லக்கா) (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்கள் இறைபதமெய்தினார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை தில்லையம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திருமதி சரஸ்வதி இராமலிங்கம், திருமதி தங்கரட்ணம் பத்மநாதன் மற்றும் திரு. C.S காராளசிங்கம் (கனடா), திருமதி இராஜேஸ்வரி நடராஜா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற திரு. இராமலிங்கம், மற்றும் திரு.பத்மநாதன் (கொழும்பு), திரு.நடராஜா (அவுஸ்திரேலியா), திருமதி பாலராணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை (01.10.2017) கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 9.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 11 மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி தகனக்கிரியைகளுக்காக கல்கிசை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
V.R. சுதாகரன் (பெறாமகன்) – Bank of Ceylon (Head Office) Colombo-1
Dr. நர்மதா கஜகரன் (Australia)
தொடர்புகட்கு – 0112559594 / 0778141621




# கண்...

(23ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மூலம் குறுதிருத்தும் அறுவையும் செய்து கொள்ளலாம். சீரொளி என்பது சிறப்பான பண்புகளைக் கொண்ட ஒளியாகும். இது ஏனைய ஒளிக்கதிர்கள் போலன்றி ஒரே அலைநீளம் கொண்டவையாக இருப்பதால் அலைமுகங்கள் ஒன்றாக ஒத்தியங்கக் கூடியவை.

**வயலின் வகுப்புகள்**

விஜயதசமியை முன்னிட்டு வயலின் வகுப்புகள் பிரபல ஆசிரியரால் நல்லூர், இணுவில் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்படும். 36, செட்டித்தெரு,நல்லூர். 021 222 0076, 077 350 5466













## மரண அறிவித்தல்

### செல்லையா கனகரத்தினம்



பிறப்பு 02.02.1949 — இறப்பு 29.09.2017

தொட்டிலடி சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான செல்லையா -நாகேஸ்வரி தம்பதியரின் இளையபுதல்வன் கனகரத்தினம் நேற்று (29.09.2017) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லக்கண்டு - சிவபாக்கியம் தம்பதியரின் மூத்தமருமகனும் ஞானாம்பிகையின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் நவரத்தினம் காலஞ்சென்ற கணேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் அயூறதி, தர்மினி, ரூபன், டிலானி, கிரிகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சகிலன், புவன ஶ்ரீதரன், அகிலன் ஆகியோரின் அன்புமாமனாரும் நிகிதா, மதீஷன், கபீஷா, அஸ்மிகா, அனிஷா, ஜெனிஷா, அஸ்வின் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (29.09.2017) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

**தூரப்பார்வை**

தூரப்பார்வை என்பது விழிக் கோளம் அல்லது விழி வில்லை செம்மையாக இல்லாமையால் உருவாகின்றது. இதனைத் தூரப்பார்வை (longsightedness or hypermetropia) என்றும் கூறுவர். இந்தக் குறைபாடு உள்ளவர்க்குப் பொருளின் படிமம் விழித்திரைக்குப் பின்னால் உள்ளதொரு புள்ளியில் குவியப்பட்டு தெரியும். இதனையும் குவிவுவில்லைகள் கொண்ட மூக்குக் கண்ணாடிகள் அல்லது தொடுவில்லைகள் மூலம் சரி செய்யலாம்.

**மூப்புப்பார்வை**


மூப்புப்பார்வை அல்லது சாளேசுவரம் என்பது விழியின் அண்மைப் பார்வைக்கான குவிமைய த்தன்மை ஆற்றலானது வயது முதிர்ச்சியால் பாதிக்கப்படுவதால் ஏற்படும் குறைபாடாகும். இந்தக்குறைபாடு ஏற்படுவதற்கான முக்கிய காரணிகளாக் கண்வில்லை மீட்சித்தன்மையை இழத்தல், கண்வில்லையின் அளவு பெரிதாகிக் கடினமாதல், கண்வில்லையின் வடிவத்தை மாற்றியமைக்கும் பிசிர்த்தசை வலுவிழத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**புள்ளிக்குவியமில் குறை (Astigmatism)**

புள்ளிக்குவியமில் குறை என்பது விழி வெண்படலம் அல்லது வில்லையின் மேற்பரப்பு ஒழுங்கற்றதாகவோ அல்லது வீக்கமான துருத்தமாகவோ காணப்படுவதால் ஏற்படும் குறைபாடாகும். இந்தக் குறைபாட்டால் கண்ணின் ஒரு பகுதியில் ஒளிச்சிதறல் அதிகமாக அல்லது குறைவாக ஏற்படுகின்றது. இதனால் விம்பங்கள் சரியாகக் குவிக்கப்படுவ தில்லை. பொருளின் ஒரு பகுதியில் இருந்து வரும் ஒளிக்கதிர்கள் விழித்திரைக்கு முன்னாலும் மறு பகுதியில் இருந்து வரும் ஒளிக்கதிர்கள் விழித்தி ரைக்குப் பின்னாலும் குவிக்கப்படு கின்றன. இந்தக் குறைபாட்டினை கண்ணுக்கு முன் உருளை வில்லை வைத்துச் சரிசெய்து கொள்ளலாம். உருளைவில்லையின் புறப்பகுதியின் வளைப்பகுதி மாறுபட்டுக் காணப்படுவதால் இந்தக்குறைபாட்டைச் சரிசெய்து கொள்கின்றது.

**விழித்திரை விலகல் (Retinal detachment)**

விழித்திரை விலகல் என்பது கண்ணில் ஏற்படும்பாதிப்பாகும். விழித்திரையானது உட்சுவரில் இருந்து உரிவதால் இந்தப் பாதிப்பு ஏற்படுகின்றது. இந்தப் பாதிப்பிற்கு உடனடியாகச் சிகிச்சை செய்யப்படாவிட்



டால் பார்வையிழப்பு ஏற்படலாம். விழித்திரையில் சிறுதுளை ஏற்பட்டால் அல்லது கிழிந்தால் விழித்திரை விலக நேரிடும். இந்த இடைவெளியூடாக நீர்மம் விழித்திரைக்குக் கீழே கசிவதால் கண்சுவருடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தொடுப்பு நலிவடைந்து விழித்திரை உரிகின்றது. இதனால் விலகிய விழித்திரையில் உள்வரும் ஒளிக்கதிர்களில் இருந்து தெளிவான படத்தைப் பெறமுடியாது. நீர்மம் என்பது நீர்வடிவில் உள்ள ஒரு பொருளைக் குறிக்கின்றது

## சமஷ்டி...

னார் அரச தலைவர். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் ஒருமைப்பாட்டுக்குப் பாதகமான எந்தவொரு அரசமைப்பையும் தயாரிக்க நான் இடமளிக்கமாட்டேன். தற்போதுள்ள அரசமைப்பில் பௌத்த மதம் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு உறுப்புரையையும் நீக்குவதற்கோ, குறைப்பதற்கோ இடமளிக்கப்படமாட்டாது.

புதிய அரசமைப்புத் தொடர்பான முன்மொழிவுகளில் நாட்டை பிரிக்கும் விடயங்கள் எவையும் உள்ளடக்கப்படவில்லை. புதிய அரசமைப்புத் தொடர்பில் எந்தவொரு வரைவும் இதுவரை தயாரிக்கப்படவில்லை. அனைவரினதும் கருத்துக்கள், முன்மொழிவுகள் பெறப்பட்டு நாடாளுமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை அனைத்துத் துறைகளிலும் கலந்துரையாடி, விவாதித்து, மீளாய்வு செய்ய வாய்ப்பளிக்கப்படும்.

வடக்கு கிழக்கு மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல், நிலையான அமைதியைப் பேணுதல், மீளவும் போர் ஏற்படாதவாறு அனைத்து இனத்தவர்களிடையேயும் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புதல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அரசு முதன்மையாகக் கவனம் செலுத்திச் செயற்படும்.

மீளவும் போரொன்று ஏற்படும் என்ற கருத்து மக்கள் மத்தியில் ஏற்பட்டால் கூட நாடு இருண்ட யுகத்துக்கு தள்ளப்பட்டுவிடும். அவ்வாறான எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்படாதவாறு அனைத்து இனங்களிடமும் சகவாழ்வையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதற்கு அரசு பாடுபடுகின்றது. அந்த முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு ஒரே மேசையில் ஒன்றுகூடி கலந்துரையாடுமாறு பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மதத்தலைவர்களை வேண்டிக் கொள்கின்றேன் - என்றார். (உ-5)

## சு.கவின்...

மூத்த உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தி வருவதாலும், மேலும் சிலர் மகிந்தவுக்கு சார்பாகச் செயற்பட்டு வருவதாலும் கட்சியை முன்னோக்கி அழைத்துச் செல்வதில் அதன் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார். தனது பக்கம் நிற்கும் உறுப்பினர்களின் நிலைப்பாடு 'மதில்மேல் பூனை'போல் இருப்பதால் அதிரடி நடவடிக்கைகளை எடுக்கமுடியாத சூழ்நிலையும் அவருக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே காத்திரமான தீர்மானத்தை எடுக்கும் வகையில் இந்த இரகசிய சந்திப்பை மைத்திரி நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பின் பின்னர் இரட்டை நிலைப்பாட்டில் இருந்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் மனதில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. (வ-5)

## கேப்பாபிலவுக்...

அரச தலைவருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கும் மிகக் காட்டமான கடிதம் ஜூலை மாத இறுதியில் அனுப்பப்பட்டிருந்தது. இது தொடர்பில் விரைவில் பேச்சு நடத்தப்படும் என்று அரச தலைவரின் செயலரால் உறுதி வழங்கப்பட்டிருந்தது. நாடாளுமன்றத்தில் பாதுகாப்புத் தரப்பினருடன் சந்திப்பு நடைபெற்றிருந்தது.

இதன் பின்னரும் நிலமையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் கடந்த வாரம், தமிழ் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், "கேப்பாபிலவு விடயம் தொடர்பில் இறுதியான தீர்க்கமான முடிவு எடுப்பதற்காக, அரச தலைவருடன் விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்துவேன்" என்று கூறியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே சந்திப்புக்கான அழைப்பு அரச தலைவரால், இரா.சம்பந்தனுக்கு விடுக்கப்பட்டுள்ளது. (வ-5)

## கொலையாளிகளின்...

சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தது. குற்றவாளிகள் 7 பேரும் தலா 10 லட்சம் ரூபாவை வித்தியாவின் குடும்பத்துக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

"எனது மகளைக் கடத்திச் சென்று சீரழித்துக் கொன்றவர்களின் பணம் எமக்குத் தேவையில்லை. அவர்கள் பணம் (இழப்பீடு) தந்தாலும் நாம் அதனைப் பெற்றுக்கொள்ளப்போவதில்லை. அவர்களது பணத்தில் நான் ஒருபோதும் சாப்பிடமாட்டேன். என்ர பிள்ளை போன பிறகு இனி பணம் தந்துதான் என்ன? தராவிட்டால்தான் என்ன? இந்தத் தீர்ப்பை எதிர்கால சந்ததியினர் முன்னுதாரணமாகக் கொண்டு அவதானமாகச் செயற்படவேண்டும்" என்று சிவலோகநாதன் சரஸ்வதி மேலும் தெரிவித்தார். (வ-4,5)

## இலங்கையில்தான்...

திறப்பு விழா நேற்று அதன் தலைவர் சிவாநந்தா தலைமையில் நடைபெற்றது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு முன்பள்ளியைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு பெண்ணின் வாழ்வு அழிக்கப்பட்டிருக்கும் நிலையில், வேறொரு பெண் குற்றவாளிகளில் ஒருவரைக் காப்பாற்ற முயன்றிருக்கிறார். வித்தியா கொலை வழக்கின் தீர்ப்பில் இந்த விடயம் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளில் என்றால் இந்த நேரம் அந்த அமைச்சர் பதவியிலிருந்து துரத்தியடிக்கப்படிருப்பார். நான் வரும்போது பார்த்தேன் அந்த அமைச்சருக்கு எதிராக இங்கு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எடுத்தத ற்கெல்லாம் கடையடைப்பு நடத்தினால் பாதிக்கப் ப்படப்போவது எமது பொருளாதாரம்தான். எனவே நீங்கள் வேறு வடிவங்களில் உங்கள் எதிர்ப்ப 'ப் பதிவு செய்யவேண்டும்.

குறிப்பாக மகளிர் தமது எதிர்ப்பை ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் மூலம் வெளிப்படுத்தலாம். அதற்கு அவர்களுக்கு முழு உரிமையும் உள்ளது. எதிர்ப்பைக் காட்டுவதற்கு மகளிருக்கு எல்லா வித உரிமையும் இருக்கின்றது.

**காணி விடுவிப்பு**

தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பதில் தாமதம் ஏற்படுகின்றது. கிளிநொச்சியில் இரணைமடுவைச் சுற்றியுள்ள இராணுவத்தினர் அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றனர். அந்த இடம் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமானது. நீர்ப்பாசனத் திணைக்களம் தமக்கு அந்த இடம் தேவை என்று கூறுகின்றது.

காங்கேசன்துறை பொன்னாலை வீதியை விடுவித்தால் பருத்தித்துறையில் இருந்து பொன்னாலைக்கு விரைவாகச் செல்லும் வாய்ப்பு ஏற்படும். அந்த வீதியை விடுவிப்பதும் இழுபறி நிலையில் உள்ளது.

காங்கேசன்துறை வடமராட்சி வீதியை ஒரு மாத காலத்துக்குள் விடுவிப்பதாகக் கூறியுள்ளனர். காணி விடுவிப்பு உட்படப் பல விடயங்கள் இன்னமும் முழுமையடையவில்லை. நாம் எங்கும் சுதந்திரமாகச் செல்லக் கூடிய நிலை ஏற்படாதிருப்பது கவலை தரும் விடயமே.

எங்களால் முடிந்த அளவு அழுத்தங்களை வழங்கிக் காணிகளையும், வீடுகளையும் விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம். இங்கு என்ன நடக்கின்றது என்பதை வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் ஜெனிவாவில் விளக்கியுள்ளனர்.

**பொருத்து வீடு பொருத்தமல்ல**

50 ஆயிரம் கல் வீடுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பொருத்து வீடுகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அவற்றை விட்டு விட்டு கல் வீடுகளுக்கு விண்ணப்பியுங்கள். பொருத்து வீடு எமக்குப் பொருத்தமாக இருக்காது. அதனால் சற்றுப் பொறுமையாக இருந்து கல் வீடுகளுக்கு விண்ணப்பியுங்கள் - என்றார்

நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சிவன் அறக்கட்டளை செயலாளர் சதீஸ், யூரிப்ரென் இலங்கைக்கான முகாமையாளர் பிறேம்குமார் மற்றும் கிராம சேவையாளர்கள் பொதுமக்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (உ-ற-26)

## 33 மாத...

கத் தெரிவிக்கப்படுகின்றது. ஆட்சிமாற்றதுக்கு முன்னர், 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்தபோது, பசில் ராஜபக்ச யாழ்ப்பாணத்துக்கு இறுதியாக வந்திருந்தார். அதன் பின்னர், 33 மாத காலத்தின் பின்னர் இன்றைய தினம் அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். இன்று காலை 9 மணிக்கு நல்லூர் ஆலயத்தில் அவர் வழிபாடுகளில் ஈடுபடுவார். காலை 10.30 மணிக்கு ஊரெழுவில் பொதுமக்கள் சந்திப்பில் ஈடுபடவுள்ளார். அதன் பின்பு இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் கலந்துரையாடலில் பங்குகொள்ளவுள்ளார். மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாண ஆயரை நேரில் சென்று சந்திக்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து முஸ்லிம் சமயப் பெரியார்களையும், நல்லை ஆதீன குருமுதல்வரையும் சந்தித்துப் பேசவுள்ளார். இரவு 8 மணிக்கு ரில்கோ விடுதியில் தொழில் முயற்சியாளர்களுடன் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதேவேளை, வடக்குக்கான தனது பயணத்தை நேற்று ஆரம்பித்த பசில் ராஜபக்ச முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வழிபாட்டில் கலந்து கொண்டார். அவரை முல்லைத்தீவு மாவட்ட இலங்கை பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்கள் வரவேற்றனர். (வ-5,35)

## அமைச்சர்...

டுள்ளது. எனினும் அதற்கான எந்தவொரு உத்தியோகபூர்வ அழைப்பும் எந்தவொரு அமைப்பாலும் விடுக்கப்படவில்லை.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார். மாணவியைக் கொலை செய்த 7 பேருக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்ற சிறப்புத் தீர்ப்பாயத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கின் குற்றவாளியான சுவிஸ்குமார் எனப்படும் மகாலிங்கம் சசிகுமாரை தப்பிக்க நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உதவினார் என்று தீர்ப்பாயத்தின் தீர்ப்பில் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் சுட்டிக்காட்டியிருந்தார். (வ-5)

## யாழ்ப்பாண...

யின் இளை ஞர் அணி விடுத்துள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைப்பின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலக சிறுவர் தினம் ஒக்ரோபர் முதலாம் திகதியான நாளை கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தத் தினத்தில் வடக்கு கிழக்கில் போரில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் அதனால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கிடைக்க வலியுறுத்தி யாழ்ப்பாண மாநகரில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக மாறி மாறி ஆட்சிப் பீடமேறிய சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது கலவரங்கள் என்ற போர்வையில் திட்டமிட்டு மேற்கொண்ட இனவழிப்பு நடவடிக்கைகள் காரணமாக ஆயிரக்கணக்கான சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டும், அங்கவீனர்கள் ஆக்கப்பட்டுமுள்ளதுடன், பல்லாயிரக் கணக்கானோர் அனாதைகளாவும் ஆக்கப்பட்டுமுள்ளனர்.

இறுதிப் போர் நடைபெற்ற காலப்பகுதியில் வன்னிப் பெருநிலப்பரப்பில் கிளைமோர்த் தாக்குதல்கள் மூலம் பெருமளவு பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டனர். செஞ்சோலை சிறுவர் இல்லம் உள்பட பொது மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட அரச வான் படைத் தாக்குதல்களிலும், தரை மற்றும் கடல் வழித் தாக்குதல்களிலும் பெருமளவான சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அது மட்டுன்றி போரின் முடிவில் இராணுவத்தினரிடம் சரணடைந்த போராளிகளுடன் சென்ற அவர்களது பிள்ளைகள் நூற்றுக் கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பாலச்சந்திரன் உள்பட பல சிறுவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி கோரும் விழிப்புணர்வுப் போராட்டம் நடைபெறவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு பொது அமைப்பு சார்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவரையும் கலந்து கொண்டு வலுச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (வ-21)

## ராஜபக்சக்களை...

ராட்சி சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி 'கை' சின்னத்திலேயே களமிறங்கும் என்று மைத்திரிபால சிறிசேன முன்னதாக அறிவித்திருந்தார்.

மகிந்த தலைமையிலான பொது எதிரணியையும் இணைத்துக்கொண்டு பயணித்தாலேயே வெற்றி சாத்தியமாகும் என சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மைத்திரியிடம் சுட்டிக்காட்டியிருந்ததுடன் இருதரப்பையும் இணைக்கும் முயற்சியையும் தொடர்ந்தும் முன்னெடுத்து வந்தனர்.

இதன் ஓர் அங்கமாகவே பொதுஜன ஐக்கிய முன்னணியின் தற்போதைய பொதுச்செயலாளரான முன்னாள் தலைமை அமைச்சர் டி.எம். ஜயரட்னவை தலைவராக்கி, பொதுச்செயலாளராக சமல் ராஜபக்சவை நியமிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு சம்மதம் வெளியிட்டால் அது ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் பயணத்துக்கு சாதகமாக அமைந்துவிடும் என்றும், தனது அரசியல் பயணத்துக்கு ஏதோவொரு வகையில் அது பாதகத்தை, தடையை ஏற்படுத்திவிடும் என்றும் கருதியதாலேயே அரச தலைவர் மைத்திரி இந்த யோசனைக்கு பச்சைக்கொடி காட்டவில்லை எனத் தெரியவருகின்றது. (வ-5)

## தீர்வுக்கான...

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கை தொடர்பில் மாவை.சேனாதிராசா மேலும் தெரிவித்ததாவது:

இரு கட்சிகளும் இணைந்து ஆட்சி செய்கின்ற சூழல், பன்னாட்டுச் சமூகத்தின் ஆதரவான போக்கு என்பன ஒருங்கிணைந்து இதுவரை கிடைத்ததில்லை. இனியும் கிடைக்குமா? என்பது சந்தேகமே. இந்தச் சூழலைப் பயன்படுத்தி நாம் எமக்குரிய தீர் வைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இந்த விடயத்தில் நாம் முறித்துக் கொண்டால் தனிமைப்படுத்தப்பட்டுவிடுவோம்.

வெளிவந்திருப்பது இடைக்கால அறிக்கை மாத்திரமே. அதில் சில முக்கியமான விடயங்கள் உள்ளன. அதிகாரப் பகிர்வுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. ஒற்றையாட்சி நீக்கப்பட்டி ருக்கின்றது. வடக்கு - கிழக்கு இணைப்புக்காக நாம் முஸ்லிம் தரப்புக்களுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ள அதிகாரப் பகிர்விலிருந்து இன்னும் அதி உச்சத்தை நோக்கி நாம் செல்ல வேண்டும்.

இந்த இடைக்கால அறிக்கையை வைத்து நாம் எதிர்பார்க்கும் அரசியல்தீர்வை எட்டுவதற்கு இன்னும் கட்டியெழுப்ப வேண்டும். இறுதி அறிக்கையில் எமது வேணவாக்களை நிறைவு செய்கின்ற தீர்வு வருவதற்கு ஏனைய கட்சிகளை இணக்கம் காணச் செய்வதற்காக நாம் பேச்சு நடத்தவுள்ளோம். இந்திய அரசின் உதவியையும் பெற்றுக்கொள்வோம் - என்றார். (வ-5)

## சிப்பாய்...

போது குற்றங்களைச் செய்த இராணுவ உயர் அதிகாரிகளைத் தண்டிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை "

இவ்வாறு பீல்ட்மார்ஷல் அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கிரிபத்கொடை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவர் அங்கு வந்திருந்த செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க்குற்றங்கள் தொடர்பில் நான் முன்வைத்த கருத்துகளால் பிரச்சினைகள் எழவில்லை. போர் முடிவுக்கு வந்ததில் இருந்து இந்தப் பிரச்சினைகள் எமக்கு எதிராக எழுந்துள்ளன. இலங்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு போர்க்குற்றம் தொடர்பிலான அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகளின் தகவல்களைக் கொண்டே எமக்கு எதிராக அழுத்தங்கள் அதிகரித்தன. அந்த அறிக்கைகளில் முழுமையாக இராணுவ வீரர்கள் எவரையும் குற்றம் கூறவில்லை. இராணுவத்தில் இருந்த உயர்மட்ட அதிகாரிகள் சிலர் மீதே இந்தக் குற்றங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதன் உண்மைத் தன்மையை விசாரணைகளின் மூலமாக ஆராய்வது தவறல்ல.

போரை நடத்திய இராணுவத் தளபதி என்ற அடிப்படையில் எமது இராணுவத்தில் குற்றவாளிகள் இருந்தால் அவர்களைப் பாதுகாக்க நான் முன்வரமாட்டேன். அரசு என்ற வகையில் இது அனைத்துத் தலைவர்களையும் பாதிக்கும். பன்னாட்டு நீதிமன்றத்தின் முன்னால் சென்றுநான் ஒருபோதும் நிக்கப்போவதில்லை. அதற்குப் பதில் கூறப்போவதுமில்லை.

எனது கட்டளையின் கீழ் செயற்பட்ட எவரையும் பன்னாட்டு நீதிமன்றில் நிறுத்த நான் தயார் இல்லை. விரும்பவும் இல்லை. அதேபோல் இராணுவத்தில் ஒரு சிலர் குற்றவாளிகளாக இருந்தால் அவர்களுக்கு எதிராக இந்த நாட்டின் சட்டம் கடுமையாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்றார். (வ-31)

# பை ஸ்ரார், ஐயனார் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம். செப். 30
உரும்பிராய் திருக்குமரன் விளையட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் பை ஸ்ரார், ஐயனார் அணிகள் வெற்றிபெற்றன.
திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பை ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 7:2 என்ற கோல் கணக்கில் பை ஸ்ரார் அணி வெற்றிபெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ம-23)



# செல்சிற்றி, மனோகரா அபாரம்

யாழ்ப்பாணம். செப். 30
மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் செல்சிற்றி, மனோகரா அணிகள் வெற்றிபெற்றன.
சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வரணி நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் மனோகரா அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்லை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் 2:0 என்ற கோல் கணக்கில் செல்சிற்றி அணி வெற்றிபெற்றது.
(ம-23)

# பதுவையர் ச.ச.நிலைய விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம். செப். 30
பாசையூர் மகேந்திரபுரம் பதுவையர் சனசமூக நிலையத்தின் 35ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு சில விளையாட்டுப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.
இதன்படி, பாசையூர் பங்குக்கு உட்பட்ட 15 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டி இன்று சனிக் கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. இருபாலாருக்குமான கயிறி முத்தல் போட்டி இன்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறவுள்ளது.
(ம-23)

# டயமன்ஸ் வி.கழகம் பதற்றமற்ற வெற்றி

யாழ்ப்பாணம். செப். 30
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வதிரி டயமன்ஸ் அணி பதற்றம் இல்லாத வெற்றிபெற்றது.
மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜோசவாஸ் நகர் ஐக்கியம் அணி மோதியது. பீமாவின் ஹற்றிக் கோலின் உதவியுடன் 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது டயமன்ஸ் அணி.
(ம-108)

# இன்றைய மோதல்கள்

**கரப்பந்தாட்டத் தொடர்**
டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் அரச தலைவர் தங்கக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. திறந்த வயதுப்பிரிவு மற்றும் 22 வயதுக்குட்பட்டவர்கள் என்று இரண்டு பிரிவாக இந்த ஆட்டங்கள் இடம் பெறவுள்ளன.
20 வயதுப்பிரிவினருக்கான வரிசையில் காலை 9 மணிக்கு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும், சுழிபுரம் அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக் கழகமும், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
திறந்த வயதுப்பிரிவினருக்கான ஆட்டங்களில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும், இளவாலை மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாயன்மார்க்கட்டு பாரதி விளையாட்டுக் கழகமும் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி கே.வி.எம். விளையாட்டுக் கழகமும் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**திக்கம் ச.ச.நிலைய கால்பந்தாட்டம்**
திக்கம் சனசமூக நிலையம் தனது வைர விழாவினை முன்னிட்டு நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மன்னார் ஜோசப்வாஸ் அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் அணியும் 8 மணிக்கு யாழ்ப்பாணம் அன்ரனிஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் அணியும் மோதவுள்ளன. (ம-23-422)

# பாடும்மீன் இறுதியில்

யாழ்ப்பாணம். செப். 30
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் 'யாழின் கில்லாடி' கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் பாடும்மீன் அணியின் கீதன் முதல் கோலைப் பதிவுசெய்தார். 1:0 என்று பாடும்மீனின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாவது பாதியிலும் மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது பாடும்மீன் அணி. சிறந்த வீரராக பாடும் மீன் அணியின் ராஜ்குமார் தெரிவானார்.
(ம-23)




# ரியல் மட்ரிட் அசென்சியோ நீண்ட ஒப்பந்தம்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட், அந்த அணியின் முன்னணி வீரர் அசென்சியோ இடையே நீண்ட ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.
ரியல் மட்ரிட் கழகம் தனது வீரர்களுடன் கொண்டுள்ள ஒப்பந்தத்தை நீடித்து வருகிறது. மார்செலோ, இஸ்கோ, பென்சிமா உள்ளிட்ட வீரர்களின் ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ள நிலையில் அசென்சியோவுடனான ஒப்பந்தத்தை எதிர்வரும் 2023ஆம் ஆண்டு வரை நீடித்துள்ளது மட்ரிட். இந்த ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்தாகியுள்ளது. (ம)



கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுவரும் பன்னாட்டுத் தரத்திலான விளையாட்டுத் தொகுதியின் நீச்சல் தடாகத்துக்கான வேலைகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. (ம-23)

## மறுஅறிவித்தல் வரும் வரை கேல்ஸ், ஸ்ரோக்ஸ் இல்லை

பிரிஸ்டல் மதுபான விடுதியில் மது அருந்தி விட்டுத் தெருவில் இருவருடன் சண்டையிட்ட குற்றச்சாட்டில் ஸ்ரோக்ஸ், கேல்ஸ் இருவருக்கும் தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது இங்கிலாந்து கிரிக்கெட் சபை.

ஸ்ரோக்ஸ் மோதலில் ஈடுபடுவது போன்ற காணொலியும் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் இங்கிலாந்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணை முடிவடையும் வரை ஸ்ரோக்ஸ் தொடர்களில் கலந்துகொள்ள மாட்டார் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. ஆனால் ஆஷஸ் தொடருக்காக அறிவிக்கப்பட்டுள்ள இங்கிலாந்து அணியில் ஸ்ரோக்ஸ் இடம்பிடித்துள்ளார். அதுவும் உப தலைவராக அவர் பெயரிடப்பட்டுள்ளார். (ம)





# ஆலோசனைக் குழுவுக்கு சங்கா, மகேல அழைப்பு

இலங்கை கிரிக்கெட் சபையின் ஆலோசனைக் குழுவில் இணைய இலங்கை அணியின் முன்னாள் வீரர்கள் சங்கா, மகேல இருவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை அணி தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வந்ததை அடுத்து அணியை மீட்டெடுக்க பல்வேறு திட்டங்களை பரிசீலித்து வந்தது இலங்கை கிரிக்கெட் சபை. இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர அண்மையில் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். இந்தச் சந்திப்பில் இலங்கை அணியின் வீரர்கள், செய்தியாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இலங்கை கிரிக்கெட் அணியை மீட்டெடுக்க மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டது. அவற்றில், இலங்கை கிரிக்கெட் அணிக்கு என தனியான ஒரு ஆலோசனைக் குழுவை அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் குழுவின் தலைவராக ஹேமகா அமரசூரிய நியமிக்கப்பட்டார். இலங்கை அணியின் முன்னாள் வீரர்களான சங்கா, மகேல இருவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பை சங்கக்கார ஏற்றுள்ளார் என்று சொல்லப்படுகிறது. மகேலவின் நிலைப்பாடு தொடர்பில் இன்னும் அறிவிக்கப்படவில்லை. (ம)

# டினேஸ் சந்திமல் பொறுப்பான சதம் இலங்கை அணி சிறப்பான ஆரம்பம்

சந்திமல்லின் சதம் கைகொடுக்க பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் சிறப்பான தொடக்கம் கண்டது இலங்கை அணி.

இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. அங்கு பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.



**இலங்கையின் இன்னிங்ஸ்**

ஆரம்ப வீரர்களாக கருணாரத்ன மற்றும் சில்வா. 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சில்வா. 93 ஓட்டங்களுடன் ரண் அவுட் செய்யப்பட்டார் கருணாரத்ன. சந்திமல்லுடன் இணைந்து தாக்குப்பிடித்தார் டிக்வெல்ல. முதல் நாள் முடிவில் இலங்கை அணி
4 இலக்குகளை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சந்திமல் 60 ஓட்டங்களுடனும், டிக்வெல்ல 42 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

டிக்வெல்ல வழக்கமான பாணியில் தனது அதிரடி ஆட்டத்தைத் தொடர்ந்தார். இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 83 ஓட்டங்களுடன் ஹசன் அலியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் டிக்வெல்ல.

டில்ருவான் பெரேரா சந்திமல்லுக்கு ஓரளவு பக்கபலமாக இருந்தார். சதம் கடந்தார் சந்திமல். 33 ஓட்டங்களுடன் பெரேராவை வீழ்த்தினார் ஹரிஸ் சொகைல்.

டில்ருவான் பெரேரா ஆட்டமிழந்த பின்னர் இலங்கை சடுதியான தடுமாற்றத்தை எதிர்கொண்டது. எந்தவொரு வீரராலும் ஓரளவேனும் தாக்குப் பிடிக்க இயலவில்லை. கேரத் 4, லக்மல் 7, சண்டகன் 8, பெர்னான்டோ 0 என்று அடுத்தடுத்து ஆட்டமிழக்க 419 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை. சந்திமல் 155 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்து வீச்சில் அப்பாஸ், யாசிர் ஷா இருவரும் தலா 3 இலக்குகளையும், ஹசன் அலி 2 இலக்குகளையும், சொகைல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

**பாகிஸ்தானின் இன்னிங்ஸ்**

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு மசூட், அஸ்லாம் இருவரும் சிறந்த தொடக்கத்தை வழங்கினர். இருவரும் நிலையான ஆட்டத்தை வழங்க இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது பாகிஸ்தான். இரண்டாம் நாள் முடிவில் பாகிஸ்தான் அணி இலக்குச் சரிவில்லாமல் 64 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மசூட் 30 ஓட்டங்களுடனும், அஸ்லாம் 31 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

# வெற்றிக்கு திரும்புமா இந்தியா?

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஐந்தாவது ஒரு நாள் ஆட்டம் நாளை நடைபெறவுள்ள நிலையில், இந்த ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிக்குத் திரும்புமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.


ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. முன்னதாக முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ளது இந்திய அணி. நான்காவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. தற்போது இந்திய அணி 3:1 என்று முன்னிலையில் உள்ளது. நாளைய ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றாலும் கிண்ணம் இந்தியாவிடமே செல்லும். எனினும் சொந்த மண்ணில் வைத்து ஆஸ்திரேலியாவை வழித்துத் துடைக்கத் திட்டமிட்ட இந்திய அணிக்கு கடந்த ஆட்டத்தில் கிடைத்த தோல்வி பெரும் ஏமாற்றமே. இதனால் அந்த அணி நாளைய ஆட்டத்தில் வெற்றிக்குத் திரும்புமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்புக்கள் உள்ளன. (ம)



## முன்வரிசையில் பாண்டியா கோக்லி பகிரங்கக் கருத்து

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் பாண்டியா முன்வரிசையில் களமிறக்கப்படுவார் என்ற நம்பிக்கையை அந்த அணியின் தலைவர் கோக்லி வெளிப்படுத்தினார்.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற நான்காவது ஒருநாள் ஆட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.



"களமிறக்கப்படாத வீரர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கித்தான் ஆகவேண்டும். தொடரைக் கைப்பற்றியதன் பிற்பாடு, பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடம் பிடித்த பிற்பாடு ஏனைய வீரர்களுக்கும் வாய்ப்பொன்றை வழங்க வேண்டும் என்ற கோணத்தில் சிந்திப்பதில் தவறொன்றும் இல்லை. தோற்றாலும் நாங்கள் சிறப்பாகவே விளையாடினோம். இந்த ஆட்டத்தில் இருந்து எமக்குச் சாதகமான விடயங்களை எடுத்துக்கொண்டு அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டியதுதான். நீண்ட வெற்றியின் பின்னர் கிடைத்த இந்தத் தோல்வியும் ஒரு விதத்தில் எமக்கு சில பாடங்களை புகட்டுவதற்கு இன்றி அமையாத ஒன்றாக உள்ளது.

பாண்டியாவைப் பொறுத்தவரை அவர் வெறுமனே அடித்தாடும் ஒரு வீரர் அல்லர். அவரிடத்தில் அரிய திறமைகள் பல உள்ளன, அவர் நான்காம் நிலையில் தொடர்ந்து களமிறங்குவார்" என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

# இமாலயப் பலமுடன் தென்னாபிரிக்க அணி



பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாள் நிலவரத்தின்படி தென்னாபிரிக்க அணி இமாலயப் பலமுடன் உள்ளது.

பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக எல்கர் மற்றும் மார்க்ரம்.

இணைப்பாட்டம் மிகக் கச்சிதமாக அமைந்தது. இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களைத் தொட்டது தென்னாபிரிக்க அணி. அணி 196 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் மார்க்ரம். அவர் 97 ஓட்டங்களுடன் ரண் அவுட் முறையிலேயே ஆட்டமிழந்தார். மறுமுனையில் சதம் கடந்தார் எல்கர். எல்கர் - அம்லா கூட்டணி மற்றுமொரு இணைப்பாட்டத்தை வலுவாக நிலைநிறுத்தியது. முதல்நாள் முடிவில் தென்னாபிரிக்க அணி ஒரு இலக்கை மட்டும் இழந்து 298 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. எல்கர் 128 ஓட்டங்களுடனும், அம்லா 68 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

இருவரினதும் இணைப்பாட்டம் நேற்றும் நீடித்துச் சென்றது. சதம் கடந்தார் அம்லா. அவர் 137 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் 150 ஓட்டங்களை நிறைவுசெய்தார் எல்கர். எல்கர் 199 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அவரை வெளியேற்றினார் ரகுமான். 3 இலக்குகளை இழந்து 496 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதென அறிவித்தது தென்னாபிரிக்கா.

பதிலுக்குக் களமிறங்கியது பங்களாதேஷ் அணி. ஆரம்ப வீரர்களாக டாஸ் மற்றும் கையிஸ். 7 ஓட்டங்களுடன் கையிஸ் ஆட்டமிழந்தார். 25 ஓட்டங்களுடன் டாஸை வீழ்த்தினார் மோர்கல். 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அணித் தலைவர் ரகிம். நாள் முடிவில் பங்களாதேஷ் அணி 3 இலக்குகளை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கக்கியூ 28 ஓட்டங்களுடனும், இக்பால் 22 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

# லக்கிஸ்ரார் வென்றது

வவுனியா மாவட்ட கால்பந்து சங்கம் நடத்தும் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் லக்கிஸ்ரார் அணி வெற்றி பெற்றது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சண் சைய்ன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrance-lk.org
021 222 8093 61.கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## நுழைவாயில் திறப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது

இன்று 30.09.2017 நடைபெற இருந்த யாழ்/வேலணை சரஸ்வதி வித்தியாலய நுழைவாயில் திறப்பு விழா தவிர்க்கமுடியாத சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

பாடசாலை சமூகம்
யாழ்/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்



### தம்பையா இராஜரத்தினம்

(ஓய்வுநிலை சிரேஷ்ட மருத்துவ ஆய்வுகூட நுண்கலைஞர் M.L.T)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இராஜரத்தினம் 28.09.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மங்கையர்க்கரசி தம்பதிகளின் அன்பு மருமகனும், உத்தரகோசமங்கையின் அன்புக் கணவரும், ஜனார்த்தனன், அனுரதன், சிவாஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம்,பேராயிரம்பிள்ளை, சிவரத்தினம் மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு காலை 9 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

60,புதுவீதி,
அத்தியடி,யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 9473

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.
SCIENCE Ocean
புதிய பிரிவுகள் ஆரம்பம்– 02.10.2017 முதல்
CHEMISTRY K.Subeesan — Repeat / 2018 A/L / 2019 A/L — ஒட்சியேற்றம் தாழ்த்தல் / இரசாயன சமநிலை / இரசாயன கணிப்புகள்
PHYSICS R.Raakulan (English & Tamil Medium) — Repeat / 2018 A/L / 2019 A/L — பொறியியல் / புலங்கள் / பொறியியல் & அலைகளும் அதிர்வுகளும்
077 430 7829

காணி விற்பனைக்கு
சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பு, கச்சாய் வீதியில் 1ஆம் மைல் அண்மையில் தென்னங்காணி (நிலப்பரப்பு 19, குளி 11.36) J/301 கிராம அலுவலர் பிரிவில் விற்பனைக்கும், கட்டைப்பறிச்சான், கொடிகாமம் J/326 கிராம அலுவலர்பிரிவில் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு அருகில் தென்னங்காணி நிலப்பரப்பு 05 உம் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0777 22 305

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்

**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

**Note:** (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)
ரகசியம் பாதுகாக்கப்படும்

**ரெங்கசாமி காளியம்மா**
மாத்தளை வீதி, கண்டி.
077 327 2302/ 076 466 4153/ 075 509 5887

**அபிஷா**
**தனியார் வைத்தியசாலை**

**வவுனியாவில் புதிய ஆரம்பம்**

**நவீன மகப்பேற்று சிகிச்சை பிரிவு**



- நிமிடத்திற்கு நிமிடம் குழந்தை துடிப்பையும் தாயின் நோயியல் நிலையையும் கணிக்கக் கூடிய நவீன CTG Machine இணைக்கப்பட்ட வசதி.
- குளிரூட்டப்பட்ட DISH TV இணைக்கப்பட்ட அறைகள் உண்டு. (குறைந்த கட்டண சாதாரண அறைகளும் உண்டு)
- உறவினர்களுடன் ஒன்றாக இருந்து மகப்பேற்றை பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி.
- அவசர தேவைக்கு நவீன சத்திர சிகிச்சை கூடம் இணைக்கப்பட்டது.

வயோதிபர்களுக்கான வைத்திய சேவை



வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருக்கும் பொழுது பராமரிப்பதற்கான விசேட தாதிய சேவைகள் வழங்கப்படும்.

**தொடர்பு: 077 209 3213**

- குடலிறக்க சத்திர சிகிச்சை
- கர்ப்பப்பை அகற்றல் சத்திர சிகிச்சை
- பெண் நோயியல் சத்திர சிகிச்சை
- மூல வருத்தத்திற்கான சத்திர சிகிச்சை
- கேர்ணியா சத்திர சிகிச்சை
- அப்பண்டி சைற்றிஸ் சத்திர சிகிச்சை
- தைறோயிட் சத்திர சிகிச்சை
- வறிகோஸ் வெயின் சத்திர சிகிச்சை
- மார்பக கட்டி சத்திர சிகிச்சை
- வயிற்றுக் கொழுப்பு அகற்றல் சத்திர சிகிச்சை
- எலும்பு முறிவு சத்திர சிகிச்சை
- தொண்டை, மூக்கு, காது சத்திர சிகிச்சை

அக்ரஹாரா மற்றும் ஏனைய இன்சூரன்ஸ் உரித்துடையவர்களுக்கு உரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

**அபிஷா தனியார் வைத்தியசாலை**
Health Ministry Regi No: PHSRC/PH/116
No.24A, கற்குழி - வவுனியா. T.P:024-2221474 / 077-2093213

**ஸ்ரீ அம்பாள் மோட்டார்**
*SRI AMBAAL MOTORS*
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் விற்பனை நபர்
BAJAJ

Spare Parts,
Helmets, Tyres, Batteries
& Other Accessories





Bajaj அசல் உதிரிப்பாகங்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படுகிறது.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**57,1ST Cross Street,Vavuniya**
**024 222 8242/ 078 931 2552**

**வீட்டில் இருந்தவாறே**
**இணையத்தளம் மூலம் மாதாந்தம்**
**25,000 ரூபாய்க்கு மேல்**
**சம்பாதித்திடுங்கள்**



- முதல் வகுப்பில் கட்டணம் செலுத்ததேவையில்லை
- கற்கைநெறியின் பின் வருமானம் பெறப்படவில்லையாயின் கட்டணம் மீளளிக்கப்படும். (Conditions Apply)
- PYRAMID, காப்புறுதி, ஆட்களை இணைப்பதன் மூலம் வருமானம் போன்ற எந்த முறையும் கிடையாது.
- கனினி அறிவு அத்தியாவசியம் இல்லை.
- பகுதி நேரமாக சம்பாதிக்க முடியும்.

**யாருக்காக?**
பல்கலைக்கழக மாணவர்கள்
பணிபுரிபவர்கள்
பாடசாலை விலகிய மாணவர்கள்
இல்லத்தரசிகள்
மற்றும் ஆர்வம் உள்ள அனைவரும்

**தொடர்புகளுக்கு:-**
**0775197574**

| Tecmode(Pvt)Ltd | British Skills Academy | Sun British College |
|---|---|---|
| No:179A, Station Road, Vairavapuliyankulam, Vavuniya. | No:15,A-9 Road, Ananthapuram, Kilinochchi. | No:407, Stanly Road, Ariyakulam, Jaffna. |

**றோயல்**
**மெடிக்கல் சென்ரர்**

யாழ். போதனா வைத்தியசாலை பழைய OPD முன்பாக விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை பெற அழையுங்கள்.

**றோயல் வைத்திய ஆலோசனைகள் ...**



- காது, மூக்கு தொண்டை [ENT] சத்திரசிகிச்சை நிபுணர்
- நீரிழிவு (சலரோகம்) கோமோர்ன்ஸ் வைத்தியநிபுணர்
- சத்திரசிகிச்சை நிபுணர்
- மூட்டுவாத வைத்திய நிபுணர்
- தோல் வைத்திய நிபுணர்
- பொது வைத்திய நிபுணர்
- குழந்தை வைத்திய நிபுணர்
- மகப்பேற்று வைத்திய நிபுணர்
- நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
- சிறுநீரக வைத்திய நிபுணர்
- மார்புநோய் வைத்திய நிபுணர்
- இதய வைத்திய நிபுணர்
- பிளாஸ்ரிக் [Plastic] சத்திரசிகிச்சை நிபுணர்
- பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர்
- பல், முக சீராக்கல் வைத்திய நிபுணர்
- பல், தாடை சீராக்கல் சத்திரசிகிச்சை நிபுணர்
- பற்சிகிச்சை நிபுணர்

**தொடர்புகளுக்கு...**
021 720 1587, 021 320 2300, 021 221 3668, 077 045 7976
royalmedicalcentre458@gmail.com
**458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**


கரிகணனின்
விஜயதசமி
நல்வாழ்த்துக்கள்
கலண்டர், டயரிகள்
2018
60 இற்கும் மேற்பட்ட படக் கலண்டர்கள்
தின நாட்காட்டிக் கலண்டர்
டெஸ்க் கலண்டர்
வோல் கலண்டர்
நம்பர்சீற் கலண்டர்
பஞ்சாங்கக் கலண்டர்
போட்டோக் கலண்டர்
மனேச்மென்ற் டயறி
எக்சிகியூட்டிவ் டயறி
ஓவியா
கரிகணன்
டெஸ்க் கலண்டர்கள்
குறைந்த எண்ணிக்கையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
JANUARY
2018
முதற்கட்டப் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்
Offset | Digital | Screen | Design
இல.681, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
+94 21 222 2717 | 8


அண்ணா
தொழிலகம்
ESTD 1956
ANNA
JEEVAKARAM
அண்ணா நிறுவனத்தின் புதியதோர்
உற்பத்தி அண்ணா நூடில்ஸ்
உடனடித் தயாரிப்பு உண்ணச்
சுவையான உணவு அண்ணா உற்பத்தி
விற்பனை நிலையங்கள் எல்லா இடமும்
பெற்றுக்கொள்ளலாம்.
அண்ணா மல்லிக் கோப்பி
உலகத் தரம் வாய்ந்த
பொதிகளில் உங்கள்
வசதிக்கேற்ப எமது
விற்பனை முகவர்களிடம்
இருந்து
பெற்றுக்கொள்ளலாம்.
ANNA
Spiced
Coffee
SRI LANKA'S BEST QUALITY COFFEE POWDER
ANNA INTERNATIONAL (PVT) LTD.
214 /5,Messenger Street, Colombo - 12.
+ 941 124 36063
துரை வீதி, இனுவில்.
021 224 1565


THANIKA ACADEMY OF FINE ARTS
Thanika
விஜயதசமியை முன்னிட்டு புதிய
வகுப்புக்கள் ஆரம்பம் - 30.09.2017
பரத நாட்டியம், கர்நாடகசங்கீதம், சித்திரம், ஓர்கன் (Organ) ஆகிய நுண்கலைகளுக்கான வகுப்புக்கள்(வடஇலங்கை சங்கீத சபைபரீட்சைக்கு அமைவாக) தலைசிறந்த நுண்கலை ஆசான்களால் கற்பிக்கப்படுகின்றது. மற்றும் தரம் 1 - 5 வரையான அனைத்து வகுப்புக்களும், சிறுவர்களுக்கான சிங்களம், ஆங்கில வகுப்புக்களும் குழு வகுப்புக்களாக சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கபடுகின்றது. மற்றும் Makeup, Icing Class போன்ற வகுப்புக்களும் ஆரம்பிக்கப் படவுள்ளது.
* இந்தியாவில் பயிற்சி பெற்ற பிரபல ஆசிரியையினால் யோகா வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
தணிகை மஹால்
151/1, பலாலி வீதி, திருநெல்வேலி.
077 762 4475


எங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்துக்கும்,
மகிழ்ச்சிக்கும் காரணம்
V.S.P நல்லெண்ணெய்
தாயின் அன்பைப் போன்று
நம்பிக்கையானது VSP நல்லெண்ணெய்
மக்களின் மனதில் இடம்பிடித்து இலங்கையில் 47 வருடங்களாக
அதே சுவையிலும் தரத்திலும் வெற்றிநடைபோட்டுக்கொண்டிருக்கிறது
V.S.P நல்லெண்ணெய்
முக்கிய அறிவித்தல்
பரிமளா ஸ்ரோர்ஸ் V.S.P நல்லெண்ணெய் போலிகளைக்
கண்டு ஏமாறாமல், V.S.P நல்லெண்ணெய் வாங்கும்போது
தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும் பரிமளா ஸ்ரோர்ஸ்
26/A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியை பார்த்து வாங்கவும்
அன்பான வாடிக்கையாளர்களே உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பினும்
எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
021 222 9165, 021 222 4135
Prepared under
Hygienic method Specially For
physicians and domestic purposes
750ml
IMPROVED FORMULA PURITY GUARANTEED
V.S.P
SPECIAL LUNCH OIL
Special
V.S.P.
Gingelly Oil
சுகாதார முறையில் உணவுக்கும்
வைத்தியத்துக்கும்
விசேடமாக தயாரிக்கப்பட்டது
வி.எஸ்.பி. நல்லெண்ணெய்
பரிமளா ஸ்ரோர்ஸ்
R/No.: 11505


Vayuputhra Phone Shop
வாயுபுத்ரா போன் சொப்
T.P: 077 36 44 246 / 077 8595 151
No.364, Hospital Road, Jaffna.
அனைத்து
விதமான
போன் விற்பனை
மற்றும் Repairs
வாயுபுத்ரா
புக்கிங் சென்றர்
அதிசொகுசு பயணிகள்
போக்குவரத்துச் சேவை
யாழ் → 077 8595 151
கொழும்பு → 077 8591 555
Hotline
077 8591 943
சகல விதமான பேருந்துகளுக்கும்
ஆசனப் பதிவுகளைமேற்கொள்ள முடியும்.
யாழ் ⇄ கொழும்பு
(தினமும்)
ஆசனப் பதிவகம்
ஆசன பதிவுகளுக்கும் மேலதிக
தொடர்புகளுக்கும்
இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 077 36 44 246 / 077 8595 151

# அருள் தருவாய் அம்பிகையே

மகிடாசுரனை மாய்த்தாய் அகிலத்தைக் காத்தாய்
சுரக்கும் அருளைச் சொரிந்தாய் உரக்கவே
கூவி அழைக்கின்றேன் ஆதி பராசக்தியே ஆனந்த வாணியாய்
தாவித் தகர்ப்பாய் தடை....!



அடிமைத் தனம் அகற்ற நலமாய்க்
குடிமை உயர்ந்து கொழிக்க விடிவினை
நாடி விளைக்க அருள் முகம் சூடி
கூடி மகிழ்ந்து தருவாய் சீர் உரை.....!

தாக்கும் வறுமையைத் தள்ளி மிதித்திடுக
பூக்கும் இனிமை புகழ்த்தமிழைக் காக்கும்
உணர்வெனும் தீபம் உளத்துள் ஒளிர்வாய் தந்திட
மணம்பெறும் வாழ்வு மலர்ந்து......!!

தமிழ்நம்பி








## நொதேண் சென்றல் வைத்தியசாலை

### உலகத்தரம் வாய்ந்த எலும்பியல் சத்திர. சிகிச்சைப்பிரிவு

**நீங்கள் மூட்டுக்களில் நோவு, இறுக்கம், வீக்கம் போன்ற உபாதைகளால் அவதிப்படுகிறீர்களா?**

**தகுந்த வைத்திய ஆலோசனைகளின் பின்னர் காலதாமதமின்றி உங்களுக்கு ஏற்ற நேரத்தில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும்.**

**உலகத்தரம் வாய்ந்த எலும்பியல் சத்திர சிகிச்சைகள் உங்கள் காலடியில்!**

- நொதேண் சென்றல் வைத்தியசாலையில் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய எலும்பியல் சத்திர சிகிச்சைக்கூடங்கள்
- அனைத்து வகையான எலும்பியல் பிரச்சனைகளுக்குமான ஆலோசனைகளும் சிகிச்சைகளும்.




- *Total Knee replacement (TKR)*
- *Total Hip replacement (THR)*
- *Open reduction internal fixation (ORIF- plates and screws)*
- *Dynamic hip screw fixation (DHS)*
- *Proximal femoral nailing (PFN)*
- *External fixation*
- *Austin moor prosthesis of hip (AMH)*
- *Anterior cervical decompression and fusion (ACDF)*
- *Lumbar microdectomy and screw fixation*
- *L4-L5 microdissectomy*
- *Intramedullary nailing*
- *Arthroscopy*

### நரம்பியல் சிகிச்சைப்பிரிவு

- பாரிசவாதம், பார்க்கின்சன் நோய், தலைவலி, நித்திரைக் கோளாறுகள், வலிப்பு நோய், கை,கால் மற்றும் இடுப்பு வலி, விறைப்பு போன்ற அனைத்து நரம்பியல் உபாதைகளுக்கும் வடக்கின் முன்னணி விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனை மற்றும் சிகிச்சைகள்
- காலதாமதமின்றி நரம்பியல் சத்திர சிகிச்சைகளையும் மேற்கொள்ளமுடியும்
- அனைத்து நோய்களையும் துல்லியமாகக் கண்டறியும் தொழில்நுட்பங்கள்
  - MRI and CT SCAN
  - Electroencephalogram (EEG)
  - Sleep lab
  - Electromyography (EMG)
  - Nerve Conduction Studies (NCS)




### இரத்த சுத்திகரிப்புச் சேவை (Dialysis)

**நீங்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?**
**இரத்த சுத்திகரிப்புச் சேவையை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கிறீர்களா?**
**கவலை வேண்டாம்**

நொதேர்ன் சென்ட்ரல் வைத்தியசாலை, கொழும்பு வெஸ்டேர்ன் வைத்தியசாலையுடன் இணைந்து இரத்த சுத்திகரிப்புச் சேவையை யாழ் மாவட்டத்திலேயே, குறைந்த செலவு, சிறந்த தரம், மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன் நடாத்தி வருகிறது.
உங்கள் வசதிகளுக்கேற்ப முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்.

**Northern Central Hospital**
**342, Palaly Road, Thirunelvely, Jaffna.**
**T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263 Fax: 021 221 6677**
**e-mail:nchjaffna@gmail.com Website: www.nchjaffna.com**